# கிறிஸ்தவம்

# தரம்

# 11

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு **www.edupub.gov.lk** வலைதளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2015
இரண்டாம் பதிப்பு - 2016
மூன்றாம் பதிப்பு - 2018
நான்காம் பதிப்பு - 2019

*முழுப் பதிப்புரிமையுடையது.*

ISBN 978-955-25-0300-9

*இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,*
*நிம்தரா பிரின்டஸ் கம்பனி*
*இல்: 30/1, பன்சல வீதி, பட்டிவில கோனவல, களனி*
*அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.*

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

**கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி**


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்திறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாட நூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

| | | |
|---|---|---|
| **கண்காணிப்பும் மேற்பார்வையும்** | : | **டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **வழிகாட்டல்** | : | **டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி)<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **இணைப்பாக்கம்** | : | **ஆர். டீ. விஜேவிக்ரம**<br>பிரதி ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| | : | **அ. ஞானேஸ்வரன்**<br>அபிவிருத்தி உதவியாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **ஆலோசனை** | : | **அருட்பணி. டப்ளிவ். பீ.எபனேசர் ஜோசப்**<br>பொது செயலாளர்<br>தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு. |
| **பதிப்பாசிரியர் குழு** | : | **அருட்பணி. சி. டப்ளிவ். சி. பால்ராஜ்**<br>அதிபர்<br>பரி. தோமஸ் கல்லூரி, பண்டாரவளை. |
| | : | **அருட்பணி. ஜெயநாத் பண்டித ரத்ன**<br>கிறிஸ்தவ கல்வி மன்றம்<br>தேசிய கிறிஸ்தவ மன்றம்<br>கொழும்பு. |
| | : | **அருட்பணி. மிகிரி டி சில்வா சல்காது**<br>செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம்<br>தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு. |
| **எழுத்தாளர் குழு** | : | **அருட்பணி. எஸ். பாலசுந்தரம்**<br>போதகர்<br>போராலய கல்வி மன்றம்<br>கொழும்பு. |

: **டி. குளோரி எப்சிபா**
ஆசிரியர்
கம்பளை இந்து கல்லூரி, கம்பளை.

: **என். பி. செல்வநிதி பெரேரா**
ஆசிரியர் (ஓய்வு பெற்ற)

: **நிலந்தி தீபா டி சில்வா**
ஆசிரியர்
மெதடிஸ்த உயர் கல்லூரி
புவக் அரம்ப, மொரட்டுவ.

: **எம். ரதீகா சமந்தி மென்டிஸ்**
ஆசிரியர்
தூய தோமையர் கல்லூரி
கல்கிசை.

: **அருட்பணி.ஜெ.சி.எஸ். ரோகித டி சில்வா**
ஆசிரியர்
வெஸ்லி கல்லூரி, கொழும்பு.

**மொழிப் பதிப்பாசிரியர்** : **ச. அற்புதரூபன்**
ஆசிரியர்
கொ/குமர உதயம் தமிழ் வித்தியாலயம்
கிருலப்பனை

**சரவை பார்ப்பு** : **க. மகாவலிராயன்**
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி அமைச்சு
இசுருபாய.

**கணினி வடிவமைப்பு** : **நாகரட்ணம் சந்திரப்பிரியா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | யூத சமூக நோக்கு | 1 |
| 2. | மெசியாவில் நிறைவான வாழ்வு | 4 |
| 3. | நல்லாயர் | 8 |
| 4. | துன்புறும் பணியாளர் | 13 |
| 5. | அன்பு செலுத்தி வாழ்வோம் | 18 |
| 6. | சமாதானத்துக்கு அர்ப்பணிப்போம் | 22 |
| 7. | மன்னிப்பை அனுபவத்தில் காண்போம் | 27 |
| 8. | ஒருமைப்பாட்டுடன் வாழ்வோம் | 32 |
| 9. | எதிர்நோக்கும் நிலை வாழ்வும் | 37 |
| 10. | ஆதிக்கிறிஸ்தவ சபையின் முன்மாதிரி | 42 |
| 11. | பலன் தரும் பணி | 49 |
| 12. | வாழ்வின் மாற்றம் | 54 |
| 13. | கூட்டுத் தலைமைத்துவத்தின் வெற்றி | 60 |
| 14. | தைரியத்துடனான பணி | 69 |
| 15. | சவால்களின் மத்தியில் பணி | 77 |
| 16. | சான்றினூடாக தைரியப் பணி | 82 |
| 17. | நான் இயேசுவுக்கு உரியவன் | 87 |
| 18. | நாம் இயேசுவுக்கு உரியவர்கள் | 92 |
| 19. | சக வாழ்வு வாழ்வோம் | 97 |
| 20. | தூயாவியின் வழிகாட்டலை பெறுவோம் | 100 |
| 21. | வறுமையின் சவாலை வெற்றிக்கொள்வோம் | 106 |
| 22. | ஒடுக்கப்பட்டோரை மீட்போம் | 112 |
| 23. | சமூக நீதி | 117 |
| 24. | தூயவாழ்வை நோக்கி | 121 |
| 25. | புத்தெழுச்சியின் உதயம் | 124 |

# 1 யூத சமூக நோக்கு

**இறை அழைப்பின் மூலம் ஆபிரகாமின் தலைமைத்துவத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இஸ்ரயேல் இனம் பின்னர் பத்துக்கட்டளைகளின் அடிப்படையில் ஒரு சமூகமாக செயற்பட்ட விதம் தொடர்பான கற்றல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**தொடக்க நூல் 12:2-3, 13:14-17, 15:5, விடுதலைப்பயணம் 20:1-17**

## ஆபிரகாமின் அழைப்பு

கி.மு. 19 ம் நூற்றாண்டில் பாபிலோனியாவிலிருந்து செழிப்பு நிறைந்த கானான் தேசம் நோக்கி மக்கள் குழுவினர் கூட்டம் கூட்டமாக இடம்பெயர்ந்தனர். ஆனாலும் ஆபிரகாமின் (ஆபிராம்) குழுவினரின் இடப்பெயர்வு உலக தேவை காரணமாக அன்றி, இறைவனின் உறுதியான நோக்கத்தை நிறைவேற்றுமுகமாக இடம்பெற்றது. ஆரான் தேசத்தில் வாழ்ந்த ஆபிரகாமையும் அவனது குடும்பத்தையும் ஆண்டவர் அழைத்தார். அதன் விளைவாக அவனது தாய்நாடு, தந்தையின் வீடு, உறவினர், உடைமைகள் அனைத்தையும் விட்டு ஆபிரகாம் பயணத்தை ஆரம்பித்தார்.

## ஆபிரகாமின் நம்பிக்கை

ஆபிரகாம் இறை அழைப்புக்கு காட்டிய மாறுத்தரம் அவருக்குள் ஒரே கடவுள் குறித்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. அவருக்குரிய அனைத்தையும் விட்டு விலகி, இறைவனை மட்டும் வழிபட்டு வாழ வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டார். இதிலிருந்து வெளிப்படும் இரு கருத்துக்கள் :

1. யூத சமூகமானது ஒரே கடவுள் கொள்கையில் கட்டியெழுப்பப்பட்ட சமூகம்
2. அதே போன்று அந்த சமூகத்தின் ஆரம்ப வரலாறு, ஆபிரகாமின் இறையழைப்போடு தொடர்புபட்டுக் காணப்படுகிறது

## ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை

இறைவன் ஆபிரகாமுடன் ஆழமான உறவை ஏற்படுத்தினார். அவரது அழைப்பின் அடுத்த படிமுறை இறைவன் ஆபிரகாமுடன் ஏற்படுத்திய உடன்படிக் கையாகும். இந்த உடன்படிக்கையில் ஆபிரகாமும் அவரது வழிமரபினரும் இறை நம்பிக்கையுடனும் கீழ்ப்படிவுடனும் வாழ வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இறைவனுக்கும் அவரது வழிமரபினருக்கும் இறையாசி வழங்கும் உடன்படிக்கையாக இது அமைந்தது.

இலவச விநியோகத்திற்காக

## ஆபிரகாமுக்கு வழங்கப்பட்ட மூன்று வாக்குறுதிகள்

### (I) பெரிய இனத்தின் தந்தையாக நியமிக்கப்படல் (தொடக்க நூல் 12:2, 13:16, 15:5)

ஆபிரகாம் தொண்ணூற்று ஒன்பது வயதாகியும் பிள்ளை இல்லாமல் இருந்தார். இறைவன் அவரிடம் 'பூவுலகின் மண்ணைப் போலவும்', 'விண்மீன்கள்' போன்றும் எண்ணமுடியாத அளவு வழிமரபினரை வழங்குவதாக ஆபிரகாமுக்கு வாக்கு அளித்தார். உன் பெயர் ஆபிராம் அன்று; 'ஆபிரகாம்' என்று அழைக்கப்படும் என்று கூறினார். இதன் பொருளானது 'இனத்தின் தந்தை' என்பதாகும்.

### (II) நாட்டின் உரிமை பெறல் (தொடக்க நூல் 12:7, 13:15, 17:8)

ஆபிரகாம் ஆரான் நாட்டில் தனக்கு உரித்தான தந்தையின் உடைமைகளை விட்டு இறைவனது அழைப்புக்கு பணிந்து நடந்தார். செழிப்பான நாட்டின் உரிமையை வழங்குவதாக இறைவன் அவருக்கு உறுதியாக வாக்களித்தார்.

### (III) பிறருக்கு ஆசியாக வாழ்தல் (தொடக்க நூல் 12:2-3)

ஆபிரகாமுக்கும் அவரது வழிமரபினருக்கும் ஆண்டவரின் ஆசி கிடைத்தது. ஆனாலும் இறை நோக்கம் இதற்கு மேலானதாக இருந்தது. இறைவன் ஆபிரகாமுக்கு அளித்த மூன்றாவது வாக்குறுதி 'உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசி பெறுவாய். உன் வழியாக மக்கள் இனங்கள் அனைத்தும் ஆசி பெறும்' என்பதாகும். ஆபிரகாமின் நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிவால் ஆசி தனிப்பட்ட வகையில் மட்டுமல்ல உலக வாழ் மக்கள் அனைவருக்கும் கிடைத்த அதி விசேட ஆசியாகும்.

இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தபோது கடவுள் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டார்.
அவர்களை ஓர் இனமாகவும், ஒரே தேசமாகவும் ஒன்றிணைத்தார்.
மனிதர் கடவுளுடனும், மனிதர் சக மனிதருடனும் நல்லுறவை ஏற்படுத்தினார்.

யூத சமூகத்துக்கு பத்துக்கட்டளைகள் பயனளித்த முறைகளை ஆராய்வோம்.

### பத்துக்கட்டளைகளில் ஒழுக்கமான சமூகம் (விடுதலைப் பயணம் 20:1-17)

இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் வழங்கிய பத்துக்கட்டளைகளில் வாழ்வுக் கும் சமூகத்துக்கும் தேவையான சிறப்பான நற்பண்புகள் காணப்பட்டன. யூத மக்களின் சமூக நோக்கு இதனடிப்படையில் வலு வூட்டப்பட்டிருந்தது.



### பத்துக்கட்டளைகளின் பகுப்பு

| | |
|---|---|
| 1. என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. | 5. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட. |
| 2. சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவை களை வழிபடவோ அவற்றிற்கு பணிவிடை புரியவோ வேண்டாம். | 6. கொலை செய்யாதே.<br>7. விபசாரம் செய்யாதே.<br>8. களவு செய்யாதே. |
| 3. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே. | 9. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே. |
| 4. ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப் பிடிப்பதில் கருத்தாயிரு. | 10. பிறருக்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே. |

| | |
|---|---|
| 1, 2, 3, 4<br>மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் உறவு<br>மனிதன் இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளும், பொறுப்புக்களும் | 5, 6, 7, 8, 9, 10<br>மனிதருக்கும் சக மனிதருக்கும் இடையிலான உறவின் பண்புகள்<br>மனிதர்களுக்கிடையிலான நல்லுறவு |

இந்த பகுப்பாய்வின் 2 வது பகுதியின் 5 வது கட்டளை குடும்பத்தில் நிலவ வேண்டிய பெற்றோர் பிள்ளை தொடர்பை பொருளுடைய பெறுமதிமிக்க ஒன்றாகப் பிரதிபலிக்கின்றது. ஏனைய கட்டளைகள் இஸ்ரயேலரின் சமூகத்தை நல்வழிப்படுத்தியதுடன், சமூக நோக்கும் வலுவூட்டப்பட்டது.

யூத சமூகத்தில் காணப்பட்ட அறநெறி மற்றும் இறை நம்பிக்கை என்பன உறுதியும் பொருளுடையதும் ஆகும். நாம் உலகில் இறை உறவுடன் இறைபணிவுடன் வாழ வேண்டும். இவ்வாறான பொருளுடைய நல் வாழ்வுக்காக பத்துக்கட்டளைகள் பிரதானமாக வழிகாட்டுகின்றன. நாம் சமூகத்தில் இறை சித்தத்தை நிறைவேற்றும் இறை பிள்ளைகளாக செயற்படும்போது நாம் வாழும் சமூகம் முழுமை அடையும்.

**செயற்பாடு**

01. 'ஆபிரகாமின் விசுவாசம் புதிய சமூகத்தை உருவாக்க வழிகாட்டியது' என்பதை உதாரணங்களுடன் விளக்கி சஞ்சிகைக்கு கடிதம் வரைக.

02. இஸ்ரயேல் சமூகத்தால் இன்றைய சமூகம் நற்பண்புகளால் முழுமை யடைவதற்கு துணையாக அமையும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

# 2 மெசியாவில் நிறைவான வாழ்வு

**மெசியா தொடர்பான திருவிவிலிய எண்ணக்கருக்கள் மற்றும் பின்னணி இயேசு கிறிஸ்து என்னும் மெசியாவின் ஊடாக எமது வாழ்வு முழுமை அடைய வழிகாட்டும் முறைகளை அறிந்து கொள்ளல் இந்த பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

***எசாயா* 9:1-7, *எசாயா* 11:1-9**

மெசியா அல்லது (மேசாயா) எனும் சொல் எபிரேய மொழியில் 'மசியாஹ்' எனப்படும். அதன் பொருள் 'அருட்பொழிவு பெற்றவர்' என்பதாகும். இது கிரேக்க மொழியில் 'கிறிஸ்டொஸ்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதிலிருந்து அருட் பொழிவு பெற்றவர் இறைவனின் விசேட பொறுப்புக்களை நிறைவேற்ற அழைக்கப்பட்டுள்ளார் என அறியப்படுகிறது.

## மெசியா எண்ணக்கருவின் அறிவிப்பு

இஸ்ரயேல் வரலாற்றில் அருட்பொழிவு செய்யப்பட்ட ஒரு கூட்டத்தினர் இஸ்ரயேலின் குருக்கள் ஆவர். ஆரோன் மற்றும் அவரது புத்திரர் திருப்பொழிவு செய்யப்பட்டதை வி.ப. 29:7ல் நாம் வாசிக்கலாம். அதே போன்று இறைவாக்கினரும் திருப்பொழிவு பெற்றவர் ஆவர். 1 அரசர் 19:16 இல் இறைவாக்கினரும் அரசரும் திருப்பொழிவு செய்யப்பட்டவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'நிம்சியின் மகன் ஏகூவை இஸ்ரயேலுக்கு அரசனாக திருப்பொழிவு செய். எலிசாவை உனக்குப் பதிலாக இறைவாக்கினராக அருள்பொழிவு செய்.'

தாவீது அரசன் காலத்தில் அரசர் திருப்பொழிவு செய்யப்பட்டனர். மெசியா எனும் எண்ணக்கருவில் பின்வரும் விசேட பண்புகள் வெளிப்படுகின்றன.

## அரச தன்மை கொண்ட மெசியா எண்ணக்கருவின் விசேட பண்புகள்

### 1. மெசியாவும் தாவீது அரச வழிமரபும்

தாவீதின் வழிமரபில் மெசியா வருகை தருவார் என இறைவாக்கினர் எசாயா முன்னறிவித்தார். அதனால் தாவீது அரசனின் வழிமரபினருக்கு விசேட இடம் உரித்தானது. அதனால் இறைவன் தாவீதைத் தெரிவு செய்து அவருடன் உடன்படிக்கை செய்ய முற்பட்டார். எனவே மெசியாவின் வருகை தாவீது அரச வழிமரபில் முழுமை பெற்றது. (எசாயா 9:7)

## 2. மெசியாவின் சதாகால ஆட்சி

தாவீதின் வழிமரபு சதாகாலத்துக்குமானது. பல துன்ப துயரங்களின் மத்தியில் தாவீதின் வழிமரபில் தோன்றிய மெசியா இறைவனின் சமாதான ஆட்சியை அமைப்பார்.

## 3. நீதியும் நேர்மையும் நிலைநாட்டல்

மெசியா அரசு ஆளுகை நீதியையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தப்படுகின்றது. நீதியும் நேர்மையும் சமாதான அரசனின் பிரதான அம்சங்கள் ஆகும்.(எசாயா 11:5)

கிறிஸ்து எனும் மெசியாவின் செயற்பாடுகளை நோக்கும் போது அவர் சாதாரண அரசனைவிட வேறுபட்டவர் என்பதை நாம் திருவிவிலியத்தில் காண்கிறோம். அதாவது அவரது நோக்கம் நிலையான சமாதான அரசை உருவாக்குதல் ஆகும். (எசாயா 9:7)

## 4. நுகத்தை உடைத்தெறிந்து விடுதலை அளித்தல்

இறைவாக்கினர் எசாயாவின் காலத்தில் தென்பகுதியான யூதா அரசுக்கு அசீரியாவினால் அச்சுறுத்தல் காணப்பட்டது. அதனால் இஸ்ரயேல் மக்கள் பெரும் துன்பங்களை எதிர் நோக்கினர். 'மெசியா பற்றிய எதிர்பார்ப்பை மக்களுக்கு கொடுத்த எசாயா, 'அவர் சுமையான நுகத்தை உடைத்து விடுதலையை அளிப்பார்' என்று கூறி ஒரு எதிர்பார்பை மக்களுக்கு ஏற்படுத்தினார். (எசாயா 9:4)


## 5. வியத்தகு ஆலோசகர்

அரசன் எப்போதும் பலத்தால் மட்டுமல்ல ஞானத்தால் நிரப்பப்பட்டவர் என்று திருவிவிலியத்தில் அரசன் எனும் எண்ணக்கரு முன்வைக்கப்பட்டுள்ளது. 'அவர் ஞானத்தால் நிறைவு பெற்றவர். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர். (எசாயா 9:6) மெசியா ஞானத்தாலும், ஆலோசனையாலும் தமது மக்களை வழி நடத்துகிறார்.

## 6. அமைதியின் அரசர்

மக்களின் வாதபேதங்களை நீக்கி அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழ்தல் ஒரு நாட்டின் எதிர்காலத்துக்கு உதவியாக அமையும். அமைதி என்பது வெளியான பிரச்சனைகளை நீக்குதல் மட்டுமல்ல. மனித உள்ளங்களில் ஆழமாக உருவாகும் சமாதானம் ஆகும். (எசாயா 9:6) அந்த அரசில் சமாதானத்துக்கு முடிவில்லை (எசாயா 9:7) என மெசியா அரசின் சிறப்பு வெளிப்படுகின்றது.

## மெசியா மூலம் கிடைக்கும் ஒளி




இயேசுவின் சீடர்கள் அவர் மெசியா எனப்படும் கிறிஸ்து என அறிந்து கொண்டனர் என நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மாற்கு 8:27-30) கிறிஸ்து, தன்னை மானிட மகன் என அடையாளம் கண்டு 'மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்'. (மாற்கு 10:45)

இயேசுவின் வாழ்வும் சிலுவைத் தியாக மரணமும் உலகில் வாழும் அனைவருக்கும் பாவத்திலிருந்து விடுதலை பெறவும், அதனூடாக முழுமையான வாழ்வு பெறவும் வாய்ப்பு வழங்கியது. இந்த முழுமை வாழ்வில் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே உறவு புதுப்பிக்கப்பட்டு, பிறருடன் முழுமையான வாழ்வு வாழ்கின்றனர். இவ்வாறான சமாதான, நல்லிணக்க வாழ்வு பற்றி எசாயா 11:1-9 வரை அழகாக விபரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, மெசியாவின் வாழ்வின் தியாகத்தால் மனிதன் அனைத்து அடிமைத் தனத்திலிருந்தும் விடுதலை பெறுகின்றான். அதாவது பாவத்திலிருந்து, நோயிலிருந்து, அரசியல், சமூக துன்பங்களிலிருந்து விடுதலை பெறுகின்றனர்.

மெசியாவில் விடுதலை பெறும் விசுவாசிகள் இறையரசின் பெறுமதியை தமது வாழ்வில் எடுத்துக்காட்டுவர். இறைபயம், நீதி, நேர்மை, அர்ப்பணிப்பு, சமாதானம் என்பன இவரது வாழ்வின் நோக்கங்கள் ஆகும். இவ்வாறாக வாழ்பவர் முழுமையான கிறிஸ்தவ வாழ்வை உலகுக்கு வெளிக்காட்டுவர்.

**செயற்பாடு**

01. எசாயா 11:1-9 இல் குறிப்பிட்டுள்ளவாறு மெசியாவின் சமாதான ஆட்சியில் காணப்படும் பண்புகளை வரிசையாக எழுதுக.

02. தற்காலத்தில் மெசியா ஆட்சியின் வருகையின் தடைக்கான காரணிகள் சிலவற்றை குறிப்பிடுக.



இலவச விநியோகத்திற்காக

# 3 நல்லாயர்

**ஆண்டவரே எம் ஆயர் என அறிந்து நல்லாயனின் பண்புகளை எமது வாழ்வுக்கு உரித்தாக்கும் வழிமுறைகளைக் கற்றல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**எசேக்கியேல் 34:11-19, திருப்பாடல் 23, யோவான் 19:7-16**

## நல்லாயர் தொடர்பாக திருவிவிலியத்தில் வெளிப்படும் கருத்துகள்

இஸ்ரயேல் மக்கள் மத்தியில் ஆயர் தொழில் பலருக்கும் பழக்கப்பட்ட ஒன்றாகும். மந்தை உரிமையாளர் சிலரின் கீழ் பலர் பணி செய்தனர். இவர்கள் மத்தியில் சிறு மந்தைக் கூட்டத்தின் உரிமையாளராகவும் சிலர் இருந்தனர். ஆபெல், யாக்கோபு, அவரது புத்திரர், தாவீது போன்றவர்கள் இவ்வாறு ஆயர் தொழில் செய்தவர்கள் ஆவர்.

இவ்வாறான பின்னணியில், இஸ்ரயேலர் இறைவனை தமது ஆயராகக் கருதினர். (தொ.நூ. 48:15) கி.மு. பத்தாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட திருப்பாடல்களில் மேற்படி கருத்தானது மிகப் பொருத்தமுள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ளது (திருப் பாடல் 23) இறைவன் தமது மக்களில் எதிர்பார்க்கும் தலைமைத்துவப் பாத்திரத்தை அவர்கள் ஆயரின் உருவகமாகக் கருதினர். (எசேக்கியேல் 34:11-16)

புதிய ஏற்பாட்டிலும் இயேசுவை நல்லாயராகக் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காணலாம். (யோவான் 10:7-9) இவ்வாறு குறிப்பிடப்பட்ட கருத்துகள் மற்றும் போதனைகள் மூலம் இறைவன் எம்மில் காட்டும் அன்பு, பராமரிப்பு, பாதுகாப்பு போன்றன வெளிப்படுகின்றன. மக்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் இப்பொறுப்புக் களை இறைவன் எதிர்பார்க்கின்றார்.

### நல்லாயரின் பண்புகள்

இப் பாடத்தில் குறிப்பிடப்பட்ட திருவிவிலிய பகுதிகளின் அடிப்படையில் நல்லாயரின் பண்புகளை அறிந்து கொள்வோம். இவைகளில் நல்லாயரின் நற்பண்புகள் பொறுப்புக்களுடன் இணைந்து காணப்படுகின்றன.

## (அ) போசணை ஊட்டல்

மந்தைகளுக்குத் தேவையான உணவு மற்றும் நீர் வழங்குதல் ஆயரின் பிரதான மான கடமைகள் ஆகும். 'ஆயர் தமது மந்தையை பசும்புல் வெளி மீது இளைப்பாறச் செய்வார்.' (திருப்பாடல் 23:2) 'அவைகளை நல்ல மேய்ச்சல் நிலத்தில் மேய்ப்பேன்.' (எசேக்கியேல் 34:14)

## (ஆ) வழிநடத்துதல், பராமரித்தல், தேடிக்கண்டுபிடித்தல்


ஆயர் எப்போதும் மந்தைகளுடன் காணப்பட்டார். (திருப்பாடல் 23:4) இது தொடர்பாக எசேக்கியேல் 34:16 ஐ நினைவுகூரல் முக்கியம். ''காணாமல் போனதைத் தேடுவேன், அலைந்து திரிவதைக் கொண்டு வருவேன்; காயப் பட்டதற்குக் கட்டுப் போடுவேன்; நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன்.'' திருப்பாடல் 23:4 இல் தனது கோல் மற்றும் நெடுங்கழியுடன் வழிகாட்டும் ஆயன் காணாமல் போனவைகளைத் தேடிக் காயப்பட்டவைகளைப் பாதுகாத்து ஆயத்துவத்தின் பொறுப்பை நிறைவேற்றுகின்றார்.

## (இ) பாதுகாத்தல், வாழ்வை அர்ப்பணித்தல்

இவைகள் ஆயரின் முக்கியமான கடமைகள் ஆகும். தாவீது அரசன் ''சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்'' (திருப்பாடல் 23:4) எனக் குறிப்பிடுகின்றார். அர்ப்பணிப்பு நிறைந்த ஆயன் தனது மந்தைகளுடன் வாழ்ந்து அவைகளைப் பாதுகாக்கின்றார். அதேபோன்று 'எதிரிகளின் முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்' என்பதிலிருந்து மந்தை அதாவது மக்கள் இறைபாதுகாப்பை முழுமையாகப் பெற்று வாழ்தல் என்பதாகும். நல்லாயர் மந்தைகளுக்காகத் தனது உயிரையும் அர்ப்பணிப்பார் என்ற கருத்து வெளிப்படுகின்றது. 'நல்ல ஆயர் ஆடுகளுக்காக தம் உயிரையும் கொடுப்பார்.' யோவான் 10:11)

## (ஈ) அறிந்து வைத்திருத்தல்

ஆயனின் மற்றுமொரு குணமானது மந்தைகளிடம் காட்டும் தொடர்பாடல் ஆகும். தொடர்பாடலின் ஊடாக மந்தைகளை நன்கு அறிந்து வைத்துள்ளார். இது தொடர்பாக யோவான் நற்செய்தி நூலில் 'நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கின்றார். அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கின்றேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன' என்று இயேசு கூறுகின்றார். (யோவான் 10:4, 14,15) இங்கு ஆயருக்கும் ஆடுகளுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு வெளிப்படுகின்றது.



**ஆயத்துவத்தின் முன்மாதிரிகள்**

i. நாம் ஆயராகச் செயற்பட வேண்டிய முறைகள்
ii. நாம் ஆடுகளாகச் செயற்பட வேண்டிய முறைகள்

## ஆயராக நாம் செயற்படும் முறை

### *(அ) ஆயரின் அன்பு*

ஆயரானவர் அன்பை முதன்மைப்படுத்தியே தமது ஆடுகள் சார்பாக செயற் படுவார். மந்தைகளைப் பராமரித்தல், பாதுகாத்தல், தேடிக்கண்டு பிடித்தல், காயங்களைக் கட்டுதல் போன்ற அனைத்துச் செயல்களையும் அன்புடன் செய்கின்றார். நாம் தலைவராகக் கடமை புரியும் வேளையில் அதிகாரத்துடன் செயற்படாது பிறருடன் அன்போடு செயற்பட வேண்டும்.

### *(ஆ) அர்ப்பணிப்புடன் செயற்படுதல்*

அன்பானது அர்ப்பணிப்பில் முழுமையடையும். இயேசு ‘ஆடுகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்.’ என்றார். (யோவான் 10:15) நாமும் எமது தேவைகளைக் குறைத்து சமூகத்தில் வாழ்பவர்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

### *(இ) பணிநிலை*

ஆண்டவரே எமது நல்லாயர். இதனால் கடவுளில் நம்பிக்கைவைத்து, கடவு ளுடன் இணைந்து சமூகத்தில் பணி செய்தல் வேண்டும். யோவான் 10:16 இல் ‘‘இக் கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன.’’ இதற்கேற்ப ஆயரின் மந்தை நாம் மட்டுமல்ல பிறருக்கும் எமது பணி உரித்தாக வேண்டும்.

## நாம் ஆடுகளாக செயற்படும் முறை

### *(அ) ஆயரின் குரலுக்கு மாறுத்தரம் காட்டல்*

'அவர் அவற்றுக்கு முன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின் தொடரும். அறியாத ஒருவரை அவை பின் தொடரா. அவரை விட்டு அவை ஓடிப்போகும்' (யோவான் 10:4-5)

### *(ஆ) ஆயரின் குரலுக்கு செவி கொடுத்து செயற்படுதல்*

'நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர். வெளியே வருவர். மேய்ச்சல் நிலத்தை கண்டு கொள்வர்.' (யோவான் 10:8) இயேசுவின் விருப்பத்தைப் பின்பற்றி ஆடுகளாகிய நாமும் ஆபத்துக்களிலிருந்து விலகி வாழ முடியும். இருப்பினும் இறை விருப்புக்கு கீழ்படியாத வாழ்வு அழிவுறும். அது ஆபத்தை நோக்கிப் பயணிக்கும்.

### *(இ) ஆயருக்கு விசுவாசத்துடன் கீழ்படிதல்*

''நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்'' (யோவான் 10:10). ஆயருக்கு கீழ்படிந்து விசுவாசத் துடன் வாழ்வோமானால் மந்தைகளாகிய எமக்கும் முழுமை வாழ்வு நிலை உருவாகும். தீய ஆயர் பலர் எம்மைச் சூழ்ந்து வாழ்கின்றனர். அவர்களின் செயற்பாடுகளை விலக்கி நல்லாயர் விசுவாசத்துடன் வாழ்தல் சிறந்தது.

### *தீய ஆயரின் நோக்கு அழிவுக்குரியது*

'திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்கும் அன்றி திருடர் வேறெதற்கும் வருவதில்லை.'
(யோவான் 10:10)

''கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப் போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல. ஆடுகள் அவருக்கு சொந்தமுமல்ல'' (யோவான் 10:12).

மேற்குறிப்பிட்ட கருத்துகள் மூலம் ஆண்டவர் இயேசு நமக்குரிய ஒரே நல்ல ஆயர் என்பது தெளிவாகின்றது. மேலும் நாம் இயேசுவின் மந்தையின் ஆடுகள் என்ற ரீதியில், இயேசுவுக்கு நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதும் இங்கு வெளிப்படுகின்றது. மந்தையில் இருந்து விலகி, தன்னலமுடையவர்களாக இருக்கும்போது உலகின் தீயவனின் பிடியில் நாம் சிக்கிவிடுவோம் என்பதை உணர்ந்து, நாம் எமது கிறிஸ்தவ வாழ்வை பொருளுள்ளதாக்குவோம்.

**செயற்பாடு**

01. பின்வரும் திருவிவிலிய பகுதிகளை வாசித்து நல்லஆயர் பண்புகளை அட்டவணையில் பூர்த்தி செய்க.

திருப்பாடல் 23, எசேக்கியேல் 34:15-18

| நல்லஆயரின் பண்புகள் |
| --- |
| ....................... |
| ....................... |
| ....................... |

02. இறைவார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயரின் பண்புகளை தமது வாழ்வில் பிரதிபலித்த, இரு தலைவர்களின் பெயர்களை குறிப்பிடுக.

# 4 துன்புறும் பணியாளர்

**துன்புறும் பணியாளன் இயேசுவில் எமது வாழ்வை வலுப்படுத்திக் கொள்வது எமது எதிர்பார்ப்பு ஆகும். அதற்கு சான்றாக திருவிவிலியத்தில் பல்வேறு துன்பங்கள் மத்தியில் வாழ்ந்தவர்கள், துன்புறும் பணியாளன் குறித்து இறைவாக்கினர் எசாயாவின் போதனைகள், எமது நடைமுறை வாழ்வின் சவால்கள் என்பவற்றை இப்பாடத்தில் அறிந்துக் கொள்வோம்.**

***யோபு* 1, *எரேமியா* 38:1-13, *எசாயா* 42:1-4**

**உரையாடல் :**

ஆசிரியர் : இன்று கடவுள் நம்பிக்கை நிமித்தம் துன்புற்ற அநேகருள் யோபு மற்றும் எரேமியா என்பவர்களைக் குறித்து கலந்துரையாடுவோம்.

தயாளன் : யோபுவின் கதையை கேட்க ஆசையாக இருக்கின்றது.

ஆசிரியர் : நாம் யோபு முதலாம் அதிகாரத்தை திருவிவிலியத்தில் திருப்புவோம்.

**வாசித்துப் பார்ப்போம்**

**யோபு 1:**

ஆசிரியர் : மேற்படி திருவிவிலியப் பகுதியிலிருந்து இறைவன் யோபுவின் இறை நம்பிக்கை உறுதியானது என அறிந்திருந்தார்.

பவன் : அப்படியானால் யோபுவுக்கு அநேக துன்பங்கள் ஏன் ஏற்பட்டன?

ஆசிரியர் : நான் விளக்கமாகக் கூறுகின்றேன். ஆண்டவர் யோபுவின் நம்பிக்கையின் பலத்தை நன்கு அறிந்திருந்தார். அவர் மனைவி, பிள்ளைகள், பணியாளர், ஆடுகள், ஒட்டகங்கள், உடைமைகள், பிள்ளைகள் அனைத்தையும் இழந்தார். ஆனாலும் அவர் இறைபற்றின் நம்பிக்கையில் உறுதியாக இருந்தார்.

கீதா : ஆமாம். யோபு அலகைக்கு கீழ்ப்படியவில்லை. இது புதுமை அல்லவா?

ஆசிரியர் : ஆம். யோபு அலகைக்கு கீழ்ப்படியவில்லை. அவரது உடல் முழுவதும் புண்கள் தோன்றின. ஆனாலும் அவர் இறைவனைக் குறை கூறவில்லை.

தயாளன் : என்ன புதுமை? பல துன்பங்களின் மத்தியில், அனைத்தையும் இழந்த நிலையில் யோபுவின் நம்பிக்கையில் குறை ஏற்படாதது ஆச்சரியம் தான்.

ஆசிரியர் : அலகை அவரை சோதிக்கச் சோதிக்க, அவர் மேலும் மேலும் இறைவனை நெருங்கினார். அனைத்து சோதனைகளிலும் அவரது நம்பிக்கைக்கு இடையூறு ஏற்படவில்லை.

பவன் : இது புதுமை நிறைந்த நம்பிக்கை!

ஆசிரியர் : இப்போது நாம் எரேமியா என்பவரைப்பற்றி கலந்துரையாடு வோம்.

**வாசித்துப் பார்ப்போம்**

**எரேமியா 38 ஆம் அதிகாரம்**

ஆசிரியர் : தயாளன் வாசித்த பகுதியின் விபரத்தை கூறுங்கள்.

தயாளன் : இது பபிலோனிய பேரரசால் யூத அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட காலகட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வாகும். எரேமியா இறைவார்த்தையை யூத மக்களுக்கு அறிவித்தார்.

ஆசிரியர் : நல்லது. திருவிவிலியப் பகுதியை நன்கு அவதானித்து இருக் கின்றீர்கள்.

கீதா : எரேமியா யூத மக்களுக்கு வழங்கிய விசேட செய்தி என்ன?

ஆசிரியர் : அவர் இறைவாக்குரைத்தார். யூத மக்களை பாபிலோனி யாவுக்கு அழைத்துச் செல்லுங்கள் எனக் கூறிய போது நிகழ்ந்தது என்ன என்பதைப் பவன் கூறுங்கள்.

பவன் : ஏரேமியா இறைவாக்கினர் யூத பேரரசனால் பெரிய சிறைக் கூடத்தில், சேறு நிரம்பிய பாழுங் கிணற்றில் போடப்பட்டு, உணவின்றி பல நாட்கள் இருந்தார். பின்னர் அரசனின் செய்தி கிடைத்தவுடன் அவரை கிணற்றிலிருந்து தூக்கி எடுத்தார்கள். அவர் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்.

ஆசிரியர் : சரி. அது உண்மை. இறைவனின் விருப்பத்துக்கு ஏற்ப செயற் படும்போது எம்மால் தாங்க முடியாத துன்பங்களையும் வேதனைகளையும் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என இந் நிகழ்வின் ஊடாக நாம் அறிந்து கொள்ள முடியும். ஆனால் நாம் இறை நம்பிக்கையில் நிலையாக வாழும்போது இறைவன் எல்லா துன்ப வேளைகளிலும் எம்முடன் இருக் கின்றார் என்பது தெளிவாகும்.

## துன்புறும் பணியாளன் (எசாயா 53:12,42:1-4)

யூத மக்கள் மெசியாவின் வருகையை எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் மெசியா எனும் அருட்பொழிவு பெற்றவரை அரசியல் நோக்கில் அரசனாக எதிர்பார்த்தனர். தாவீது அரசனின் பண்புகள் மற்றும் ஆற்றல் போன்றவற்றை மெசியாவிலும் எதிர்பார்த்தனர். இருப்பினும் இறைவாக்கினர் எசாயா மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு எதிராக இறை வாக்குரைத்தார்.

புகழ் மற்றும் அதிகாரம் என்பனவற்றுக்குப் பதிலாக பணிவு, பொறுமை, துன்பங்களைச் சகித்தல் போன்ற பண்புகளை உடையவராக இறை வாக்கினர் எசாயா தமது இறைவாக்குகளில் தனது கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

எமது திருவிவிலியப் பகுதிகள் இரண்டிலும் துன்புறும் பணியாளரின் கருத்துக்களை நோக்குவோம்.

- அவர் ஆண்டவரின் ஆவியைப் பெற்றவர். (எசாயா 42:1)
- அதிகார ஆளுமைத் தொனியைவிட மென்மை குரலுடையவர். (எசாயா 42:2)
- துயருற்றவர்களை மீண்டும் துன்புற விடமாட்டார். (எசாயா 42:3)
- நீதியை நிலைநாட்டும்வரை மனம் தளராது நீதி நெறிக்காகச் செயற்படுவார். (எசாயா 42:4)
- நாம் பார்ப்பதற்கு அழகிய அமைப்போ விரும்பத்தக்க தோற்றமோ அவருக்கு இல்லை. (எசாயா 50:2)
- வேதனையுற்ற மனிதராகக் காணப்படுவார். (எசாயா 53:3)
- நம் துன்பங்களை சுமந்து கொண்டார். (எசாயா 53:3)
- அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம். (எசாயா 53:5)
- அவர் தம் உயிரை மானிடரின் குற்றங்களை நீக்கும் பலியாகத் தந்தார். (எசாயா 53:10)
- பலரின் பாவத்தைச் சுமந்தார். கொடியோருக்காகப் பரிந்து பேசினார். (எசாயா 53:12)

மேற்படி அனைத்து பண்புகளும் மெசியாவின் அதாவது கிறிஸ்துவின் துன்புறுதல் தொடர்பான இறைவாக்குகள் என்பது தெளிவாகின்றது.



**துன்புறும் பணியாளராகிய இயேசு**

எசாயா நூலில் கூறப்பட்டுள்ள துன் புறும் பணியாளன் மெசியா உரு வகத்தில் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகின்றார். துன்புறும் பணியாளரின் பொறுப்பு இயேசுவில் நிறைவு பெறுகின்றது என்பதற்கு புதிய ஏற்பாடு சான்று பகர்கின்றது.

ஏசாயா 5:41 இல் குறிப்பிடப்பட்டுள்ள 'அவர் தம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்' என்று இறைவாக்கினர் எசாயா உரைத்தது மத்தேயு 8:17 இல் நிறைவேறியது. இதில் விபரிக்கப்படும் துன்புறும் பணியாளன், இயேசு, இறைசித்தத்துக்கு ஏற்ப உண்மையாகவே துன்புற்று சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார் என நற்செய்தி நூல்கள் எமக்கு வெளிப்படுத்துகின்றன. துன்புறுதலின் விளைவானது அவரது வெற்றிகரமான உயிர்ப்பு ஆகும். இவற்றிலிருந்து கிறிஸ்து துன்புறும் பணியாளனாக இறைவிருப்பத்துக்கு தம்மை ஒப்புக்கொடுத்து தனது வேதனைகளை கருத்தில் கொள்ளாது பின்னடையாது முழு உலகுக்காக தனது உயிரை அர்ப்பணித்தார்.

## துன்புறும் பணியாளர் இயேசுவும் நாமும்

துன்புறும் பணியாளரின் பணி எமக்கு இருவித நன்மைகளைத் தருகின்றன.

- அவரது துன்பங்களால் எமக்கு விடுதலையும் ஆறுதலும் கிடைத்தமையால் நாம் நம்பிக்கையோடு அவருடன் இணைந்து செயற்பட வேண்டும். அப்போது அவரது துன்புறுதலின் முழுமையான நல்வினைப் பயன் எமக்குக் கிடைக்கும்.

- தன்னலம் துறந்து பொதுநலப் பணியில் ஈடுபடுவதில் சிலுவை வழியைப் பின்பற்றி நாமும் இயேசுவின் வாழ்வின் முன்மாதிரியை ஏற்று செயற்படுவோம். உலகில் ஏற்படும் பல்வேறு துன்பங்கள் துயரங்கள் அனைத்தையும் தைரியத்துடனும் விசுவாசத்துடனும் எதிர்நோக்கிப் பயணிப்போம். துன்புறுதல் மற்றும் பலியாதல் எமது பணியின் மிக முக்கிய பண்பாகும். அப்போது நாம் இறை வல்லமையால் பலம்

வாய்ந்த கிறிஸ்தவனாக மாற்றப்படுவோம். எமது வாழ்வில் நாம் துன்பங்களை சகித்து, இறை சித்தத்துக்கு அமைய செயற்பட உறுதிகொள்வோம்.

**செயற்பாடு**

01. எசாயா நூலின் 42:1-4 இல் காணப்படும் துன்புறும் பணியாளனின் பண்புகள் நான்கு எழுதுக.

02. கீழே தரப்பட்டுள்ளவர்கள் பற்றிய தகவல்களைத் தேடி, அவர்களின் வாழ்வில் நாம் பெறக்கூடிய பண்புகள் இவ்விரண்டு எழுதுக.

நெல்சன் மண்டேலா



அருட்தந்தை மைக்கல் ரொட்றிகோ





இலவச விநியோகத்திற்காக

# 5 அன்பு செலுத்தி வாழ்வோம்

**அனைத்து உலகுக்கும் செய்தியை அறிவிக்கும் சொல் அன்பு ஆகும். உலகின் அதிபதியான இறைவன் அன்பு நிறைந்தவராக அன்பை உலகுக்கு அருள்கொடையாக அளித்தார். இவ்வாறு வழங்கப்பட்ட அன்பு இறைவனுக்கும் மனிதனுக்கும் மற்றும் மனிதனுக்கும் படைப்புக்கும் தொடர்பை ஏற்படுத்தும் இறை கொடையாகும். இப் பாடத்தில் அவ் அன்பின் பெறுமதியை உறுதிப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**1 *கொரிந்தியர்* 13, *பிலிப்பியர்* 2:1-2, *எபேசியர்* 3:17-19, *மாற்கு* 12:29-33**

- *மனிதனுக்கான இறையன்பு உலக ஆரம்பத்தில் உருவாகியது.*
- *மனிதனின் கீழ்படியாமை, பேராசை என்பவற்றால் இறை அன்பிலிருந்து விலகி விடும் நிலை ஏற்பட்டது.*
- *இதனால் மனித உள்ளம் மாசடைந்தது. இருப்பினும் இறைவன் மனிதனிடம் காட்டிய அன்பானது எந்த வகையிலும் குறையவில்லை என்பதைத் திருவி விலியத்தில் காணலாம்.*
- *இறையன்பிலிருந்து தூர விலகி சென்று மனிதன் மாசு நிறைந்த நிலைக்கு ஆளாக்கப்பவதற்குரிய காரணிகளை பின்வரும் உருவின் மூலம் நாம் அறிந்து கொள்வோம்.*



**பவுல் கொரிந்து வாழ் மக்களுக்கு எழுதிய திருமுத்தில் 'அன்பு வழிகள்'**

**வாசித்துப் பார்ப்போம்**

**1 கொரிந்தியர் 13:1-13**


நான் மானிடரின் மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும், இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும், மறை பொருள்கள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும், நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும்,

**என்னிடம் அன்பு இல்லையேல்**

ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன். எனக்கு பயன் ஒன்றுமில்லை.

எமது வாழ்வில் எந்த அளவிற்கு அன்பு தேவை என்பதை நாம் தேடிப்பார்ப்போம்.

**அன்பு**




மேற்குறிப்பிடப்பட்ட பண்புகளுக்கு ஏற்ப 'அன்பு' எனும் சொல்லில் ஆழமான பொருள் அடங்கி உள்ளது என்பது வெளிப்படுவதுடன் கிறிஸ்தவ வாழ்வு அன்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தற்போது இயேசு அன்பைக் குறித்து கூறிய திருவிவிலியப் பகுதியை பார்ப்போம்.

இலவச விநியோகத்திற்காக

### வாசித்துப் பார்ப்போம்

## மாற்கு 12:29-33

இப்பகுதியின் இரு பிரதான பகுதிகள் பின்வருமாறு:

i. ***முழு வாழ்விலும் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்தல்***
இதன் பொருளானது நபர் ஒருவர் தனிப்பட்ட வகையில் முழுவதுமாக இறைவனில் அன்புகூர வேண்டும் என்பது இறைவிருப்பம் ஆகும்.

ii. ***தன்னில் அன்பு கூர்வதுபோல் பிறரிலும் அன்புகூர்தல்***
முற்காலத்தில் யூத மக்கள் அயலவரிடம் அன்பு காட்டுதல் என்பது தமது மதத்தவரிடம், இனத்தவரிடம் மாத்திரம் அன்பு காட்டுதல் எனக் கருதினர். ஆனால் இயேசு யூத இனத்தவராயினும் அதற்கு புதிய ஒரு வரைவிலக்கணம் அளித்தார். இயேசுவின் போதனைகளுக்கு ஏற்ப தமது அயலவர் என்பது தம்மைச் சூழ வாழும் தேவையில் இருக்கும் யாவரும் என்பது பொருள்படும். அப்படியான அன்புக்கு எல்லையில்லை.

***பவுல் எழுதிய திருமுகம் எபேசியர் 3:17-19***

**நம்பிக்கையின் வழியாக, கிறிஸ்து உங்கள் உள்ளங்களில்**
**குடிகொள்வாராக! அன்பே உங்கள்**
**வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக!**
**இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவுடைய**
**அன்பின் அகலம், நீளம், உயரம்,**
**ஆழம் என்னவென்று உணர்ந்து**
**அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும்**
**ஆற்றல் பெறுவீர்களாக! அதன் மூலம் கடவுளின் முழு**
**நிறைவையும் நீங்கள் பெற்றுக் கொள்வீர்களாக!**

அன்பின் அடிப்படையில் ஜெபத்துடன் வாழ்வு வலுவடையும்போது தமது வாழ்வு மிக உறுதியாக அமையும் என பவுல் எபேசு மக்களுக்கு எடுத்துக்காட்டினார். அவ்வாறான வாழ்வுக்கு கிறிஸ்துவின் உள்ளத்தில் வாழவும், அன்பில் நிலைத்துநிற்கவும் எமக்கு இறை நம்பிக்கை அவசியம். அதே போன்று தான் ஒருவர் மாத்திரமல்ல, அனைவருடனும் ஒன்றிணைந்து கிறிஸ்துவின் இந்த எல்லையற்ற அன்பை அறிந்து கொள்வது அவசியம். எமது வாழ்வானது அன்பில் வேரூன்றி நிலைத்திருக்கும்போது முழுமையைப் பெறும்.

நாம் எமது வாழ்வில் பல பருவங்களை கடந்து செல்கின்றோம். அதற்கேற்ப வயதுக்கு ஏற்ற அன்பை அனுபவிக்கின்றோம். ஒருவர் குழந்தையாக பிறரின் அன்பை பெறுவர். நாம் எதிர்பார்க்கும் அன்பும் பிறர் மீது காட்டும் அன்பும் மிகவும் இனியது அதனால் கிடைக்கும் பாதுகாப்புப் பராமரிப்புப் பிள்ளைகளுக்கு இளமைப் பருவம் வரை அத்தியாவசியம். இக் காலத்தில் எம்மைவிட வயதில் கூடிய அனுபவங்கள் பல நிறைந்த வளர்ந்தோர், ஆசிரியர் போன்றவர்களுக்கு நாம் பணிந்து வாழும் நிலை காணப்படும். விசுவாசம் மற்றும் புரிந்து கொள்ளல் என்பவைகளை முன்னுதாரணமாகக் கொண்டு வாழ்வோமானால் வயோதிபர், ஆசிரியர் போன்றோரின் அன்பில் நாம் வெற்றி காணமுடியும் அல்லவா? இவ்வாறான அன்பினால் இளமைக் காலத்தில் நல்வழியில் வாழும் நிலை உருவாகும்.

பாடசாலையின் இனிமையான காலம் இளமைக் காலமாகும். இங்கு தமது தோழர் தோழியரை விட மிக நம்பிக்கை உள்ள ஒருவர் இல்லை எனக் கருதி செயற்படும் அனேகர் உள்ளனர். சம வயதில் இருக்கும் அவர்களுக்கு ஏதாவது பிரச்ச னை தோன்றுமானால் அன்பு செயற்பாட்டின் மூலம் நற்பண்புகள் என்பனவற்றை அறிவூட்டல் அவசியம்.

நாம் வாழும் சமூகத்தில், திருஅவையில், குடும்பத்தில் ஆண் - பெண் இருபாலாரும் தொடர்புடன் வாழ்கின்றோம். சமூகத்தில் நாம் வாழ்வதற்கான விதிகளை ஆண்டவர் இயேசு எமக்கு அறிவுறுத்தி உள்ளார். ஆண் பாலாரும் பெண் பாலாரும் அன்பின் பண்பால் ஒருவரையொருவர் கௌரவத்துடன் கவனிக்க வேண்டும்.

இயேசுவின் இறையன்பு இவ்வுலகில் பரம்பிட அன்புடன் நாம் செயற்படுவோம்.

நாம் அர்ப்பணிப்புடன் செயற்படும்போது அன்பு மிகுந்த பொருளுள்ளதாகும். இயேசுவின் வாழ்வு, பணி, துன்புறுதல், மரணம் என்பனவற்றில் தியாக அன்பு ஆழமாக அமைந்துள்ளது. உண்மையான அன்பை உலகுக்கு பரப்பும் நாம் இறை யன்புடன் வாழ வேண்டும்.

**செயற்பாடு**

01. 'கிறிஸ்தவராகிய எமது வாழ்வின் அடிப்படை அன்பு' இது சார்பாக நீர் கற்ற கருத்துக்கள் மூன்று எழுதுக.

02. தற்காலத்தில் தமது வாழ்வில் அன்பின் அடிப்படையில் வாழ்ந்த இரு வரைக் குறிப்பிடுக.

# 6 சமாதானத்துக்கு அர்ப்பணிப்போம்

**சமாதானத்தை அனைவரும் விரும்புகின்றோம். சமாதானம் எமக்கு சுதந்திரம் மற்றும் மனதுக்கு ஆறுதல் உணர்வை உருவாக்கும் என்பது இதற்கான காரணி ஆகும். இதனால் சமாதானம் குறித்து கதைக்கும் சந்தர்ப்பத்தில் அது நீதியுடன் தொடர்புடையது என அறியலாம். பாரிய அர்ப்பணிப்பால் மட்டும் சமாதானம் ஏற்படுத்த முடியும் என்பதை இப்பாடத்தில் அறிந்து கொள்ள முடியும்.**

***மத்தேயு 5:9-12, எசாயா 9:6-7***

இயேசுவின் மலைப்பொழிவில் சமாதானம் உருவாக்கல் பற்றி அழகாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யும்போது நீதிக்காக துன்புறுவார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவின் மலைப்பொழிவு வார்த்தைகளை இங்கு ஆராய்வோம்.

அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்
ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.
நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்.
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.
மத்தேயு **5:9-12**

மேற்படி வார்த்தைகளில் சமாதானத்துக்காக உழைத்து வாழ்வதை இறைவன் விரும்புகின்றார் என்பதாகும். அதற்காக அர்ப்பணிப்பு அவசியம். தமது வாழ்வையும் கூட கருத்தில் கொள்ளாது செயற்படும்போது அது உயர் அர்ப்பணிப்பாக அமைகின்றது. சில வேளைகளில் சமாதானத்தைக் குழப்ப தனிப்பட்ட நபர் ஒருவரின் வாயால் வெளிப்படும் ஒரு சொல் காரணியாக அமையலாம். அப்படியானால் சமாதானத்தைக் குழப்பும் செயற்பாடுகளிலிருந்து விலகி வாழ்தல் இறை விருப்பமாகும். அதனால் நாம் வாழும் வீட்டில், குடும்பத்தில், பாடசாலையில், அயலில், சமூகத்தில் காட்டப்படும் மனிதத்துவம் வழிகாட்டும் காரணியாகும்.

நாடுகளுக்கு இடையே மற்றும் இனங்களுக்கு இடையே சண்டை ஏற்பட்டு மனிதத் தன்மைக்கு பொருத்தமற்ற வாழ்வு, உடைமைகளை அழித்து பழிவாங்குதல் என்பன இறைவிருப்பத்துக்கு எதிரான செயலாகும். இதனால் சமாதானத்தை உருவாக்க உழைக்கும் அனைவரும் இறை பிள்ளைகள் என்ற உரிமையைப் பெறுவர் என இயேசு கூறியது இன்றும் எமக்கு முக்கியமாக அமைகின்றது.

எந்தவொரு குடிமகனுக்கும் அநீதி ஏற்படாது உறுதிப்படுத்தப்படும் வேளையில் சமாதானம் உருவாகும். இயேசு நீதியுடன் கூடிய சமாதானத்தை இவ் உலகுக்கு பெற்றுக் கொடுத்தார். இது இயேசு உலகில் அவதரிக்கும் முன்னர் எசாயாவால் அறிவிக்கப்பட்டது.

**வாசித்துப் பார்ப்போம்**

**எசாயா 9:6-7**

இதில் குறிப்பிட்டுள்ளவாறு

***அவரது ஆட்சியில்***
***சமாதானத்துக்கு முடிவில்லை***
***அது உறுதியாக அமைக்கப்படும்***
***அங்கு நீதியுடனும் நேர்மையுடனும் ஆட்சி இடம்பெறும்.***

இதை ஆழமாக சிந்திக்கும்போது நீதியால் சமாதானம் மலரும். நீதியை உருவாக்க வேண்டுமானால் நேர்மை அவசியம் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இலங்கை வரலாற்றில் நேர்மையாக ஆட்சி செய்த பல அரசர்களைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

நேர்மையுடன் இடம்பெறும் அரச ஆட்சியில் நீதியை மதித்தல் பிரதான அம்சமாகும். ''நீதியுடனும் நேர்மையுடனும் ஆளும்போது சமாதானம் நிலைக்கும்'' என இறைவாக்கினர் எசாயா இன்னுமொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். பல்சமய, பல்லின பல்கலாச்சார சூற்றாடலில் வாழும் நாம் சகவாழ்வின் ஊடாக இது நிறைவேற எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

முழுமையான சமாதானத்துடன் வாழ அனைவரும் விரும்புவர். ''சாலோம்'' எனும் எபிரேய சொல்லை யூதரும் ஆரம்ப கிறிஸ்தவரும் பயன்படுத்த பழக்கப்பட்டிருந்தனர். ''ஐரேனியா'' எனும் கிரேக்க சொல்லின் பொருள் முழுமையான சமாதானம் என்பதாகும். முழுமையான சமாதானம் என்பது வெளியாக உணரும் பண்பு மட்டுமல்ல உள்ளார்ந்த வாழ்விலும் உருவாக்கப்பட வேண்டும் எனக் கருதப்படுகின்றது. அப்போது சமுதாயத்தில் சிந்தனைகள் மற்றும் மனப்பான்மைகள் உருவாகி முழுமையான மாற்றம் நிமித்தமாக சமாதானம் நிறைந்த சமூகம் நிலைநாட்டப்படும்.

உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க பலர் முன்வந்தனர். பொருளாதாரம், சமூகம், அரசியல், மதம் என்பனவற்றில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு சமாதானத்தை நிலைநாட்ட மிகவும் பாடுபட்டுள்ளனர் என்பதை நாம் விளங்கிக்கொள்வோம்.

இலவச விநியோகத்திற்காக

## அருட்தந்தை சந்திரா பர்னாந்து



இலங்கை கிறிஸ்தவ சபையில் சமாதானத்துக்காக மக்களின் நன்மைக்காக தந்தை சந்திரா பர்னாந்து தனது வாழ்வை அர்ப்ப ணித்தார்.

அவரது முழுப்பெயர் மாசல் கிறிஸ்டி பர்னாந்து என்பதாகும். அவர் 1941 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 9 ஆம் நாளன்று மட்டுநகரில் பிறந்தார். 1972 இல் அங்கீகாரம் பெற்ற குருவாக மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆலயங்களில் உதவி குருவாகப் பணியாற்றினார். 1981 இல் பிள்ளைகளுக்கு நியமிக்கப்பட்ட பொறுப்புக்களை மிக விருப்புடனும் உற்சாகத்துடனும் செய்து முடித்து குரு அழைப்பை விருப்புடன் ஏற்றுக்கொண்டார்.

'ஆலய கட்டிடம் மக்களுக்காக' என்ற உன்னத மனப்பான்மையைக் கொண்டவராக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்காக தமது பணியை தியாகம் செய்தார். அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து வாழ உழைத்தார்.

சபைக்குள் மாத்திரம் மட்டுப்பட்டு பணி ஆற்றும் குருக்களால் மக்களுக்கு அதிகம் சேவைபுரியும் நிலை குறைவுபடுகிறது என்று இவர் கருதினார். அதை மனதில் வைத்து மக்களுக்கு பொதுப்பணி ஆற்றுவதில் அதிகம் ஈடுபட்டார். குருமனைகள் இல்லாத சபைகளில் குருமனை அமைக்கும்போது மக்கள் வாழும் இடங்களில், அவர்களின் மத்தியில் வாழக்கூடிய விதத்தில் குருமனைகளை அமைத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'எவரும் என்னை ஆண்டவரே என சொல்லாதீர்கள். தலைவர் பணியாளனாக வேண்டும்.' என்பது இவரது பணியின் அடிப்படையாகும்.

''நான் கிறிஸ்தவ மதகுரு. நான் ஆண்டவரை வழிபடுகின்றேன். நான் மக்களின் வாழ்வை நேசிக்கின்றேன். கொலைசெய்தலை நான் வெறுக்கின்றேன்.'' என வன்முறை அதிகரித்திருந்த காலத்தில் அறிவித்தார்.

இவ்வாறு கருத்து தெரிவித்த இவர் 1988 ஆடி மாதம் 5 ஆம் நாள் மட்டக்களப்பு ஆலயத்தில் இடம்பெற்ற திருவிருந்து வழிபாட்டில் பங்குபற்றிய சந்தர்ப்பத்தில் அகால மரணமடைந்தார்.

## அருட்தந்தை திஸ்ஸ பாலசூரிய



சமூக நலத்தைக் கட்டியெழுப்பி சமாதானத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் உழைத்தவர்களுள் ஒருவராக அருட்தந்தை திஸ்ஸ பாலசூரிய அவர்களைக் குறிப்பிடலாம். மருதானையில் சமூக மற்றும் சமாதான நிலையத்தின் முதல்வர் அருட் தந்தை திஸ்ஸ பால சூரிய அவர்கள் ஆவர். பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் நமது நாட்டிற்கு அவர் பாரிய பணியாற்றியுள்ளார். வட மத்திய மாகாணத்தின் காட்கஸ்திலி எனும் இடத்தில் 1924 ஆவணி மாதம் 29 ஆம் நாளன்று பிறந்தார். இவர் கத்தோலிக்க மதகுரு ஆகும் நோக்கில் நிர்மல மரிய இயக்கத்தில் முன்னோடி பயிற்சி நிலையத்தில் 1945 இல் இணைந்தார். கிறிஸ்தவ எழுத்துத் துறையில் பிரபல்யமானவர். இவர், கிறிஸ்து இறையரசினை அறிவித்த ஒருவராக அறிமுகம் செய்யப்படுகின்றார். தமது நூல்களில், பகைமையில் நட்பை உருவாக்க அன்பினால் மாத்திரமல்ல பகைவரையும் நேசித்து மன்னிப்பதன் மூலம் மாத்திரமே முடியும் எனக் கூறியுள்ளார்.

நாட்டில் காணப்படும் ஒருமைப்பாடு, சுதந்திரம், அபிவிருத்தி மற்றும் சமூக நலம் என்பனவற்றின் ஊடாக இன, மத, சமூக, ஒற்றுமையை உருவாக்க முடியும் என அவர் உறுதியாக விசுவாசித்தார்.

குடிசையில் வாழும் மக்களின் வறுமை நிலை கண்டு வீட்டுப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக பொருளாதார அபிவிருத்தியின் ஊடாக வேலை வாய்ப்பு.

பெற்றுக்கொடுப்பதன் முக்கியத்துவம் தொடர்பான வேலைத்திட்டங்களை நிறுவி, சமூக நலத்துக்கு புது வழி திறப்பதில் பங்களிப்பு வழங்கினார். அவர் இயேசுவின் முன்மாதிரியில் உலக சமய, சமூக பணிக்கு தம்மை ஒப்புவித்தார். இயேசுவில் காணப்பட்ட மனித புரட்சி எமக்கு உயரிய முன்மாதிரி எனவும் எடுத்துக் காட்டினார்.

நீதிக்காக உழைப்பவர்கள் இவ்வுலகில் துன்புறுத்தலுக்கு ஆளாவது போல் சமாதானத்துக்காக உழைப்பவர்களும் துன்புறுத்தப்படும் சந்தர்ப்பங்கள் தோன்றலாம் என்பது எமக்கு விளங்குகின்றது. இறையரசின் பிள்ளைகள் என்ற ரீதியில், இவ்வாறு துன்புறுத்தப்படுபவர்களுக்கு மேன்மையான வாழ்வு கிட்டும் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

முழு உலகையும் பாவத்திலிருந்து விடுவிக்க உலகில் அவதரித்த இறைமகன், இயேசு, 'சமாதானத்தின் புத்திரன்' என குறிப்பிடப்படுகின்றார். துன்பத்தில் வாழும் மக்களை மீட்டு பகைமை சிந்தனை கொண்ட உள்ளங்களை மிருதுவாக்கி, பகைமை உள்ள இடங்களில் அன்பை வளர்த்து, தமது வாழ்வின் செயற்பாடுகளுக்கூடாக அன்பை அடிப்படையாகக் கொண்ட உலகுக்கு அவர் பெற்றுக்கொடுத்த சமாதானம், அவரது சிலுவையில் மரணத்தின் மூலம் பெறப்பட்டதாகும்.

சிலுவையில் வேதனையின் மத்தியில் அவர் ''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை.'' என்று கூறியதில் இது உறுதிப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் சிலுவை மரணம் இயேசு வின் உன்னத செயல் என வெளிப்படுகின்றது.

நாம் ஒவ்வொருவரும் பிறருடன் சமாதானத்தைப் பகிர்ந்து வாழும்போது மாத்திரமே, இயேசு தமது வாழ்வின் தியாகத்தின் மூலம் உலகிற்குத் தந்த சமாதானத்தை அனுபவிக்கலாம். இந்த உண்மையை திருவிவிலியம் எமக்குப் போதிக்கின்றது. சமாதானம் (அமைதி) ஏற்படுவதற்கு தேவையான அனைத்திற்கும் எமது சிந்தையை நாம் செலுத்துவதன் மூலம், பிறருடைய வாழ்வில் ஒளியேற்றுவதற்கு நாம் எம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்பது இறைவனின் சித்தம் என்பதை நாம் விளங்கிக்கொள்வோம்.

**செயற்பாடு**

01. மலைப்பொழிவில் குறிப்பிடப்பட்ட போதனைகள் எமது வாழ்வுக்கு பொருத்தமாக அமையும் சந்தர்ப்பங்களைப் பட்டியல்படுத்துக.

02. கிறிஸ்தவ பிள்ளை என்ற வகையில் சமாதானத்தை உருவாக்கும் உமது செயற்பாடுகள் 3 குறிப்பிடுக.

# 7 மன்னிப்பை அனுபவத்தில் காண்போம்

**மனுக்குலத்தில் காணப்படும் ஒரு இறை பண்பாக மன்னிப்பை நாம் குறிப்பிடலாம். இயேசு தனது வாழ்வில் முன்மாதிரியாகச் செயற்படுத்திய மன்னிப்பை இப்பாடத்தில் விளங்கிக்கொள்வோம்.**

***மத்தேயு 6:12, 18:21-35, எபேசியர் 4:32***

காலை எழுந்து இரவு நித்திரைக்குச் செல்லும்வரை தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மனிதன் பாடுபடுகின்றான். அவ்வாறான வாழ்வில் தந்தை, தாய், பிள்ளைகள், உறவினர், சிநேகிதர், அன்பானவர் மட்டுமல்ல தன்னைக் குறித்தும் சிந்தித்துச் செயற்பட நேரமில்லாத நிலை காணப்படுகின்றது. அதிக போட்டி நிறைந்த சிக்கலான வாழ்வுப் பயணத்தில், மனித பெறுமதி அழிக்கப்பட்டு பிறரின் துன்ப துயரங்களில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பும் குறைவடைவதை அவதானிக்கலாம்.

மேற்படி அனைத்துக் காரணிகளிலும், மனிதன் சுகநல வசதிகளை நாடி அதன் பின்னால் ஓடி, துன்பங்களை எதிர்நோக்க விருப்பமற்றவனாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இதனால் பொது நல வாழ்வுக்கு பதிலாக தனது இறுதி இலக்கை நல்ல வழியில் அல்லாது தீய வழியில் அடைவதற்கு முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

சமூகத்தின் நற்பெறுமதிகள் நிலைத்திருக்கும்போது மாத்திரமே அச்சமூகம் நன்கு நிலைக்கும். அவ்வாறான பெறுமதிகளில் மிக முக்கியமான குணமாகக் கருதப்படுவது மன்னிப்பு வழங்குதல் ஆகும்.

**மன்னிப்பு** → **அன்பு** → **சமாதானம்** → **ஒற்றுமை** → **ஒருமைப்பாடு** → **சகவாழ்வு**

புகையிரதம் செயல்படுவதற்கு இயந்திரம் இயங்க வேண்டும். அப்போது அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து பெட்டிகளும் இயங்க ஆரம்பிக்கின்றன. எரிபொருள் பாவனையுடன் புகையிரத செயற்பாடு ஆரம்பமாதல் போன்றதே 'மன்னிப்பு வழங்கல்' மற்றும் 'மன்னிப்புப் பெறுதல்' என்பனவற்றில் சமூகப் பெறுமதி உறுதிப்படுத்தப்படுகின்றது. புகையிரதப் பெட்டிகள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளது போன்று மன்னித்தலின் பெறுமதியும் தொடர்புடையது என்பதை நாம் விளங்கிக்கொள்வோம்.

இவ்வாறு நோக்கும்போது தவறுசெய்வது மனித சுபாவமாகும். எனினும் இறைபண்பான மன்னிக்கும் குணம் சமுகத்தை நன்மையானதாக மாற்றும் மன்னிப்பு வழங்கல், மன்னிப்புப் பெறுதல் என்பன இயேசுவின் போதனை ஆகும். திருவிவிலியத்தில் மன்னிப்பு பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**வாசித்துப் பார்ப்போம்**

**மத்தேயு 6:12**

இயேசு எமக்குக் கற்பித்த இறைவேண்டலில் 'மன்னிப்பு' குறித்த வார்த்தையைத் தியானிப்போம். ஒவ்வொரு மனிதனும் அன்பு, சமாதானம், ஒற்றுமை, ஒன்றிப்பு, சக வாழ்வு போன்றனவற்றுக்கு விருப்பம் காட்டுகின்றான். ஆனால் அவை நிலைப்பதற்கு தேவையான பிரதான கோட்பாடான மன்னிப்பு வழங்கலில் பின்னடைகின்றான்.

எமது இறைவேண்டுதலில் மன்னிப்பு வழங்கல் மற்றும் மன்னிப்புப் பெறுதல் என்பனவற்றின் பெறுமதியை தமது சீடர்களுக்கு இயேசு போதித்தார் என்பது இதில் தெளிவாகின்றது. மேற்படி வேண்டுதல் எமது குடும்ப விண்ணப்பமாக செய்யும் ஒவ்வொரு வேளையும் பிறர் குறித்த பொறுப்பு வெளிப்படுகின்றது. இதனால் கிறிஸ்தவராகிய நாம் இறைவேண்டல் செய்யும் வேளையில் நாம் மன்னிப்பை பெறுவதற்காக எம்மால் பிறருக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமென்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

இயேசு 'மன்னிப்பு' தொடர்பாக போதித்தது மட்டுமல்ல அதைத் தமது செயலிலும் காட்டினார். சிலுவையில் தமக்கு எதிராக தவறு செய்தவர்களுக்கு மன்னிப்பு அளித்தார்.


இயேசுவின் பிரதான சீடரான பேதுரு தமக்கு எதிராக குற்றம் செய்த சகோதரனை யூத முறைப்படி ஏழு தடவை மட்டும் மன்னிக்கலாம் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தார் என நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வாசித்துப் பார்ப்போம்**

**மத்தேயு 18:21-22**

இயேசு எதிர்பார்த்த மன்னிப்பானது ஏழுமுறை மன்னித்தல் மட்டுமல்ல, அது எல்லையற்றது. இதனை நடைமுறைப்படுத்துவது கடினம். உண்மையிலேயே மன்னிப்பு வழங்கல் என்பதன் பொருளை விளங்கிக்கொள்ள வேண்டுமானால் எமக்கு எதிராக குற்றம் செய்யும் அனைவரையும் நாம் மன்னிக்க வேண்டும். இயேசுவின் போதனைக்கு ஏற்ப எமது வாழ்வை நாம் பழக்கப்படுத்தி செயற்படுவோம்.

## இரண்டம் ஜூவாம் பவுல்



இவர் 1920 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் நாளன்று போலந்து நகரில் பிறந்தார். வாழ்வில் குரோதம் மற்றும் பகைமை போன்றனவற்றுக்கு மன்னிப்பை தானமாக வழங்கிய பெரியோர்களை நாம் நினைவு கூரும்போது, மன்னிப்பு வழங்கும் உத்தம செயற்பாட்டை தமது வாழ்நாள் முழுவதும் எடுத்துக்காட்டியவர் இரண்டாம் ஜூவாம் பவுல். 1981 மே 13 இல் துருக்கி இன அலி அக்கார் என்பவரின் வெடிகுண்டினால் இவர் தாக்கப்பட்டார். ஆனால் இலக்கு தவறியது. அவ்வேளையில் இரண்டாம் ஜூவாம் பவுல் அவர்கள் பிரதி செயலாக அலி அக்னார் இருந்த சிறைக்கு சென்று ''நீ செய்த தவறுக்கு நான் மன்னிப்பு வழங்குகின்றேன்'' என்று கூறி அவருக்கு மன்னிப்பு வழங்கினார்.

## அருட்பணி. பீற்றர் ஜெராட் டீ சில்வா



மன்னிப்பு வழங்கி பணி ஆற்றிய இலங்கையின் திருப்பணி யாளர் அருட்பணி. பீற்றர் ஜெராட் டீ சில்வா ஆவார். 1840 இல் மெதடிஸ்த திருஅவையைச் சேர்ந்த அருட்பணி. பீற்றர் ஜெராட் டீ சில்வா அவர்கள், அங்குலான பிரதேசத்தில் நடாத்திய நற்செய்திப் புரட்சி குறிப்பிடப்படவேண்டிய ஒன் றாகும். கிராமத்து மக்கள் அவர் போதித்த நற்செய்தியை மிக விருப்புடன் கேட்ட அதேவேளை எதிர்ப்பும் தெரிவித்தனர். ஒருநாள் அவர் வழமைப்படி அங்குலான செல்லும்போது, வழியில் மது விற்பனை நிலையத்துக்கு அருகே சிலர் ஒளிந்து நின்று அவர்மீது சாணத்தை வீச ஆயத்தமாக இருந்தனர். அவர் அன்று சற்று தாமதமாகி வந்தார். வழியில் வந்த நபரை இவரென நினைத்து அவர்கள் சாணத்தை வீசி எறிந்தனர். குதிரையை ஓட்டி வந்தவர் அதனால் கோபமடைந்து அவர்களை தாக்கினார். குதிரையும் கூட அவர்களைத் தாக்கியது. குதிரையில் பயணம் செய்தவரோ ஆங்கிலேயரான பாணந்துறை நீதிபதி ஆவர். தாக்கியவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இதனை அறிந்த பீற்றர் ஜெராட் சிறைக்குச் சென்று அவர்களுடன் உரையாடினார். அவர்களுக்கு மன்னிப்பு வழங்கினார். அவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடன் விசுவாசமுடைய கிறிஸ்தவர்களாக மாறினர்.

மன்னிப்பு வழங்கல் எனும் சிறப்பான பண்பை உலகுக்கு வெளிப்படுத்தியவர் எதுவித குற்றமும் செய்யாத இயேசு என்பது மறுக்க முடியாது.

மனிதன் இறைவனிடமிருந்து தூர விலகிச் செல்லும்போது பாவத்தை முழு வதுமாக நீக்கி இறைவனுடன் தொடர்பு கொள்ளும் உன்னத செயலானது மன்னிப்பின்

மூலமாக; சிலுவைத் தியாக பலியால் நிறைவு பெற்றது. கிறிஸ்தவர்களாகிய நாம் குற்றங்களுக்காக மனம்திரும்பி புதுவாழ்வு வாழமுடியும் என திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

குற்றங்களுக்கு மன்னிப்பு பெற்றும் மன்னிப்பு வழங்கியும் ஒருவருக்கொருவர் இதுவரை காணப்படாத விசுவாசத் தன்மையைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பம் உண்டு. மன்னிப்பு வழங்கல் மற்றும் மன்னிப்புப் பெறுதல் இறையரசின் உத்தம பண்பாகும் என்பது வெளிப்படுகின்றது.

மன்னிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் இயேசு போதித்த உவமையில் எமது கண்ணோட்டத்தைச் செலுத்துவோம்.

### மன்னிக்க மறுத்த பணியாள் உவமை

**வாசித்துப் பார்ப்போம்**

**மத்தேயு 18:21-35**

- அதிக கடன்பெற்ற பணியாள் தனது கடனை மன்னிக்குமாறு தலைவரிடம் வேண்டினார்.
- தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.
- மன்னிப்பைப் பெற்ற பணியாளர் தன்னிடம் கடன் பெற்றவரிடம் கடனை திருப்பித் தரும் வரையில் அவனைச் சிறையில் அடைத்தார்.
- தலைவர் சினமடைந்து அவருக்கு தண்டனை வழங்கினார்.

**மேற்படி உவமையில் எமக்குக் கிடைக்கும் முன்மாதிரிகள்**

- மன்னிப்பு வழங்கி செயற்பட வேண்டும்
- மன்னிப்பு வழங்குதல் இறைபண்பாகும்
- மன்னிப்புக் கேட்டல் தவறு அல்ல
- மன்னிப்பு அனைவருக்கும் அவசியம்
- மன்னிப்பு வழங்குதல் - மன்னிப்புப் பெறுதல் ஆகிய செயல்களில் நாம் இறைவிருப்பத்தை நிறை வேற்றுகின்றோம்
- மன்னிப்பு வழங்குதல் - மன்னிப்பு பெறுதல் மூலமாக புதுவாழ்வு உருவாகின்றது.

இறைவன் இயேசு எமக்கு அளித்த மன்னிப்பை கிறிஸ்தவராகிய நாம் எமது சமூகத்துக்கும் நாட்டுக்கும் வழங்குவோம். மன்னிப்பு வழங்கவும் மன்னிப்பைப் பெற்று வாழவும் பழகுவோம்.

**செயற்பாடு**

01. மன்னிப்பு வழங்குதல் தொடர்பாக இயேசுவின் போதனைகள் யாவை?

02. கிறிஸ்தவ பிள்ளை என்ற வகையில் உமது வாழ்வில் மன்னிப்பு வழங்குதல் - மன்னிப்பு பெறும் சந்தர்ப்பங்கள் மூன்று குறிப்பிடுக.

# 8 ஒருமைப்பாட்டுடன் வாழ்வோம்

**எமது கிறிஸ்தவ நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அடிப்ப டையாகக் கொண்டு, இயேசுவோடு ஒன்றிணைந்து, சமூகத்தில் வாழ்வது முக்கியமாகும். கிறிஸ்தவர்களாக ஒன்றிணைந்து வாழ் வதற்கு தேவையான வழிகாட்டலைப் பெற்றுக் கொள்வதே இப் பாடத்தின் நோக்கமாகும்.**

***யோவான் :* 15:1-16, 17:20-23, *கலாத்தியர் :* 3:28-29, *எபேசியர் :* 2:14-16, 4:16**

உலக சூழலில் பல்வேறுபட்ட தன்மைகள் உலகை அழகூட்டுகின்றன. விலங்கினங்களில் உள்ள வேறுபாடுகள் போன்று மானிட சமூகத்திலும் இன, மொழி, மதங்களுக்கிடையே பலவிதமான வேறுபாடுகள் மத்தியில் வாழ்கின்றோம்.



நாம் பார்க்கும் மலர்களைப்பற்றி சற்று தியானிக் கும்போது அவை மலர்ந்து, உதிர்ந்து போனாலும் அவை ஒவ்வொன்றும் நிறைவு செய்யும் காரியங் கள் மிகவும் முக்கியம் ஆனதாகும். வடிவங்கள் வேறுவேறாக இருந்தாலும் நிறங்கள், வாசனைகள் வெவ்வேறாக இருந்தாலும் ஒன்றாக இணைந்து அவை தம் பெறுமதியை வெளிப்படுத்துகின்றன. நாம் வாழும் சூழலை நோக்கும் போது இந்த முழு உலகத்திலேயும் பலவிதமான வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்வது அவசியமாகும். இன்று உலகமயமாக்கல் மூல மாகப் பல காரியங்களை அறிந்து கொள்கின்றோம். எமது குறுகிய வாழ்க்கை வட்டத்துக்குள்ளே வாழாமல் பரந்த கண்ணோட்டத்துடன் வாழ்வது அவசியமாகும்.

வேறுபாடுகளின் மத்தியில் கட்டி எழுப்பப்படும் தொடர்பும், அதனுள் காணப்படும் வலிமையும் கிறிஸ்தவ வாழ்வை நடாத்திச் செல்வதற்கு அவசியமானதாகும்.

### யோவான் :15:1-16

இது இயேசு கூறிய ஓர் உவமையாகும். இதில் இயேசு திராட்சைக் கொடியாகவும், கிறிஸ்தவர்களாகிய நாம் அதன் கொடிகளாகவும் உவமிக்கப்பிட்டுள்ளது. தோட்டத்தின் அதிபதி இறைவனாவார். அதிபதியான இறைவன் தன் மகன் இயேசுவின் மூலமாக

எம்மை இறைத் தொடர்புக்குள் இணைத்துள்ளார். இவ்விணைப்பின் மூலமாக கிறிஸ்தவர்களாக நாம் உலகில் வாழ்வது கடவுளின் விருப்பமாகும். கொடியானது திராட்சைச் செடியோடு இணைந்திருக்காவிடின் கனி கொடுக்க முடியாது. அது போல நாமும் இயேசுவோடு இணைந்திராவிட்டால் மெய்யான கிறிஸ்தவனாக வாழ்வதற்கு இயலாது. நாம் மெய்யான கிறிஸ்தவர்களாக எவ்வாறு கனி கொடுக்க வேண்டும் என்பதை திருவிவிலியப் பகுதிக்கூடாகப் பார்ப்போம்.

கனிகொடாத அனைத்து கொடிகளும் தறித்து எறியப்படும். கனிகொடுக்கும் கொடிகள் இணைந்திருக்கும்.

நற்கனி கொடுக்காத மக்கள் இயேசுவோடு இணைந்திருந்தாலும் இறை குணாதிசயங்களை உலகிற்கு வெளிப்படுத்ததாமல் செயற்படுகின்றவர்களா வார்கள். எனவே இவர்கள் இறையரசுக்கு பலன் கொடுக்காத கொடிகளாகக் காணப்படுகின்றனர்.

''என்னோடு இணைந்து இராதவர் கொடியைப்போலத் தறித்து எறிபட்டு உலர்ந்து போவார்'' (யோவான்:15:6) கனிகொடுக்கும் அனைத்து கொடிகளும் இறையரசு நிலவுவதற்கு பலன் கொடுப்பவர்களாக வாழ்பவராவர்.'' அவர்கள் மிகுந்த கனி தருவார்கள்'' என்பதின் பொருள் இறை அரசிற்காக கடவுள் அவர்களைப் பயன்படுத்துவார் என்பதாகும். நாம் கனி கொடுப்பதில் எமது வாழ்வில் ஏற்படும் தடைகளை அகற்றி அவருக்கு பயனுள்ளவர்களாக எம்மைப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இப்போது நாம் இயேசுவின் தலைமைக்குருவின் வேண்டலில் முக்கியமான பகுதிக்கு எமது கவனத்தை செலுத்துவோம்.

### யோவான் :17:20-23

இன்று உலகில் வாழும் மனிதர்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு விருப்ப மற்றவர்களாகக் காணப்படுவதுபோல் தென்படுகின்றது. நாட்டுக்குநாடு, இனத்திற்கு இனம், விரோதமாக யுத்தங்களும், பிரச்சனைகளும் முழு உலகத்திலும் நிகழுகின்றன. எனவே இதன் மூலம் மனிதமனங்களில் உருவாகும் பகைமை, பொறாமை, பழிவாங்குதல் போன்ற தீமையான காரியங்கள் ஒருமைப்பாட்டு வாழ்க்கைக்குத் தடையாகக் காணப்படுகின்றன.

இங்கு குறிப்பிடப்படும் ஒருமைப்பாடு என்னும் வார்த்தையினூடாக இறைவனுக்கும் இயேசுவுக்கும் இடையிலான தொடர்பு வெளிப்படுத்தப்படுகின்றது. அவ்வாறே சபையாக கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவோடு ஒன்றிணைந்து இருக்க வேண்டும். இவ்வாறு பார்க்கும் போது இறைவிருப்பமானது, கிறிஸ்தவர்களாகிய நாம் அவரைச் சேவித்து வாழ்வதேயாகும். மேலும் திருச்சபையாக நாம் அவரோடு

இணையும் ஒன்றிப்பின் மூலமாக, வாழும் சமூகத்திற்கு இவ்வாறான பெறுமதி வாய்ந்த முன்மாதிரியை வெளிப்படுத்துவதாகும்.

இவ்வாறு செய்யும்போது எமது கிறிஸ்தவ தன்மையை பிரிக்கமுடியாது எனக் காண்கிறோம். ஆனாலும் கிறிஸ்துவுக்காக சான்று பகர்வதற்காகக் கட்டி எழுப் பப்பட்ட தூயசபையானது இப்போது பல காரணங்களால் பிரிந்து வெவ்வேறாகக் காணப்படுகின்றது. மீட்பின் திட்டத்தை மனுக்குலத்திற்கு கொண்டு செல்வதற்கு பூமியிலே மீட்பின் அடையாளமாக திருத்தூதர் பேதுருவின் தலைமைத்துவத்தால் உருவான தூய சபையானது பேதங்களால் பிரிந்து போவது இயேசுவின் எதிர்பார்ப் பல்ல. இயேசுவை பின்பற்றுவோரின் ஒற்றுமைக்காக அவர் ஜெபித்தார். இன்று எம் ஒவ்வொருவரினதும் பொறுப்பானது கிறிஸ்துவைப் பின்பற்றி ஒற்றுமைக்கு சான்று பகர்ந்து வாழவேண்டும் என்பதாகும்.

நாம் ஒருமைப்பாட்டுடன் வாழும்போது இறைவனால் கிறிஸ்து பூரணமான மாட்சி அடைகின்றார். (யோவான் : 17:22)

அனைத்து சபைகளிலும் காணப்படும் நல்லவைகளை முதன்மையாகக் கொண்டு மெய்யான சான்று பகர்வது எமக்கு முடியாத ஒன்றல்ல. இதன் கருத்தானது சபைப் பிரிவுகளால் எம்மிடையே காணப்படும் வேறுபாடுகளுக்குக் கட்டுப்பட்டு, தடையான எல்லைகளைக்கடந்து சபையை ஒன்றிணைத்து பயணிக்கவேண்டும் என்பதாகும்.

இன்றைய காலத்தில் வாழும் நாம் சபைகளின் ஒன்றிணைப்பிற்காக முயற் சிக்கும் பல நிறுவனங்களைக் காண்கின்றோம். அவற்றுள் சில இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) இலங்கை இறையியல் கல்லூரி (TCL), இலங்கை வேதாகம சங்கம், வாலிப கிறிஸ்தவ இயக்கம் (YMCA), கிறிஸ்தவ வாலிப பெண்களின் சங்கம் (YWCA), கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம் (CWF), போன்றவை ஆகும். இவ்வாறான நிறுவனங்களை இயேசுவின் மகிமையான அமைப்புகளாக பிரிவடையாமல் செயற்படும் ஒரே கிறிஸ்தவ சமுகமாக இனங்காணமுடியும்.

இலங்கை வேதாகம சங்கமானது உரோமன் கத்தோலிக்க சபை உட்பட ஏனைய கிறிஸ்தவச் இயக்கங்களும் இணைந்து செயல்படுவது சமூகத்திற்கு வழங்கும் பெறுமதியான முன்மாதிரியாகும். இதன் மூலமாக இலங்கையில் முக்கியமாக சிங்கள, தமிழ் விவிலியங்கள் உருவாகுவதற்கு இவ்வனைத்து கிறிஸ்தவ பிரிவுகளும் இணைந்துள்ளன. கீழே தரப்பட்ட விவிலியப்பகுதியில் ஒற்றுமையின் செய்தியானது உண்மையாகவே இன்றைய உலகிற்கு மகத்தான முன்மாதிரியைக் கொண்டுவரும்.

**‘‘இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும்<br>அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை<br>ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை<br>கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள்**

**யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்களும் ஆபிரகாமின் வழித் தோன்றல்களுமாய் இருக்கிறீர்கள் வாக்குறுதியின் அடிப்படையில் உரிமைப்பேறு உடையவர்களாயும் இருக்கிறீர்கள்''**

***கலாத்தியர் : 3:28-29***

இவ்வாறு உலகின் பலவிதமான நாடுகளைப்பற்றி சிந்திக்கும் போது ஒரே மதம் ஒரே இனத்திற்கு உரிமையான சில நாடுகளும் காணப்படுகின்றன. யுத்தம் மற்றும் இனங்களுக்கிடையே பிரச்சனைகள் நிலவும் நாடுகள், வேறுபாடுகளினூடாக பிரச்ச னைகளை ஏற்படுத்திக் கொண்டே இருப்பதையும் நாம் காண்கிறோம். இதற்குப் பிரதான காரணமானது ஒவ்வொருவரும் தம்மைக் குறித்தே சுயநலமாகச் சிந்திப்பதும்; பிறரின் பழக்க வழக்கங்களுக்கு மரியாதை அளிப்பதை விரும்பாமையும்; தம்மை உயர்த்தி பிறரைத் தாழ்த்தி அதிகாரம் செய்ய முயற்சிப்பதுமேயாகும். இலங்கையராக மதம், இனம், கலாசாரங்கள் எதுவானாலும் நாம் அனைவரும் ஒரே நாட்டில் வாழ்கின்றவர்களாவோம். எமது நாட்டில் நிலவும் பல்லின, பலசமய, பல கலாசாரங்களினூடாகக் கட்டி எழுப்பப்படும் நல்ல விழுமியங்கள் அனைவருக்கும் பயனுள்ள முறையில் பயன்பட வேண்டும் என்பதனையே இத்திருமறை வசனம் காண்பிக்கின்றது.

இவ்வாறான முக்கியமான ஒன்றிணைப்பின் மூலம் முன்மாதிரியாக வாழ்வது சமூகத்தில் வாழும் கிறிஸ்தவர்களாகிய எமது பொறுப்பாகும். இவ்வாறு வாழும் போது மக்களிடையே இனம், குலம், மதம் என எவ்வித வேறுபாடுகளும் காணப்படக்கூடாது. இலங்கை வாழ் திருச்சபை மக்களிடையே இரு பிரதான இன மக்கள் வாழ்வது விசே டமாகும். இவ்வாறான வேறுபாடுகளை நாம் பயனுள்ளதாக்கிக் கொள்வோம். திருச்ச பையைப் போல் நாட்டிலும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு எமக்கு பொறுப்புக்கள் உண்டு என்பதை நாம் உணரவேண்டும். இவ்வாறு கிறிஸ்துவின் பிள்ளைகளாவதற்கு வேறுபாடுகள் பிரிவுகள் மத்தியில் ஒருமைப்பாட்டுடனும் சகோத ரத்துவத்தோடும் செயற்படுவோம்.

**எபேசியர் : 2:14-16**

பவுல் எபேசியருக்கு எழுதிய இத்திருமுகத்தில் யூதருக்கும் பிற இனத்தாருக்கும் இடையில் இருக்க வேண்டிய இணைப்பை வெளிப்படுத்தி விளக்கியுள்ளார்.
**மேலே குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதியின் கருத்தின் சாராம்சத்தைப் பார்ப்போம்**

இயேசு மனுவுரு ஏற்றதன் மூலம் யூதரையும் பிற இனத்தாரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரைத் தகர்த்தெறிந்தார் என்பது.

பிற இனத்தாரை வேறுபடுத்துவதற்காக காணப்பட்ட பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட சட்டத்தை அழித்தார் என்பது, சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கி கடவுளோடு ஒப்புரவாக்கினார் என்பது.

இவை அனைத்தையும் இயேசு சிலுவைப்பலியின் மூலமாக நிலைநிறுத்தினார். கிறிஸ்தவ சபைகள் வளர்ந்து கொண்டு சென்றாலும் பிற இனத்தவர்கள் சபையில் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவர்கள் யூத சட்டத்திற் கேற்ப விருத்தசேதனத்தைப் பின்பற்றாமையே இதற்கான காரணமாகும். எனவே மக் களுக்குத் தடையாகக் காணப்பட்ட அனைத்துச் செயல்களையும் பவுல் தோல்வியுறச் செய்தார்.

இறை வரப்பிரசாதத்தால் மீட்பைப் பெற்ற ஒருவரைப் பிறஇனத்தவராக பிரித்து வைக்க முடியாது என்பதை பவுல் வெளிப்படுத்தினார்.

***''அவரால்தான் முழு உடலும் இசைவாய்ப் பொருந்தித்
தன்னிடமுள்ள தசை நார்களால் இறுக்கிப்
பிணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் உறுப்பும்
தனக்கே குறிக்கப்பட்ட பணியைச் செய்வதால்
உடல் வளர்ச்சி பெற்று அன்பால் கட்டமைப்புப்
பெற்று வளர்ச்சியடைகிறது.''***

**எபேசியர் :4:16**

இயேசு உயிர்த்தெழுந்து விண்ணேற்றம் அடைந்தபின் ஒருமைப்பாடுடைய விசுவாசி களால் கட்டி எழுப்பப்பட்ட திருச்சபையின் தலையாக இருப்பவர் கிறிஸ்துவே.

சபைகள் பலவாக இருப்பினும் அவையாவும் அவரோடு இணைந்துள்ள அவயவங்களாகும். வேறுபாடுகள் இருப்பினும் கிறிஸ்துவின் அன்பைக்குறித்ததான ஒரே நோக்கத்துடன் சபையின் ஒருங்கிணைப்பைக் கட்டி எழுப்பமுடியும். இன்றைய கிறிஸ்தவர்களான நாம் இதனை உணர்ந்து செயல்படுவோம்.

**செயற்பாடு**

01. புதிய ஏற்பாட்டின் போதனையின்படி பல்சமயச் சூழலில் வேறுபாட்டில் ஒருமைப்பாட்டுடன் செயல்படும் முறைகளை விளக்குக.

02. கிறிஸ்தவர்களாக நாம் ஏனைய மக்களுடன் ஒத்துழைப்புடன் செயற் படக் கூடிய சந்தர்ப்பங்கள் 5 தருக.

# 9 எதிர்நோக்கும் நிலை வாழ்வும்

**எமது வாழ்வின் குறிக்கோள்களை மிகவும் பயனுள்ளதாகவும் இவ்வுலகிற்கும் மறுவாழ்விற்கும் தொடர்பான உண்மைகளை அறிந்து கொள்வதற்கும் எம்மிடம் இருக்க வேண்டிய எமது ஆன்மீக பெறுமதிகளைப் பற்றி அறிந்து கொள்வதும் இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.**

***பிலிப்பியர் 3:7-11. உரோமையர் : 5:1-6. 1பேதுரு 1:13-21***

எமது வாழ்வில் எதிர்பார்ப்பானது சாதாரணமான ஒன்றாகும். ஒவ்வொருவரிடமும் எதிர்பார்ப்பு ஏற்படுவது இயல்பாகும். சாதாரணமாக நாம் எதிர்பார்ப்போடு வாழும் போது அவை நிறைவேறாமைக்குப் பல காரணங்கள் உண்டு. சிலவேளைகளில் எல்லை கடந்த எதிர்பார்ப்புக்களை இந்த வாழ்க்கைப் பயணத்தில் நாம் சுமந்து செல் கின்றோம். பௌதீக, உலகியல் எதிர்பார்ப்புக்கள் எமக்கு அதிகமாகும்போது வெறுப்பும் கவலையும் ஏற்படுகின்றது. இவ்வாறு எதிர்பார்ப்பானது நிறைவேறாதபோது எமது வாழ்க்கை உடைந்து போகின்றது. நாம் எதிர்பார்க்காத நல்ல காரியங்கள் நிகழும்போது மகிழ்ச்சியும், நாம் எதிர்பார்த்த காரியங்கள் நிகழாதபோது துக்கமும் ஏற்படுகின்றது.

நாம் வாழும் இந்த நிரந்தரம் அற்ற உலகின் எதிர்பார்ப்புக்களில் கிறிஸ்தவர்களான எமக்கு மேலான எதிர்பார்ப்பு உண்டு என்பதை மனதிற்கொள்வது அவசியமாகும்.

நாம் பழைய ஏற்பாட்டை நோக்கும்போது ஆபிரகாமின் வாழ்க்கை எமக்கு உதாரணமாகக் காணப்படுகின்றது. ஆபிரகாமிற்கு கடவுள் கொடுத்த வாக்கு றுதிகளை ஆபிரகாம் ஏற்றுக்கொண்டது அவரில் காணப்பட்ட உறுதியான எதிர்பார்ப் பினாலேயாகும். அதனால் அவர் பாரிய அர்ப்பணிப்போடும் பொறுமையோடும் செயற்படும் தன்மையை வளர்த்துக்கொண்டார்.

''உன்நாட்டில் இருந்தும் உன் இனத்தாரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்'' (தொ.நூ:12:1) எனக்கடவுள் கூறியபோது ஆபிரகாம் அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பயணத்தை ஆரம்பித்தார். நாம் முன்னைய பாடத்தில் இவற்றைக் குறித்து அறிந்து கொண்டோம்.

அவ்வாறே, மோசேயும் எகிப்தில் துன்புற்ற மக்களின் முன் வைத்த எதிர்பார்ப்பை நிறைவு செய்வதற்கு பாலைநிலத்தினூடாக கடினமான பயணத்தை மேற்கொள்ள அவர் முன்வந்தது கடவுள்மீது கொண்டிருந்த நம்பிக்கையினால் ஏற்பட்ட எதிர்பார்ப்பினாலாகும்.

ஆபிரகாமும் மோசேயும் தமது தனிப்பட்ட எதிர்பார்ப்புக்களை விட்டு, கடவுள் அவர்களுக்குள் ஏற்படுத்திய எதிர்பார்ப்பை நிறைவேற்ற செயற்பட்டனர். கடவுள் அவர்களோடு இறுதிவரை இருந்தார் என்பது இறைவார்த்தை மூலம் தெளிவாகின்றது.

கிறிஸ்தவர்களின் எதிர் நோக்கானது 'தனக்குமட்டும்.' என ஏற்படுத்திக்கொள்ளும் எதிர்பார்ப்பல்ல. அது எவ்வேளையும் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றத் தூண்டும் எதிர் நோக்காகும். மோசே திரளான மக்கள் கூட்டத்தோடு பாலைநிலம் வழியாக பயணம் செய்து கடவுள் தருவதாக வாக்களித்த நாட்டைப்பெற்றுக் கொள்ளும் எதிர் நோக்கு உடையவராய் இருந்தார். அது அனைத்து மக்களுக்கும் உண்டான ஒரு எதிர் நோக்காகவும் இருந்தது.

கிறிஸ்தவர்களான எமது எதிர் நோக்கானது கிறிஸ்துவே ஆகும். அவர் மீது நம்பிக்கை கொள்ளும் எமது எதிர் நோக்கானது அவரோடு ஒன்றிணைவதேயாகும். இந்த எதிர்நோக்கு நிறைவேறும் நாள் வருகின்றது. அதற்காகக் கடவுள் எமக்கு உதவியளிப்பார். எனவே அப்பாரிய எதிர்நோக்குகளின் மத்தியில் கிறிஸ்தவ வாழ்வைக் கொண்டு செல்வது அவசியமாகும்.

**வாசித்துப் பார்ப்போம்**

**உரோமையர் : 5:1-6**

''அதுமட்டுமல்ல துன்பத்தின் மத்தியில் பொறுமையும் பொறுமையில் நம்பிக்கையான எதிர்நோக்கும் உண்டாகும் என அறிந்து துன்பங்களைத் தாங்கிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி கொள்ளுகிறோம் அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாகக் கடவுளின் அன்பு நம் உள்ளத்தில் பொழியப்பட்டுள்ளது.'' (ரோமையர்:5:4-5)

துன்பங்களை அனுபவிக்கும்போது பெருமகிழ்வு கொள்ள முடிவது யாருக்கு? அப்படிச் செய்யக்கூடியவர் இருந்தால் அவரின் விருப்பம் கிறிஸ்துவானவர் உடைய தாகும். அவ்வாறான மேலான எதிர்நோக்கை நிறைவேற்றுவதற்காக தூயஆவியானவர் கடவுளின் அன்பினை எமக்கு அருள்வாராக.

இவ்வாறான எதிர்நோக்கை நிறைவேற்றுவதற்கு கிறிஸ்தவர்கள் அநேக அனுபவங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். இவ் எதிர்நோக்கில் அடங்கி இருப்பது பொறுமையாகும். எமது எதிர் நோக்கானது மரணத்தோடு முடிவதில்லை என்பதை இயேசுவின் வாழ்வு மரணம் உயிர்ப்பு காண்பிக்கின்றது.

இவ்வாறு பார்க்கும்போது, கடவுள் எமது வாழ்விற்கு உரிமையாகத்தந்த உயர்ந்த கொடையானது நிலை வாழ்வே ஆகும்.

| யோவான்:17:2 | "ஏனெனில் நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை அருளுமாறு மனிதர் அனைவர் மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர்" |
|---|---|

| யோவான்:17:3 | உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும்; நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலை வாழ்வு |
|---|---|

நாம் எதிர்நோக்கும் நிலைவாழ்வின் பூரணத்துவம் இயேசுவின் மூலமாக எமக்கு உரிமையாகின்றது. அதை நிறைவேற்றிக் கொள்வதற்கு எமக்குள் ஏற்பட வேண்டிய வாழ்வின் மாற்றத்திற்கான மூன்று கருத்துக்களை நாம் ஆராய்வோம்.


**வாசித்துப் பார்ப்போம்**

***பிலிப்பியர்*** : 3:7-11

## 1. நீதி

மேலேயுள்ள திருமறைப் பகுதியில் பவுல் நீதியான வாழ்வைக் கட்டி எழுப்புவதற்காக முக்கியமான காரணங்களை முன் வைக்கிறார்.

பவுல் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுமுன் திருச்சட்டத்தைக் கடைப் பிடிப்பதன் மூலம் அனைத்தையும் உரிமையாக்கிக் கொள்ளலாம் என நம்பினார். ஆனால் கடவுள் அவருக்கு உணர்த்தியது கிறிஸ்துவைப்பற்றிய அறிவும் அவரின் மீது கொண்டுள்ள நம்பிக்கையுமே நீதியான வாழ்வின் அடிப்படை என்பதாகும்.







இலவச விநியோகத்திற்காக

## 2. தூய்மை

**வாசித்துப் பார்ப்போம்**

**1 பேதுரு 1:13-21**

**தூயவாழ்வு**

- கிறிஸ்துவை மரணத்திலிருந்து உயிர்தெழச்செய்து மகிமைப் படுத்திய கடவுளை நம்புதல்
- தீய குணங்களுக்கு அடிமையாகாமல் கீழ்ப்படிவுள்ள பிள்ளைகளாக நடத்தல்.
- அமைதியான வாழ்வின் பாதையில் நடத்தல்.
- நடத்தையில் தூய்மையாய் இருத்தல்.
- கிறிஸ்துவின் வாழ்வின் தியாகத்தின் மூலம் தன்னலம் துறத்தல்
- கடவுள் பயத்தில் வாழ்தல்

## பெருமகிழ்வு (உரோமையர்:5:2)

''மேலும் நம்பிக்கையின் மூலம் நமக்குக் கிடைத்துள்ள அருள்நிலையை அடைவதற்காக வழியை ஏற்படுத்திக் கொடுத்தவர் அவர் எனவே எமக்கு உரிமையாகின்ற கடவுளின் மாட்சியில் பங்கு பெறுவோம் என்னும் எதிர் நோக்கில் நாம் பெருமகிழ்வு கொள்வோம்.''

நாம் இவ்வுலகில் அவசியமற்ற காரியங்களில் ஈடுபட்டு மகிழ்வைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றோம். இருப்பினும் எமக்கு அளவில்லா மகிழ்வைப் பெற்றுக் கொள்ளும் நிலைவாழ்வை உரிமையாக்கித்தரும் உயிருள்ள கிறிஸ்துவோடு இணைந்து கொள்வது அவசியமாகும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைக் காணாவிட்டாலும் அவரில் அன்பு கூருகின்றோம். நாம் அவரை இப்போது காணாவிட்டாலும் அவரை நம்புகின்றோம். அந்நம்பிக்கையால் எமது ஆன்மா விடுதலை பெறுகிறது. அப்போது சொல்லமுடியாத மகிமையான பெருமகிழ்வு கொள்வோம். எமது வாழ்வின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

இக்கருத்துக்களை நாம் விளங்கிக் கொள்ளும் போது எமக்குத் தெளிவாவது

யாதெனில், நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ளுதல் தொடர்பான காரியம். கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து எமது இவ்வுலக வாழ்வை உருமாற்றிய வாழ்வாக மாற்றிக்கொள்வதற்காகும். இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக எமக்குள் இருக்க வேண்டிய நீதியும் தூய்மையும் பரிபூரணமான மகிழ்வுமே நிலை வாழ்விற்குக் கொண்டு செல்லும் பிரதான காரியங்களாக அமைகின்றன. இவ்வுலகில் நாம் வாழும் மரணத்தோடான வாழ்வு நிலைபெறுவது கிறிஸ்துவோடு இணைவதன் மூலமேயாகும்.

**செயற்பாடு**

01. நிலை வாழ்வை நோக்கிப் பயணம் செய்வதற்கான வழிகள் யாவை?

02. உங்கள் எதிர்பார்ப்புக்களைப் பட்டியல்படுத்தி இப்பாடத்தின் ஊடாக முன்வைக்கக்கூடிய கிறிஸ்தவ எதிர்நோக்கு அனுகூலமானது என்ன என்பதை எழுதுக?

# 10 ஆதிக்கிறிஸ்தவ சபையின் முன்மாதிரி

**ஆதிக்கிறிஸ்தவ சபையின் ஆரம்பகாலப் பணிகளையும் அவர்களின் முன்மாதிரிகளையும் ஆராய்ந்து பார்த்து கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சிக்காக அதன் மூலம் கிடைக்கும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறைகளைக் கற்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.**

**தி.ப:2:1-3, 2:37-47 4:32-37 5:12-16, 6:1-7**

''சபை'' என்பது கடவுளின் பிள்ளைகளாக ஒருசிலரோ அல்லது அநேகரோ ஒன்றுகூடும் இடம்.

திருச்சபையானது கிறிஸ்தவர்கள் இறைமக்களின் கூட்டமாக இறை சமூகமாக இறைவனை ஏற்றுக்கொண்டு அவரை உலகிற்கு வெளிப்படுத்துவதற்கு ஒன்று கூடும் அனைவரின் மூலமாக கட்டி எழுப்பப்படுகின்றது.

கிறிஸ்தவ சபைகளிலே பலவிதமான பிரிவுகள் இருப்பினும் அவையாவும் ஒரே கடவுளின் மூலமாக போஷிக்கப்படுகின்றது.

கடவுளினால் தீர்மானிக்கப்பட்ட நாளில் இறையரசு பரிபூரணமடையும் அந்த நாள் உதயமாகும் வரை, தூய இறைமக்கள் எனக் கருதப்படுவது திருச்சபையே ஆகும்.

## ஆதித் திருச்சபையின் ஆரம்பம்

சந்தர்ப்பம் : இயேசு உயிர்தெழுந்து (கிறிஸ்தவ பாஸ்காவின்) 50 நாட்களின் பின் பெந்தகோஸ்து விழா கொண்டாடப்படும். (யூதர்களின் அறுவடை விழா)

சிறப்பம்சம் → யூதர்கள் தம் அறுவடையின் முதல் பலனைப் படைப்பதற்கு எருசலேமிற்கு வருவார்கள்.

ஒன்றுகூடும் இடம் → எருசலேமில் இருந்த மேல்மாடி அறை

விசேட நிகழ்வு → சீடர்களும் அவர்களோடு இருந்தவர்களும் இறைவேண்டலில் தரித்திருந்தனர்.

தூயஆவியின் வருகை

விசேட அடையாளம் → கொடுங்காற்று வீசுவதுபோன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி அவர்கள் இருந்த வீடு முழுவதும் ஒலித்தது. (தூயஆவியின் வல்லமையின் வெளிப்பாடு)

நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.
(தூயஆவியின் வல்லமையை உணர்தல்)

அனைவரும் தூயஆவியால் நிரப்பப்பட்டு வெவ்வேறான மொழிகளில் பேசினர்.
(தூயஆவியின் வல்லமையின் எழுப்புதல்)

பிரதிபலன் → பெந்தக்கோஸ்தேதினத்தில் ஏறக்குறைய 3000பேர் திருமுழுக்குப் பெற்று சபையில் சேர்ந்தனர்

ஆதித்திருச்சபையின் ஆரம்பத்தைக் கற்ற எமக்கு வாழ்வின் பிரதான இடத்தைக் கடவுளுக்குக் கொடுத்து அவரோடு இறைவேண்டலில் ஒன்றிணைந்து காலத்தைச் செலவிடும்போது தைரியம் கிடைக்கின்றது. மேலும் கடவுளின் வாக்குறுதியை நிறைவேற்றுவதுடன் விசுவாசத்தோடும் எதிர்பார்ப்போடும் வாழ்வைக் கொண்டு செல்வதற்கு கடவுளின் பிரசன்னமும் வழிகாட்டலும் எமக்குக் கிடைக்கின்றது.

அவ்வாறே நாம் தூயஆவியின் வல்லமையால் பரிபூரண புதுவாழ்வை அனுபவிப்பதில் இடைவிடாது ஈடுபடுவோம்.

ஆதிக்கிறிஸ்தவ சபை

- இடைவிடாத ஜெபவாழ்வு
- மறைத்தூதுப்பணியில் ஈடுபடுதல்
  - மறைத்தூதுப்பணி
  - நலன்புரி பணி

## 1. இடைவிடாத ஜெபவாழ்வு

பெந்தக்கோஸ்தே அனுபவத்தினூடாக தூயஆவியானவரின் வல்லமையால் புதுவாழ்வு பெற்ற கிறிஸ்தவர்கள் தமது ஆன்மீக வாழ்வைவிருத்தி செய்து கொண்டனர். இவ்வாறான புது அனுபவத்தைப் பெற்றுக் கொண்டனர் அவர்கள்,

- இடைவிடாது ஒவ்வொரு நாளும் ஒருமனதோடு தேவாலயத்தில் கூடி வந்தனர்.
- வீடுகள் தோறும் சென்று அப்பம் பிட்டனர்.
- நட்புறவுடன் ஒன்று கூடினர்.
- இடைவிடாது ஜெபத்தில் தரித்திருந்தனர்.
- திருத்தூதர் கற்பித்தலில் ஈடுபட்டனர்.
- கடவுளைப் போற்றி மகிமைப்படுத்தினர்
- இறைபயத்தோடு கடவுளைப் போற்றி வந்தனர்.

ஆதித்திருச்சபையின் ஜெபவாழ்வினூடாக கட்டி எழுப்பப்பட்ட முன் மாதிரியான கிறிஸ்தவர்கள்

- இறை வழிபாட்டில் ஆர்வத் தோடு பங்கு கொள்வர்
- அப்பம் பிட்குதலில் ஒன்றிணைவர்
- ஜெபத்தினூடாக தைரியமாக வாழ்வைக் கொண்டு செல்வர்
- இறைவார்த்தையை ஏற்று அதனூடாக வாழ்வைச் சீர் செய்வர்

## 2. மறைத் தூதுப் பணியில் ஈடுபடுதல்

தூய ஆவியானவரின் வருகையோடு நிகழ்ந்த பெந்தக்கோஸ்து தினத்தில் முதலாவது போதனையை முன்வைத்த பேதுரு ஆதித்திருச்சபையின் மறைத் தூதுப்பணியை பரப்பிய பிரதானமான ஒருவராவார்.

அனைவரும் மனம்மாறி பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு, இயேசுவின்

பெயரால் திருமுழுக்குப் பெற்று, அதன் மூலம் அவர்கள் தூயஆவியின் கொடையை பெற்றுக்கொள்வார்கள் என வெளிப்படுத்தினார். பேதுருவும் ஏனைய சீடர்களும் ஆதித்திருச்சபையின் மறைத்தூதுப்பணியை முன் எடுத்துச் செல்வதற்கு தூயஆவியின் கொடைகளால் போஷிக்கப்பட்ட முறை சிறப்பானதாகும். இவ்வாறு ஆதித்திருச்ச பையானது; மீட்பைப் பெற்ற பெண்களும் ஆண்களும் இணைந்து விசுவாசமுள்ள சபையாக நாளுக்குநாள் விருத்தியடைந்தது என்பதை திருத்தூதர்பணி நூல் சான்று பகர்கின்றது.

இவ்வாறு விரிவடைந்த சபையானது பயணித்துச்சென்ற பாதையை நோக்கும் போது கீழே குறிப்பிடப்பட்ட இரண்டு பிரிவுகளினூடாக தனது சாட்சியை உலகிற்கு வெளிப்படுத்தியது என்பது தெளிவாகின்றது.

அ) மறைத்தூதுப்பணி ஆ) நலன்புரி பணிகள்

## (அ) மறைத்தூதுப்பணியை நிறைவேற்றல்

மறைத்தூதுப்பணியை நிறைவேற்றுதல் தொடர்பான செயல்கள் திருத்தூதர்பணி நூலில்குறிப்பிடப்பட்டுள்ளது.

போதனை செய்வதன் மூலம் நற்செய்திப் பணியை பரப்புதல்.

இயேசுவின் நாமத்தினால் திருமுழுக்குப் பெறுவதன் மூலம் மனந்திரும்பிய வாழ்வை நடாத்துவதற்கு ஊக்கமளித்தல்

அநேக அற்புத அடையாளங்கள் மூலம் இயேசுவில் நம்பிக்கை கொண்டு விசு வாசத்தை வளர்க்கச்செய்தல்.

இயேசுவின் உயிர்ப்பைப்பற்றி பகிரங்கமாகச் சான்று பகர்தல்.

நோயாளர்கள், தீயஆவிபிடித்தவர்களை சுகப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு நலன்கள் புரிதல்.

## (ஆ) நலன்புரிபணியை நிறைவேற்றுதல்

தூயஆவியின் கொடைகளால் புதுவாழ்வை அனுபவித்த ஆதித்திருச்சபையினர் தமது வாழ்வின் ஒரே குறிக்கோளான கிறிஸ்துவை மையமாகக் கொண்டு சிறந்த முறையில் வாழ்ந்தனர் என்பது எமக்குத் தெளிவாகின்றது. தமக்குச் சொந்தமான நிலபுலன்கள் சொத்துக்கள் அனைத்தையும் புதிய முறையில் கையாண்டு, நலன்புரிச் சேவைக்குப் புதிய அர்த்தத்தைக் கொடுத்தனர்.

நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர் எல்லா
உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்.
நிலபுலன்களும் பிறஉடைமைகளும் உடையோர் அவற்றை விற்று
அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப
பகிர்ந்தளித்தனர். (தி.ப:**2:44-45**)

இவைகளில் முக்கியமான பெறுமதிகள் கீழே காணக்கூடியதாக முன் வைக்கப்பட்டுள்ளது

- நலன்புரிப் பணியை ஆற்றுவதற்கு பொதுக்கொள்கைகளும் பகிர்ந்து கொள்ளுதலும் ஆதித்திருச்சபையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- கிறிஸ்தவ சமூகத்தில் சமத்துவமும் சகவாழ்வும் முக்கியமான பெறுமதிகளாகக் காணப்பட்டன.
- நம்பிக்கை கொண்ட சமூகம் ஒருமனதோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர்.
- தமக்கு உரிமையானது எதுவும் தம்முடையது எனக் கருதவில்லை.
- ஒவ்வொருவரும் பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் உணவைப் பகிர்ந்து கொண்டனர். அனைத்தையும் பொதுவாய் வைத்திருந்தனர்.
- தமக்குச் சொந்தமான நிலபுலன்கள் வீடுகள் அனைத்தையும் விற்று அத்தொகையை திருத்தூதரிடம் ஒப்படைத்தனர்.
  -பர்னபா என்னும் யோசேப்பு முன்மாதிரியாவார் (தி.ப:4:31-37)
- சீடர்கள் அப்பணத்தை முறையாக ஒவ்வொருவரினதும் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர்

ஆதித்திருச்சபையில் இப்புதிய முறைப்படி நலன்புரிப் பணிகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு ஏற்பட்ட தடைகள் சிலவற்றையும் காணலாம்.

| | |
|---|---|
| பிரச்சனைகள் : | கிரேக்க கைம்பெண்கள் அன்றாடப்பந்தியில் முறையாகக் கவனிக்கப்படவில்லை என்பதைப்பற்றிய முறைப்பாடு முன்வைக்கப்பட்டது. |
| நடவடிக்கை : | திருத்தூதரும் ஏனைய சீடர்குழுவினரும் கலந்துரையாடி தீர்மானம் எடுத்தனர். |
| கலந்துரையாடல் : | திருத்தூதர்களின் இறைவார்த்தைப் பணிக்கு தடை ஏற்படாவண்ணம் உதவியாளர்கள் மூலம் பகிர்ந்தளிக்கவும் திருத்தூதர்கள் தமது பணியில் உறுதியாய் நிலைத்திருக்கக்கூடிய முறையிலும் தம்மை ஒழுங்கு செய்துகொண்டனர். |
| இறுதித்தீர்வு : | பந்திப் பகிர்ந்தளிப்பை சரியான முறையில் செய்வதற்காக திருத்தொண்டர் குழுவினரை நியமித்தனர். |

| | |
|---|---|
| பதவி வகிப்பதற்கான : தகுதிகள் | நற்சான்று பெற்றவர்களும் தூயஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்கள் |
| திருத்தொண்டர்களாக தெரிவு : செய்யப்பட்ட குழுவினர் | ஸ்தேவான், பிலிப்பு, பிரக்கோர், நிக்கானோர், தீமோன், பர்னமா, நிக்கொலா |
| பதவி ஏற்றல் : | ஏழுபேர் அடங்கிய குழுவினரை திருத்தூதரின் முன் கொண்டு வந்தார்கள். திருத்தூதர்கள் அக்குழுவினருக்காக ஜெபித்தனர். அவர்கள் மீது தங்கள் கைகளை வைத்தனர். |

நலன்புரிப் பணிகளின் தடைகளுக்கு முகம் கொடுத்து அந்த சவால்களை வெற்றி கொண்ட ஆதித்திருச்சபை, தடைகளை அகற்றி செயற்பட்ட செயற்பாடுகளின் பெறு மதிகளை இவ்வாறு காண்போம்.

- தடைகள் ஏற்படும் போது அதற்கான தீர்வைச் செயற்படுத்தல்.
- சமத்துவத்தை உயர்வாகக் கருதுதல்.
- தூய ஆவியின் வல்லமையால் சரியான தீர்மானம் எடுத்தல்.
- கலந்துரையாடலின் மூலம் தீர்வைக் காணுதல்.
- இறை வார்த்தையைப் போதிப்பதற்கு முதலிடம் கொடுத்தல்.
- இறை வேண்டலோடு இறைவழி காட்டுதலைப் பெற்றுக்கொள்ளல்.
- இறைவன் கொடுத்த பெறுமதியான திறமைகளை சபையின் வளர்ச்சிக்காக பயன்படுத்தல்.

தூயஆவியானவர் மூலமாக துணிவையும் வல்லமையையும் பெற்று அனைவரின் போற்றுதலுக்குரியதாக அனுதினமும் வளர்ச்சியடைந்த ஆதிக் கிறிஸ்தவ சபையானது இன்றைய கிறிஸ்தவ சபைகளுக்கும் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் கொண்டுவரும் பிரதான சவாலாகவும் முன்மாதிரியாகவும் அமைகிறது. திருச்சபையின் வழிபாட்டு வாழ்வானது மறைத்தூதுப் பணியினூடாக நலன்புரிப் பணிகளையும் ஊக்கப்படுத்திய ஆதித்திருச்சபையின் பெறுமதிகளைப் பயன்படுத்திக்கொள்வது முக்கியமானது என்பது தெளிவாகின்றது. அவ்வாறே தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்வைத் தைரியப்படுத்திக் கொள்வதற்கான உயர்ந்த முன்மாதிரியாக ஆதித் திருச்சபையினர் விளங்குகின்றார்கள்.

**செயற்பாடு**

01. ஆதித்திருச்சபையின் பண்புகளில் நீர் மிகவும் விரும்பும் ஐந்து பண்புகளை எழுதுக.

02. ‘‘ஆதித்திருச்சபையின் புதிய செயல்முறைகள் இன்றைய கிறிஸ்தவ சபைக்கு முன்மாதிரியாகும்’’ உதாரணத்தோடு விளக்குக.

03. இன்றைய இலங்கையில் மறைத் தூதுப்பணியையும் நலன்புரிப் பணியையும் நிறைவேற்றும் போது முகம் கொடுக்க வேண்டிய சவால் களையும் அதனை வெற்றி கொள்ளும் முறைகளையும் விளக்குக.

# 11 பலன் தரும் பணி

**தூய ஆவியின் வல்லமையால் நிரப்பப் பெற்று புத்துயிரும் செயலூக்கமும் பெற்ற ஆதித்திருச்சபையை வழிநடாத்துவதற்கு அப்போஸ்தலர்களில் தலைமைத்துவத்தை பெற்ற பேதுரு தனது தூதுப்பணியினை நிறைவு செய்த முறையும், பணியின்போது எதிர் கொண்ட சவால்களுக்கு முகம் கொடுத்த முறையையும், அதன் மூலம் கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள் ளக்கூடிய வழிகாட்டல்களையும் இப்பாடத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.**

***திருத்தூதர் பணிகள்*** **2:14-36 3:1-10 4:12-23 10:1-33 12:1-19**

இயேசுவின் சீடர்குழுவின் அங்கத்தவரான சீமோன் பேதுரு சீடர்களுள் ஒரு விசேடமான பாத்திரமாவார். இயேசு முதலில் இவரைச் சந்தித்தபோது சீமோன் என அழைத்தார். திருச்சபை பேதுரு மூலமாகக் கட்டி எழுப்பப்படும் என்பதை அறிந்து பாறை என்னும் கருத்தைக்கொண்ட 'கேபா' என்ற பெயரின் மூலமாக அவரை அறிமுகம் செய்தார். மீனவரான பேதுருவும்' அவன் சகோதரன் அந்திரேயாவும் இயேசு வின் அழைப்பை ஏற்று அவரின் சீடர்களாக தம்மை அர்ப்பணித்தனர்.

''அஞ்சாதே இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்.'' (லூக்கா 5:10) என்று இயேசு சொன்ன வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவரின் பணியில் பங்கு கொண்டு பேதுரு சான்று பகர்ந்தார்.

இயேசுவை கடவுளின் மெசியா என அறிக்கை செய்த முதலாவது சீடன் சீமோன் பேதுரு. இவர் இயேசுவின் பணியின்போது நிகழ்ந்த விசேட சம்பவங்களுக்கு சான்று பகர்பவராக நற்செய்திகள் தெளிவுபடுத்துகின்றன.

பேதுரு இயேசுவை அறியேன் என மூன்று முறை மறுதலித்தாலும், அவரிடம் காணப்பட்ட பலவீனத்தன்மையும் அவர் இயேசுவிடம் காண்பித்த அளவிட முடியா அன்பையும் இயேசு அறிந்திருந்தார்.

இயேசுவின் விண்ணேற்றத்தின் பின் ஆதித்திருச்சபையின் தலைமைத்துவத்தை ஏற்று தலைவராகச் செயற்பட்டவர் பேதுரு.

''பெந்தகோஸ்து'' நிகழ்வின் பின் திருச்சபையில் ஏற்பட்ட புத்தெழுச்சி யின்மூலம் இயேசுவின் பணியினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு பேதுரு செயற்பட்ட முறைகளை நாம் இங்கு ஆராய்ந்து பார்ப்போம்.

## **அருளுரையின் பணி** (திருத்தூதர்பணிகள் 2:14-36)

அச்சத்தோடு இருந்த சீடர்கள் பெந்தகோஸ்து நாளில் தூய ஆவியானவரின் வல்லமையைப் பெற்று புத்துயிர் அடைந்த முறைகளைப்பற்றி கடந்த பாடங்களில் நாம் கற்றோம். தூய ஆவியின் வல்லமையால் நிறைந்து பேதுரு ஆற்றிய அருளுரை திருச்சபையை வலுவூட்டியது. இந்த அருள் உரையின் மூலம்,

முதலாவதாக அவர் அஞ்சாது சகல தடைகளின் மத்தியில் தனது போதனைக்கான பின்னணியை அமைத்தார்.

அதற்காக பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட இறைவாக்கை முறையாக மேற்கோள்காட்டி தனது கருத்துக்களை முன்வைத்தார்.

இயேசுவைக் குறித்து தமது அனுபவத்தினூடாக உரையாற்றினார்.

கிறிஸ்துவைப் பற்றி தாவீது கூறிய முன் அறிவிப்பை பழைய ஏற்பாட்டின் மூலமாக உறுதி செய்தார்.

அனுபவத்தினூடாக பெற்ற நம்பிக்கையின் உறுதியை வெளிப்படுத்தினார்.

நம்பிக்கை சார்பாக பெரும் சவால்களை மக்களுக்கு முன் வைத்தார்.

### **பேதுருவின் முதல் அருளுரை**

- இறைவாக்கினரின் படிப்பினையின் உண்மைகளை விளக்கிக்கூறல்.
- இயேசுவின் பணியின் பெறுமதிகளை விளங்கப்படுத்தல்.
- இறைதிட்டம் உயர்வானது என வெளிப்படுத்தல்.
- மனந்திரும்புதலினூடாக நம்பிக்கையை உறுதி செய்தல்

ஆகியன பேதுருவின் உரையில் முன்வைக்கப்பட்டன.

இயேசுவின் வாழ்வு, மரணம், உயிர்ப்பிற்கு சான்று பகர்பவராக பேதுரு ஆற்றிய போதனை செய்யும் பணியானது கிறிஸ்துவைப் பின்பற்றியோர் தைரியம் இழந்த வேளையில் அவர்களுக்கு புத்துயிர் அளித்தது. பேதுருவின் இவ்வாறான பணியின் முன்மாதிரியை பெறும் கிறிஸ்தவர்கள் மீட்பின் நற்செய்தியை உலகத்தாரிடம் கொண்டு செல்லும் பாரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்காக அர்பணிப்போடு செயற்படுவது அவசியமாகும்.

## ***குணமாக்கும் பணிகள்*** 3:1-10

*எருசலேம் ஆலயத்துக்குச் செல்லும் வாயில்களில் ஒன்று அழகு வாயில் ஆகும். இந்த அழகுவாயில் அண்டையில் அமர்ந்து, பிறவியிலேயே கால் ஊனமுற்ற மனிதனைப் பேதுருவும், யோவானும் குணப்படுத்திய சம்பவம், திருத்தூதர்பணி நூலின்படி திருத் தூதரால் நடைபெற்ற முதலாவது குணமாக்கும் சம்பவமாகும்.*

*பிறவியிலேயே முடமான அந்த மனிதன் பிச்சைகேட்டு ஏதாகிலும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு அங்கு அமர்ந்து இருந்தான். பேதுருவும், யோவானும்*

*''வெள்ளியும் பொன்னும் எம்மிடமில்லை, இருப்பினும் என்னிடம் உள்ளதை உனக்குத் தருகிறேன் நசரேயனாகிய இயேசுவின் பெயரால் எழுந்துநட'' என அவனிடம் கூறினார். உடனடியாக அவன் எழுந்து நடக்கத்தொடங்கினான்.*

*தூயஆவியின் வல்லமையைப் பெற்ற பேதுரு, குணமாக்கும் பணியின் மூலமாக மிகுந்த பலன் கொடுக்கும் பணியினை ஆற்றினார் என்பது இச்சம்பவத்தின் மூலம் வெளிப்படுகின்றது. இக்குணமாக்கும் பணியின் மூலம் கீழே தரப்பட்ட கருத்துக் களை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.*

*பலவீனமான மனிதரைக் குறித்து கவலைப்படுவது, தனது திறமையால் அல்ல என்று காண்பித்து இயேசுவே அதிபதி என்பதை வெளிப்படுத்தல். பணத்தினால் பெற்றுக்கொள்ள முடியாத சுகத்தை கடவுளால் பெற்றுத்தரமுடியும் எனக் கூறுதல். கடவுளின் வல்லமை புதுமையானது என்பதைக் கருத்தில் கொள்வதோடு கடவுளைத் துதித்தல். தடைகளின் மத்தியில் இயேசுவின் நாமத்தில் அஞ்சாது பணி செய்வதில் ஈடுபடுதல். கடவுளின் மூலமாக கிடைக்கும் சுகமானது உடல், உள, ஆன்மீகம் அனைத்திலும் பூரணமாகின்றது.*

## ***சவால்களின் மத்தியில் அஞ்சாது பணி*** (திருத்தூதர் பணிகள்:4:12-23. 12:1-9)

*பேதுருவையும் யோவானையும் தலைமைச்சங்கத்தின் முன்னால் கொண்டு சென்று இயேசுவின் நாமத்தினால் அருஞ் செயல்கள் செய்யாமலும் போதனை செய்யாமல் இருப்பதற்கும் கட்டளையிட்டனர். ஆனால் பேதுருவும் யோவானும் சவால்களின் மத்தியில் புதுப்பெலனோடு அஞ்சாது தமது கருத்துக்களை முன்வைத்த முறைகளை விளங்கிக்கொள்வோம்.*

**திருத்தூதர்பணி**:4:19-20.

சாதாரண மனிதர்களாக இருந்த இவர்களுக்கு ஏற்படும் சவால்களுடனான பணியை நிறைவேற்றுவதற்கு எவ்வாறு முடிந்தது? அதைச்செய்வதற்கு தூய ஆவியின் வல்லமையால் பெலனடைந்து தைரியத்தையும் பெலனையும் பெற்றனர். அதற்கேற்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு பேசுவதற்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயற்படுவதற்கும் தூயஆவியானவர் வழிகாட்டினார் என்பது தெளிவாகின்றது.

## பேதுரு முகம் கொடுத்த சவால்கள்

யூதர்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வதற்காகச் செயற்பட்ட ஏரோது அரசன் பேதுருவைப் பிடித்து சிறையில் அடைத்து கடுங் காவலில் வைத்தான். சிறையில் கடுங் காவல் மத்தியில் தூங்கும்போது தேவதூதன் வந்து நின்று பேதுருவை துரிதப்படுத்தினார். அவரை விடுதலை செய்து நகரின் வெளியே வீதி வழியாய் வந்தபோது தேவதூதன் அவரை விட்டு அகன்றார்.

சவால்களின் மத்தியில் பேதுரு பெற்ற அற்புதமான விடுதலை புதுமையானது. சபையானது பேதுருவிற்காக ஒருங்கிணைந்து இறைவனிடம் வேண்டினர். நாமும் சவால்களைச் சந்திக்கும்போது தூயஆவியானவரின் வல்லமையைப் பெற்று பின்னடையாது இயேசுவுக்காக அஞ்சாது பணிபுரிவோம்.

## தராதரம் பாராது பலன் தரும் பணிகள். (திருத்தூதர்பணிகள் 10-1-33)
## உரோம நூற்றுக்கதிபதியான கொர்னேலியுவின் பின்னணி

இவர் உரோமைப் படைவீரர்களின் தலைவராகச் செயற்பட்ட ஒருவராவார். பலஸ்தீனாவின் செசரியாவில் இருந்த உரோம படைவீரர்களில் 100 பேருக்கு கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்டார்.

கொர்னேலியு இடைவிடாது கடவுளிடம் மன்றாடி வந்தார். அவ்வாறே, மக்களுக்கு தானதர்மங்கள் செய்தார்; தம் வீட்டார் அனைவருடன் கடவுளை வழிபட்டார்; அவர் யூதரல்லாத பிற இனத்தவர்; இரக்க குணமுடையவர்; மதிப்பிற்குரிய ஒருவர்; கடவுளின் விருப்பிற்குப் பாத்திரமானவர்.

யோப்பாவில் தோல் பதனிடும் சீமோனின் வீட்டில் தங்கியிருந்த பேதுரு, கண்ட தரிச னத்தின் பின் அவர் கொர்னேலியுவின் வீட்டிற்கு புறப்பட்டுச் சென்றார்.

## திருத்தூதர்பணி:10:11-17

### இக் காட்சியின் ஊடாக கடவுள் பேதுருவுக்கு கற்பித்தது என்ன?

- கடவுளின் குரலுக்கு பதில் அளிக்க வேண்டும்.
- மனித நீதிக்கு மேலாக கடவுளின் நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.
- எந்த ஒருவரின் தராதரமும் பார்க்கக்கூடாது.
- கடவுளுக்கு எப்பொழுதும் கீழ்ப்படிய வேண்டும்.
- தேவையான அனைவருக்கும் பணி செய்ய முன்வர வேண்டும்.

பெந்தேகோஸ்து நாளன்று யூதர்கள் தூய ஆவியின் வல்லமையான செயல் களை அனுபவித்தனர். புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிற இனத்த வர்கள் தூய ஆவியானவரின் வல்லமையை அனுபவித்த முதலாவது நிகழ்வாக இது காணப்படுகின்றது. எனவே பேதுரு மூலமாக கொர்னேலியுவிற்கும் அவரின் வீட்டாரினருக்கும் நற்செய்தி கொண்டுசெல்லப்பட்டு தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்கள் மேல் கைகளை வைத்தது விசேட நிகழ்வாகும். இதன் மூலமாக இனங்களுக்கிடையே கடவுள் நீதியாகச் செயற்படுகின்றார் என்பது தெளிவாகின்றது.

நற்பலன்தரும் பணியின் மூலமாக தூய ஆவியின் வல்லமையோடு அஞ்சாது சவால்களை வெற்றி கொண்டு தராதரம் பாராது பணி செய்வதையே கிறிஸ்தவர்களாகிய எம்மிடமும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இவ்வாறு பணி செய்த பேதுருவின் முன்மாதிரியானது மிகவும் முக்கியமாகின்றது.

**செயற்பாடு**

01. பேதுருவின் வாழ்க்கை சரிதையில் வெளிப்படுகின்ற குணாதி சயங்களை நிரல்படுத்துங்கள்.

02. அர்த்தமுள்ள பணிகளுக்கான பேதுருவின் முன்மாதிரி என்ற தலைப்பில் கிறிஸ்தவ சஞ்சிகைக்கு கடிதம் வரைக.



இலவச விநியோகத்திற்காக

# 12 வாழ்வின் மாற்றம்

**கிறிஸ்தவ சபையின் மிக உன்னத பணியை நிறைவேற்றிய பவுல் பிற இனத்தவரின் திருத்தூதராக அறிமுகப்படுத்தப்பட்டவர். அவரின் வாழ்க்கைப் பின்னணியையும் வாழ்வின் மாற்றத்தையும் கற்பதன் மூலம் கிறிஸ்துவோடு வாழும் மெய்யான வாழ்வின் மாற்றத்தை உருவாக்கிக் கொள்வதே இப்பாடத்தின் நோக்கமாகும்.**

***தி.ப :7:57-60 8:1-3 9 ம் அதிகாரம் 22:3-5, 27-28, 23:6***

கிறிஸ்தவ சபையின் எழுச்சிக்காகவும் அநேகமான மக்களை கிறிஸ்துவிடம் கொண்டு வருவதற்காகவும் பவுல் செய்து வந்த பணியானது மிகச் சிறப்பானதாகும்.

இயேசுவின் பன்னிரு திருதூதர்களுள் ஒருவரல்லாத பவுல், கிறிஸ்தவ சபையின் விசேட திருத்தூதரைப் போன்று பிற இனத்தவரின் திருத்தூதராக அனைவராலும் வரவேற்கப்பட்டார். புதிய ஏற்பாட்டின் 27 நூல்களில் 13 திருமுகங்களை எழுதி, சபைகளை நிறுவி, கிறிஸ்தவ நற்செய்திப் பணியை முன்னோக்கிக் கொண்டு சென் றார். அப்பயணங்களின் மூலமாக அவரால் நிறைவேற்றப்பட்ட உன்னத பணிக்காக வழிகள் திறக்கப்பட்ட முறைகளை நாம் இங்கு ஆராய்ந்து பார்ப்போம்.

## சவுல் என்னும் பவுல்

பவுல் என்பவர் 'சவுல்' என்ற எபிரேயப் பெயரிலும் 'பவுல்' என்னும் கிரேக்க பெயரிலும் 'பவுலொஸ்' என்னும் உரோமைப் பெயரிலும் அழைக்கப்பட்டார். திருத் தூதர் பணி நூலில் பேதுருவுக்கு அடுத்ததாக பவுலின் பணிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. திருத்தூதர்பணி நூலின் ஆசிரியரான லூக்கா, பவுலை திருச்ச பைக்கு அறிமுகம் செய்யும்போது பவுலொஸ் என்னும் உரோமைப் பெயரையே பயன்படுத்தியுள்ளார்.

## சிலிசியாவின் தர்சு நகரில் பவுலின் பின்னணி

பவுல் சிலிசியாவின் பிரதான நகரான தர்சு நகரில் பிறந்ததாகக் கருதப்படுகின்றது பவுலின் காலத்தில் தர்சு நகர் மத்தியதரைப் பகுதியில் உருவான பாரிய வணிக மையமாகவும், செல்வந்த நகராகவும் காணப்பட்டது. இது பல்கலைக் கழகங்கள் உள்ள நகரம்; பல இனமக்கள் வாழும் சனத்தொகை நிறைந்த நகரம்; பலவித மொழிகளையும் பயன்படுத்தும் நகரம்; உரோமை நகர் முழுவதும் பரவி இருந்த மேதைகளும் மெய்யியல் அறிஞர்களும் அடிக்கடி வந்து போகும் பிரபல்யமான நகராகும். இவ்வாறான பின்னணியில் பவுலுக்கு பல இனத்தவரோடு பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. யூதபழக்க வழக்கங்களில் நம்பிக்கை கொண்டவராகவும். கிரேக்க மொழியில் மிகவும் திறமை பெற்றவராகவும் பவுல் விளங்கினார். விசேடமாக இங்கிருந்த பல்கலைக் கழகங்களில் தர்க்கவியலாளர்களோடு விவாதித்து அறிவையும் கல்வியையும் வளர்த்ததோடு ஸ்தோயிக்க அறிஞர்களோடு வாதிடும் திறமைகளையும் கொண்டவராக பவுல் காணப்பட்டார்.

## யூதப் பின்னணி

இவர் யூதப்பற்றுடைய ஒருவர்; பெஞ்சமின் குலத்தைச் சேர்ந்தவர்; யூதர்கள் பயன்படுத்திய எபிரேய மொழியை நன்கு அறிந்திருந்தவர்; யூத பழக்கங்களில் மிகவும் அக்கறை காட்டினவர்; யூத ஆண்பிள்ளைகளுக்கான 'சினகோக்' கில் கல்வியைப் பெற்று, செனகரிம் சபையின் அங்கத்தவரான கமாலியேல் என்னும் புகழ் பெற்ற யூத ஆசிரியரிடம் உயர் கல்வியைப் பெற்றார்; கிரேக்க தத்துவ இலக்கிய கலாசாரங்களையும் வழமையிலிருந்த மறையையும் கற்பதில் ஈடுபட்டார். இளவயது முதல் சுய தொழிலான கூடாரம் அமைப்பதையும் அறிந்திருந்தார்.

## பரிசேயனான பவுலின் சமயப் பின்னணி

பரிசேயர் என்னும் சமயக்குழுவினர் பிறசமூகக் குழுவினரிடமிருந்து பிரிந்து உயர்ந்த சமயக்குழுவினராக தம்மை அறிமுகம் செய்தனர். பரிசேயர் என்பதன் அர்த்தம் ''பிரிக்கப்பட்டவர்கள்.'' இவர்கள் யூத சமயச் சட்டங்களை கடைப்பிடிக்க யூதர்களை வழிநடத்தினார்கள்.

பவுல் பரிசேய மரபில் பிறந்த ஒரு பரிசேயன். சமய முறைகளையும் நீதிச்சட்டங்களையும் கடைப்பிடிப்பதில் ஆர்வமுள்ளவர்; பரிசேய முறையை வழமையாகக் கொண்டு யூதசமய பழக்க வழக்கங்களைக் கைவிடாது கடைப்பிடித்துச் சென்றதை கெங்கிரேயா நகரில் முடிவெட்டிக் கொண்டதும் (தி.ப:18:18) திமொத்தேயுவை விருத்தசேதனம் செய்ததும் (தி.தூ.ப:16:2) மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

பரிசேயனாக யூத சமயத்தின் அடிப்படையான பஞ்சாகமத்தைக் (தோரா)கற்பதற்கு அவரால் முடிந்தது. யூதர்களின் பிரதான செனகரிம் சபையில் அங்கத்தவராக செயற்பட சந்தர்ப்பம் கிடைத்தது. (தி.ப.26:10)

பிற்காலத்தில் யூதர்களிடையே நற்செய்தியைக் கொண்டு செல்வதற்கும்; கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கும்; விவாதம் செய்து கொள்வதற்கும்; யூதர்களின் பொதுச்சங்கத்தின் முன் செல்வதற்கும் கிடைத்த சந்தர்ப்பத்தில் பரிசேயன் என்ற ரீதியில் தனக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. (தி.ப.23:6-9)

### உரோமைக் குடிமகனான பின்னணி

பவுல் பிறப்பிலேயே உரோமைக் குடியுரிமையைக் கொண்டவர் (தி.ப:22: 27-28); புகழ் பெற்ற செல்வந்த யூதக் குடும்பத்தில் தனது தந்தையின் வழிமரபில் வந்த வரப்பிரசாதமான குடியுரிமைக்கு உரிமையாளர் ஆனார். உரோமை நகரின் தர்சு பட்டணத்திலுள்ள அனைத்து செல்வந்த குடும்பத்தினரும் இதனைப் பெற்றுக் கொள்ளமுடியாதிருந்தது. பவுலுக்கு இக்குடியுரிமை புகழ்பெற்ற செல்வந்தக் குடும்பமான தந்தையின் தந்தை மூலமாகக் கிடைத்த வரப்பிரசா தமாகும். பொதுவாக உரோமைக் குடியுரிமையைப் பெற்ற ஒருவருக்கு இரண்டு பெயர்கள் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறே பவுலுக்கும் எபிரேயப்பெயரும் உரோமைப் பெயரும் பயன்படுத்தப்பட்டது. பவுல் எபிரேயப் பெயரின்படி தனது பின்னணியையும் உரிமையையும் நிலைநாட்டியதோடு, உரோமைப் பெயரின் மூலம், தர்சு வாசியான பவுலுக்கு, அவரின் பின்னைய காலப்பணிக்கு இக்குடியுரிமை எவ்வளவாக உதவியது என்பதை திருத்தூதர்பணி நூலில் காண்கிறோம் (தி.ப:22:25-28). மற்றும் இதன் மூலம் சமூகத்தில் தனக்கு நீதியை நிலைநாட்டிக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

## கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துதல்

யூதர்களிடையே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டோர் நாளுக்கு நாள் மிக அதிகமாக பலஸ்தீனாவிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் பரவிச்சென்று ஆங்காங்கே கிறிஸ்தவ மதத்தை வளர்த்தனர். இது யூத மதத்திற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. யூத மதத்தில் மிகவும் வைராக்கியம் கொண்ட பரிசேயனாகிய சவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தது இவ்வாறான சூழலிலேயாகும்.

துன்பத்தாலும், கொடுமைகளாலும் பாதிக்கப்பட்டு மரணத்தைச் சந்தித்தாலும் கூட கிறிஸ்துவைப் பின்பற்றியோர் தமது இறைநம்பிக்கையில் தளர்ச்சி அடைய வில்லை. இவர்கள் சவுல் என்னும் பரிசேயனின் கடுமையான துன்புறுத்தல்களுக்கு

உள்ளானார்கள். இருப்பினும் கிறிஸ்துவைப் பின்பற்றுவோரின் தொகை அதிகரித்ததே அன்றி குறையவேயில்லை. அவர்களுக்கு சீரிய அந்தியோக்கியாவில் முதலாவதாக ''**கிறிஸ்தவர்கள்**'' என்ற பெயர் கிடைத்தது (தி.தூ.ப:11:20). அன்று காணப்பட்ட இந்த துன்புறுத்தல்கள் பவுலின் தலைமையிலே நிகழ்ந்தன.

| | |
|---|---|
| ஸ்தேவானுக்கு கல்லெறியும் சந்தர்ப்பத்தில் | → கல்லெறிந்தவர்களின் உடைகளைப் பாதுகாத்தார்.(தி.ப:7:57-60) |
| ஸ்தேவானைக் கொலை செய்வதற்கு | → சவுல் உடன்பட்டிருந்தார் (தி.ப:8:1) |
| ஸ்தேவானின் மரணத்தினால் துக்கித்து புலம்பிய சந்தர்ப்பத்தில் | → சவுல் வீடுவீடாய் நுழைந்து ஆண்களையும் பெண்களையும் பிடித்து சிறையிலடைத்து திருச்சபையை அழித்தார். (தி.ப:8:3) |
| இயேசுவின் சீடர்களிடம் சென்று | → அவர்களைக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்தி வந்தார். (தி.ப:9:1) |
| கிறிஸ்தவ ஆண் பெண் யாவரையும் பிடித்து எருசலேமிற்கு கொண்டு செல்வதற்காக, தமஸ்குவின் தொழுகைக் கூடங்களுக்கு அறிவிப்பதற்காக. | → தலைமைக் குருக்களிடம் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொண்டார். (தி.ப:9:2) |

### வாசித்துப் பார்ப்போம்

**தி.ப:22:4-5**

யூத மதத்தைப் பாதுகாப்பதற்காக செயற்பட்ட சவுல் புதுமையான அனுபவத்தினூடாக வாழ்வின் மாற்றத்திற்குட்பட்டார். கீழே குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் அவற்றைத் தெளிவுபடுத்துகின்றன.

1. துன்பங்கள் மத்தியில் கிறிஸ்தவர்களிடையே காணப்பட்ட உறுதியான இறை நம்பிக்கை.
2. கிறிஸ்தவ சபையின் முதலாவது மறை சாட்சியாக ஸ்தேவான் மரணத்திற்கு பயமின்றி முகம் கொடுத்தமை, வாழ்வின் முன்மாதிரி, இவை பவுலின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கருதலாம்.
   ''ஆண்டவராகிய இயேசுவே எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்''
   ''ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்''
   (தி.ப:7:59-60)

## சவுலின் வாழ்வின் மாற்றம்

### தி.ப: 9ம் அதிகாரம்

சவுல் தமஸ்குவை நோக்கிப் பயணம் செய்தார்.

| | |
|---|---|
| குறிக்கோள் | → தமஸ்குவிலுள்ள கிறிஸ்தவர்களைக் கைது செய்தல் |
| புதுமையான அனுபவம் | → திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்தது. பார்வையற்றவராக கீழே விழுந்தார். அப்போது ஒரு குரலைக் கேட்டார். ''சவுலே சவுலே ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்'' (தி.ப:9:4) |
| சவுலின் பதில் | → ''ஆண்டவரே நீர் யார்?'' (தி.ப:9:5) |
| அவர் கேட்ட புதுமையான குரல் | → '' நீ துன்புறுத்தும் இயேசு நானே'' (தி.ப:9:5) |
| ஆலோசனை | → நீ எழுந்து நகருக்குள் செல். நீ என்ன செய்யவேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும். |
| சவுலின் மூன்று நாள் அனுபவம் | → பார்வை இழந்திருந்தார். உண்ணவும் இல்லை. குடிக்கவும் இல்லை (தி.ப:9:9) |

### சவுலிடம் சென்று அவர் மீது கை வைத்தது போன்று அனனியா கண்ட காட்சி

இக்காட்சியில் சவுலின் பணியைப்பற்றி அறிந்து கொள்ளலாம். ''அவர் பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார்'' கடவுளின் பெயரின் பொருட்டு அவர் எத்துணை துன்புறவேண்டும் எனவும் அறியலாம்.

மேலும் அனனியா கை வைத்ததன் பின் சவுல் பார்வை பெற்று தூயஆவியால் நிறைந்து திருமுழுக்கு பெற்றார்.

### மனம் மாறியபின் பவுலின் பணி (தி.ப : 9:20-31)

- தமஸ்குவில் சீடர்களுடன் தங்கியிருந்தார்.
- இயேசுவைக் குறித்து தொழுகைக்கூடத்தில் போதித்தார்.
- இயேசுவே இறைமகன் என்று பறை சாற்றினார்.
- தமஸ்குவில் யூதர்களின் எதிர்பார்ப்பின் மத்தியில் பயமின்றிச் செயற்பட்டார்.
- சவுலுக்குக் கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டது.

- அவரோடிருந்தவர்கள் இரவில் அவரைக்கூடையில் வைத்து நகர மதில் வழியாக இறக்கிப் பாதுகாத்தனர்.
- அவர் எருசலேமிற்கு வந்தார்.
- சீடர்கள் அவரை நம்பவில்லை.
- பர்னபா சீடர்களுக்கு அவரை அறிமுகம் செய்தார்.
- கிரேக்க மொழி பேசும் யூதர்களோடு விவாதித்தார்.
- கொலை அச்சுறுத்தலினால் செசரியாவிற்கும் அங்கிருந்து தர்சுவுக்கும் சென்றார்.

இவை அனைத்திற்கும் முகம் கொடுத்த சவுல், தூய ஆவியால் நிறைந்து சபைகள் விரைவாக விருத்தி அடைவதற்குப் பங்களித்தார்.

பவுலின் மனமாற்றத்தின் அனுபவத்திற்கூடாக நாம் பெறும் முன்மாதிரிகள்

1. பலவித நிலைகளிலும் கடவுளுக்காகச் செயற்படுவதற்கு எம்மைத் தெரிவு செய்தார்.
2. எவ்வகையான நிலையிலும், எவ்வகையான சந்தர்ப்பத்திலும் அழைப்பின் குரலுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.
3. எமது தனிப்பட்ட தீர்மானங்களைவிட மேலான கடவுளின் தீர்மானத்துக்கு செயற் படுதல்.
4. எமது அறிவைக் குறித்து பெருமை கொள்ளாது கடவுளின் பணிக்கு இடமளித்தல்.
5. கிறிஸ்துவின் வழி இலகுவானதல்ல, எனினும் துன்பங்கள் பிரச்சனைகளுக்கு தைரியத்தோடு முகம் கொடுத்தல்.
6. கடவுளின் திட்டத்தை நிறைவு செய்யும் போது முகம் கொடுக்கும் துன்பங்களில் தூய ஆவியின் வல்லமையால் பெலனடைதல்.
7. எப்போதும் எமக்கு விருப்பமான வழியைத் தெரிவு செய்வது கடவுளின் விருப்பமென எண்ணக்கூடாது.
8. ஜெபத்தினூடாக வாழ்விற்கு முகம் கொடுப்பது அவசியம்.
9. இயேசுவைத் தனிப்பட்ட முறையில் சந்திப்பதால் வாழ்வில் புத்தொளி நிகழ் கின்றது என்பது.
10. எமது வாழ்வின் உரிமை கடவுளிடம் இருக்கின்றது என்பது.

எமது வாழ்வின் பின்னணியில் இயேசுவை அறிந்து கொள்வோம் இவர் எம்முள்ளத்தில் செயற்பட இடம் கொடுப்போம். அவருடன் இடைவிடாத தொடர்பில் இணைவோம் மெய்யான வாழ்வின் புது உதயத்தை அனுபவிப்போம்.

**செயற்பாடு**

01. பவுலின் மனமாற்றம் அன்று கிறிஸ்தவ திருச்சபைக்கு தாக்கத்தை ஏற்படுத்திய முறையை விரிவாக விளக்குக.

02. ‘‘கிறிஸ்துவுக்குள் உண்மையான வாழ்வின் மாற்றம்’’ என்ற தலைப்பில் கிறிஸ்தவ சஞ்சிகைக்கு கடிதம் எழுதுக?

# 13 கூட்டுத் தலைமைத்துவத்தின் வெற்றி

**பவுலும் பர்னபாவும் முதல் தூதுரைப் பயணத்தினூடாக கூட்டுத் தலைமைத்துவத்துடன் செயற்பட்ட முறையைக் கற்பதுடன் கூட்டுத் தலைமைத்துவத்தின் நற்பலன்களை வாழ்வினூடாக அனுபவிப் பதற்கு வழிநடத்தப்படுவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.**

***திருத்தூதர் பணிகள் 11:26 12:25, 13-14 ம் அதிகாரங்கள், 15: 1-35***

தூயஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டு நம்பிக்கை நிறைந்த நல்ல சீடரான பர்னபாவின் மூலம் சவுல் எருசலேமில் உள்ள ஏனைய சீடர்களுக்கு அறிமுகப்படுத் தப்பட்டார். பர்னபா சீரிய அந்தியோக்கியாவுக்கு வந்தபோது திருச்சபையானது நாளுக்கு நாள் விருத்தியடைந்தது. சபையை மேலும் போசிப்பதற்கான அவசியத்தை உணர்ந்த பர்னபா, தர்சு நகரில் இருந்த சவுலை அந்தியோக்கியாவிற்கு அழைத்து வந்தார் (தி.ப. 11:26). அவர்கள் இருவரும் அந்தியோக்கியா சபையாரோடு இணைந்து ஓராண்டு முழுவதும் அவர்களோடு இருந்து அவர்களுக்குக் கற்பித்து கடவுளின் வார்த்தையால் அம்மக்களைப் போசித்தனர்.

**சீரிய அந்தியோக்கியாவில் கிறிஸ்தவ சபை**

*அந்தியோக்கியா முதன்முதல் யூதரல்லாத பிற இன கிறிஸ்தவர்கள் அங்கம் வகித்த கிறிஸ்தவ சபையாகும். இதில் சிலர் இறைவாக்கினராகவும், போதகராகவும் பணிபுரிந்தனர். அவர்களின் பெயர்களாவன பர்னபா, நீகர் எனப்படும் சிமியோன், சிரேன் ஊர் லூக்கியு, மனாயீன்சவுல் என்பவர்களாகும். அந்தியோக்கியாவிலே முதன்முறையாக 'கிறிஸ்தவர்கள்' என்ற பெயரை சீடர்கள் பெற்றனர். அகபு என்னும் இறைவாக்கினர் உலகம் எங்கும் கொடிய பஞ்சம் ஏற்படப்போகின்றது என்ற இறைவாக்கை முன் வைத்தார். கிளாதியு பேரரசன் காலத்தில் இப்பஞ்சம் ஏற்பட்ட போது அந்தியோக்கிய சபையின் அங்கத்தவர்கள் தங்களால் இயன்ற பொருளுதவியை பர்னபா, சவுல் கையில் கொடுத்து யூதேயா சபையின் சகோதரர்களுக்கு உதவினார்கள் என்பதைக் காண்கிறோம். மேலும் இச்சபையினர் நோன்பிருந்து, ஆண்டவரை வழிபட்டு, தூயஆவியின் வழிகாட்டலை வேண்டித் தங்கள் கைகளை அவ்விருவர் மீதும் வைத்து, முதல் மறைத்தூதுப் பயணத்திற்கு ஊக்கமளித்தர்.*

**வாசித்துப் பார்ப்போம்**

## தி.ப : 13-14 ம் அதிகாரங்கள்.

- கூட்டுத் தலைமைத்துவத்திற்காக அழைக்கப்பட்டோர் சவுல் எனப்பட்ட பவுல், பர்னபா, யோவான் என்னும் மாற்கு (உதவியாளர்.)


- சீரிய அந்தியோக்கியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. (தி.தூ.ப:13:1-3)

- செலூக்கியாவில் கப்பலேறுதல் (தி.தூ.ப.13-4) செலூக்கியா சீரிய அந்தியோக்கி யாவின் துறைமுக நகராகும்.

- சைப்பிரஸ் தீவின் சாலமி (தி.தூ.ப :13:4-5)

இது பர்னபாவின் பிறப்பிடம் இங்கு அநேக யூதமக்கள் இருந்ததாக சான்றுகளுண்டு. சவுலும், பர்னபாவும் யூதர்களின் தொழுகைக் கூடத்திற்கு சென்று கடவுளின் வார்த்தையை அறிவித்தனர். அங்கு கூட்டுத்தலைமைத்துவத்துடன் கடவுளின் வார்த்தையை அறிவித்ததின் முக்கியத்துவம் உறுதியாகின்றது. இங்கு யோவான் எனப்படும் மாற்கு அவர்களின் உதவியாளராக இருந்தார்.

## பவுலின் தூதுரைப் பயணம் - 1



## பாப்போ (தி.ப 13: 6-12)

செர்கியு பவுல் எனும் அறிஞரான உரோம ஆட்சியாளரோடு மந்திரவாதியான பாரேசு எனும் பெயருடைய எலிமா (கிரேக்க பெயர்) இணைந்து செயற்பட்டார். இவர் யூத இனத்தின் போலி இறைவாக்கினர். பவுலும் பர்னபாவும் அவனைச் சந்தித்தனர். தலைவனான செர்கியு பவுல் கடவுளில் நம்பிக்கை கொள்ளாதபடி அவரின் கவனத்தைத் திருப்பமுயன்றான். தலைவனான செர்கியு பவுல் எடுக்க வேண்டிய சரியான தீர்மானத்திற்கு எதிராக, தவறாக வழிகாட்ட செயற்பட்ட மந்திரவாதிக்கு தீமையான அனுபவத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டது. (தி.ப.13:10-11) இச்சம்பவத்தினூடாக...

- செர்கியு பவுலுக்கும் பாரேசுக்கும் இடையில் இருந்த தவறான கூட்டுச் செயற்பாடு எமக்கு தெளிவாகின்றது.
- பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையில் காணப்பட்ட சிறந்த ஒற்றுமையின் கூட்டுத் தலைமைத்துவத்தில் சரியான தீர்மானங்கள் எடுத்த முறைகள் தெளிவாகின்றன.
- பவுல் பர்னபா இருவரின் கூட்டுத் தலைமைத்துவத்தில் சரியான சிறந்த தீர்மானங் களை எடுப்பதற்கு தைரியத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொண்ட முறைகள் தெளிவாகின்றன. திருத்தூதர் பணி நூலில் சவுல், முதன்முதலாக ‘‘பவுல்’’ என்ற கிரேக்கப் பெயரில் அறிமுகப்படுத்தப்படுவது இந்த சந்தர்ப்பத்திலேயாகும்.

## பம்பிலியாவிலுள்ள பெருகை (தி.தூ.ப. 13:13)

கூட்டுத் தலைமைத்துவத்துடன் பம்பிலியாவிலுள்ள பெருகை என்னும் இடத் திற்கு வந்த பின் அவர்களின் உதவியாளரான யோவான் எனப்படும் மாற்கு கூட்டுத் தலைமைத்துப் பணியில் இருந்து விலகி திரும்பிச் சென்றதைக் காண்கிறோம். இவர் பணியைவிட்டு திரும்பிச் சென்றாலும் பிற்காலத்தில் மறைத்தூதுரைப்பணிக்காக பவுல் இவரை மிகவும் பயனுள்ள பணியில் ஈடுபடுத்தினார் என்பது தெளிவாகின்றது. (கொலோசையர் 4: 10)

## பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியா (தி.தூ.ப:13:14-52)

இங்கு பவுலும் பர்னபாவும் தொழுகைக்கூடத்தில் இருந்த மக்களுக்கு அங்கிருந்த தலைவர்கள் கேட்டுக் கொண்டதால், பல ஓய்வு நாட்களில் கடவுளின் வார்த்தையை அறிவித்தனர். இங்கு பூரணமான ஒரு போதனை பவுல் மூலமாக முன்வைக்கப்பட்டது. இஸ்ரயேலரின் வரலாற்றில் ஆரம்ப முதல் இயேசு வரையிலான கருத்துக்கள் அப்போதனையில் காணக்கூடியதாக இருந்தது.

**தி. ப.** 13; 16-42

கூட்டுத்தலைமைத்துவம். மூலம் பவுல் பொறுப்பையும், தூயஆவியால் நிறைந்து போதனை செய்யும் நல்ல பலனையும், பெற்றுக்கொண்டார் என்பது தெளிவாகின்றது. அதன்மூலம்

- அடுத்து வரும் ஓய்வுநாளிலும் போதனை செய்வதற்கான அழைப்பு கிடைத்தது
- யூத மதத்திற்குத் திரும்பிய பிற இன விசுவாசிகள் அநேகர் கூட்டுப்பணியில் இணைந்தனர்.
- அவர்களுக்கு எச்சரிக்கை செய்யவும் அறிவுரை வழங்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது.
- அடுத்து வந்த ஓய்வுநாளில் ஆண்டவரின் வார்த்தையைக் கேட்க நகரத்தார் அனைவரும் கூடிவந்தனர்.

அத்துடன் பவுல், பர்னபாவுக்கு எதிராக எழுந்த தீய சக்திகளைக் கூட்டுத் தலைமைத்துவத்தின் ஊடாக பயமின்றி தோல்வி அடையச்செய்ய அவர்களால் முடிந்தது. தூய ஆவியின் வல்லமையையும் மகிழ்சியையும் இடைவிடாது அனுபவித்தார்கள்.

## இக்கோனியா (தி:தூ.ப:14:1-6)

இக்கோனியாவிலுள்ள தொழுகைக் கூடத்திற்கு, அதாவது சினக்கோக்கு செல் வதற்கு கூட்டுப்பணியாளர்கள் பின்னடையவில்லை அங்கே அநேக யூதர்களும், கிரேக்கரும் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டனர். ஆனால் இங்கு அவர்களுக்கு எதிராக எழுந்த யூதரின் தடைகளைபயமின்றி வெற்றி கொண்டு இறை வல்லமையோடு அவர்கள் அங்கு பலநாள் தங்கியிருந்து அநேக அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் செய்தார்கள். எனினும் பிற இனத்தாரும், யூதரும் தம் தலைவருடன் சேர்ந்து திருத்தூதர்களை இழிவுபடுத்தி, கல்லெறியத் திட்டமிட்டனர். இதனால் திருத்தூதர்கள் அங்கிருந்து வெளியேறினர். இவை கூட்டுத் தலைமைத்துவத்தின் ஒற்றுமையின் மூலமாக நிகழ்ந்த நன்மையான பலன்கள் ஆகும்.

## லிஸ்திரா (தி.தூ.ப: 14: 8-18)

யூதர்களின் வாக்குவாதங்கள் அமளிகள் மத்தியில் இக்கோனியாவிலுள்ள நகரான லீஸ்திராவுக்கு தப்பிச்சென்று இவர்களின் அடுத்த தொடர்சியான மறைத் தூதுரைப்பணியைச் செயற்படுத்தினர். பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த மனிதனுக்கு இங்கு சுகம் கிடைத்தது. பவுலின் பேசும் திறனும் ஆற்றலும் இதன் மூலம் வெளிப்படுகின்றது.

**கூட்டுத் தலைமைத்துவத்தின் மூலம் சுகமாக்கும் வல்லமையைக் கண்ட மக்களின் பிரதி நடத்தை**

1.''தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன''

2. பவுல் பிரதான பேச்சாளர் ஆனபடியால் "எர்மசு" என்னும் கிரேக்க தெய்வத்தின் பெயரால் அறிமுகம் செய்யப்பட்டார்

3. பர்னபா "சேயுசு'' என்னும் கிரேக்க தெய்வத்தின் பெயரால் அறிமுகம் செய்யப்பட்டார்

4. அவர்களுக்காக காளைகளையும் பூமாலைகளையும் பலியிட விரும்பினர்

பவுலும் பர்னபாவும் தமது உடைகளை கிழித்துக் கொண்டு அவர்களுக்கு கொடுத்த பதிலானது.

''மனிதர்களே ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் நாங்கள்
உங்களைப்போன்ற மனிதர்கள் தாம்.'' நீங்கள்இந்த
பயனற்ற பொருள்களை விட்டுவிட்டு விண்ணையும்
மண்ணையும் கடலையும் அவற்றில் அனைத்தையும்
உண்டாக்கிய வாழும் கடவுளிடம் திரும்புங்கள் என்ற
நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம்.''
தி.ப:14:15

இதன்மூலம் நாம் விளங்கிக் கொள்வது.

1. கூட்டுத் தலைமைத்துவத்தில் கடவுளுக்குரிய மேன்மையை கடவுளுக்கு மட்டுமே பெற்றுக் கொடுப்பதற்கும், தமக்கு எந்த ஒரு பெருமையையும் எடுத்துக் கொள்ளாமல் தாழ்மையான நடத்ததையையும் காண்பித்தல்.
2. தவறான காரியங்களுக்கு எதிராக எழும்புதல் (காளைகள் பூமாலைகளோடு பலியிட ஆயத்தமாதலைத் தடுத்தல்)
3. எவ்வாறான துன்பங்கள் மத்தியிலும் நற்செய்தியைப் போதிப்பதில் பின்னடையாமை.
4. மரணத்திற்கு ஏதுவான துன்பத்தின் முன்னாலும் துணிவுடன் செயற்பட்டனர் என்பது மேலும் உறுதியாகின்றது. (தி.தூ.ப:14:19-20)

## தெருபை (தி.தூ.ப:14:20-21)

கூட்டுத் தலைமைத்துவத்தின் மூலம் இந்நகரில் நற்செய்தி அறிவித்து பலரைச் சீடராக்க முடிந்தது விசேடமான செயலாகக் காணப்படுகின்றது.

## பயணத்தை முடித்து திரும்பிச் செல்லல்

லிஸ்தீரா ⟶ இக்கோனியா ⟶ பிசிதியா அந்தியோக்கியா ⟶ பம்பீலியா.

தெருபை (தி.ப :14:21-24)

- அத்தாலியாவில் கப்பலேறினார்கள். (தி.ப :14:25)
- கூட்டுத்தலைமைத்துவத்துடன் பணி முடிந்த இடம். சீரிய அந்தியோக்கியா (தி.ப:14:26)
- கூட்டுத் தலைமைத்துவத்தின் பொறுப்பை பூரணமாய் நிறைவு செய்தல். (தி.ப:14:21-28)

சீரிய அந்தியோக்கியாவிற்கு சென்று சபையைக்கூட்டி தமது மறைத் தூதுப்பணியைப் பற்றி சான்று பகர்ந்து சபைக்கு அறிவூட்டினர்.

**அவர்களின் மீள்பயணத்தின்போது கூட்டுத்தலைமைத்துவத்தினூடாக நிகழ்ந்த உயரிய பண்புகள்**

- இறையாட்சிக்காக துன்புறும் அவசியத்தை தெளிவுபடுத்தல்.
- சீடர்களை ஊக்குவித்தல்.
- விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க போதனை செய்தல்.
- சபையின் விசுவாசிகள் மூலமாக சபைத்தலைவர்களை நியமித்தல்.
- நோன்பிருந்து இறைவனிடம் வேண்டி விசுவாசிகளை ஆண்டவரிடம் ஒப்படைத்தல்.
- நற்செய்தியைப் போதித்தல்.

அந்நகரில் முகம் கொடுத்த நிகழ்வுகள் பயங்கரமானது என அறிந்தும் மீண்டும் அந்நகருக்குச் சென்று சபையின் ஒருங்கிணைப்பிற்கு உதவி செய்வது கூட்டுத் தலைமைத்துவத்தின் முக்கியத்துவமாகின்றது.

## எருசலேம் சங்கம் (தி.ப:15:1-35)

இப்பொதுசங்கத்தில் பவுலும் பர்னபாவும் சென்ற முதலாவது மறைத்தூதுப் பயணத்தின் விளைவுகளை சாராம்சப்படுத்தினர். பொதுசங்கத்தின் தலைவராக இயேசு வின் சகோதரன் யாக்கோபு இருந்தார்.

**அங்கே மேலோங்கிய பிரச்சனைகள்** → பிற இனத்தவர் விருத்தசேதனம் செய்வதற்கும் மோசேயின் சட்டத்தை கடைப்பிடிப்பது அவசியமா?
- ♦ பரிசேயர் அவசியம் எனக்கூறல்.
- ♦ பேதுருவும் யாக்கோபும் அவசியமில்லை மீட்பானது இறைவனின் கொடை எனக்கூறல்.

**தலைவனாக இருந்த யாக்கோபின் தீர்மானம்** →
- ♦ சிலைகள் தொடர்பான தீட்டானவற்றைத் தவிர்த்தல்.
- ♦ பரத்தன்மைக்கு விலகுதல்.
- ♦ கழுத்து நெரிக்கப்பட்டு செத்தவற்றின் இரத்தம் ஆகியவற்றை உணவாகக் கொள் வதைத் தவிர்த்தல்

இத்தீர்மானத்தை வெளிப்படுத்தி யூத கிறிஸ்தவர்களுக்கும், பிற இன கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்காக வழி முறைகளை ஏற்படுத்தினர் என்பது தெளிவாகின்றது. இதன் மூலம் அவர்களிடையே நல்ல தொடர்பினைக்கட்டி எழுப்புவதற்கு முயற்சி செய்தனர்.

## மறைத்தூதுப் பயணத்தின் வெற்றியினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரி

கூட்டுத் தலைமைத்துவத்தினூடாக பவுலும் பர்னபாவும் பெற்றுக்கொண்ட நற்பலன்கள் மூலமாக அவர்களின் மறைத்தூதுப் பயணத்தை வெற்றியோடு நிறைவு செய்வதற்கு முடிந்தது. அதன்மூலம் கிடைத்த முன்மாதிரிகளாவன.

- ♦ பலவித சவால்களின் மத்தியில் கடவுள் உங்களுக்கு வழிகாட்டும் முறையில் தலைமைத்துவத்தை ஏற்று செயற்படுதல்.

- ♦ எப்போதும் ஒருமைப்பாட்டு உணர்வோடு செயற்பட்டு சவால்களை வெல்ல முடியும்.

- ♦ பலவித முரண்பாடுகள் பிரச்சனைகள் மத்தியில் தவறான கருத்துக்கள் சமூகத்தில் பிரசித்தியடையும் போது கடவுளின் பிள்ளையாக பயமின்றி பவுல் பர்னபா போன்று தமது மொழியைப் பயன்படுத்தி கடிதங்கள் மூலமாக சமூகத்தை அறிவுறுத்துதல்.

- ♦ தோல்வியைச் சந்திக்கும் எவ்வேளையிலும் தூய ஆவியின் பெலத்தோடு பின்னடையாது முன்செல்வதற்கு மனதைத் திடப்படுத்தி நற்பலன்களைக் கைப்பற்றுதல்.

♦ குழுவாக பொறுப்புகளை ஏற்கும்போது தமது அனுபவங்களை மீண்டும் விமர்சித்து பொறுப்பை ஏற்று எம்மோடு இருக்கும் பிறரையும் தைரியப்படுத்தல்.

எவ்விதமான தடைகள் இருப்பினும் மறைத்தூதுப் பயணத்தை வெற்றி கொள்வோம் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. அதுபோல் இறைபணியை வெற்றிகரமாக நிறைவேற்றும் எவரும் திருப்தியடைய முடியும்.

**செயற்பாடு**

01. பவுலின் முதலாம் தூதுப்பணியின் கீழே தரப்பட்ட இடங்களில் நிகழ்ந்த சம்பவங்களில் நீங்கள் கற்றுக்கொண்ட படிப்பினைகளை இவ்விரண்டாக குறிப்பிடுக.
அ) பாப்போ ஆ) பிசிதியா அந்தியோக்கியா
இ) இக்கோனியா ஈ) லீஸ்திரா.

02. கூட்டுத் தலைமைத்துவத்துடன் செயற்படுவதற்கு பவுலின் முதல் தூதுரைப் பயணத்தில் முன்மாதிரியான காரியங்களைக் குறித்து கிறிஸ்தவ சஞ்சிகை ஒன்றிற்கு கடிதம் எழுதுக.

# 14 தைரியத்துடனான பணி

பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் சீலாவுடன் பின்னடையாது வீரமாகச் செயற்பட்ட முறையை முன்மாதிரியாகக் கொண்டு தைரியமாக பணியில் ஈடுபடுவது இப்பாடத்தின் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

***திருத்தூதர் பணிகள் :* 15:36-41. 16-17 *ம் அதிகாரங்கள் தி.பா.*18:1-23**

**இரண்டாம் மறைத்தூதுப் பயணம் தி.ப:15:36 18:22**

***ஏற்பட்ட பிரச்சினை* (*தி.தூ.பா* :15:36-41)**

பவுல், யோவான் மாற்குவை தம்மோடு அழைத்துச் செல்வதை கடுமையாக எதிர்த்தார். (முதலாம் பயணத்தில் பெருகையில்அவர் திரும்பிச் சென்றார்.)

பர்னபா தன் உறவினரான மாற்குவை பயணத்திற்குக் கூட்டுச்சேர்ப்பதற்கு மிகவிருப்பமாக இருந்தார்.


**பிரதிபலன்**

***அப்போஸ்தலர் இருவரிடையே கடுமையான விவாதம் ஏற்பட்டதன் விளைவாக இருவரும் பிரிந்து மறைத்தூதுப் பயணம் இரண்டாகியது***

பர்னபா யோவான் மாற்குடன் இணைந்து சைப்பிரசுக்குச் சென்றதாக குறிப்பிடப் படுகின்றது. (தி.தூ.ப: 15:39) ஏற்படும்பிரச்சனைக்கு தீர்மானம் எடுக்கும்போது பணிக்கு தீமை ஏற்படாத முறையில் பின்னடையாத வீரர்களாக செயற்படுவதற்கு இவர்களால் முடிந்தது. அவர்கள் பிரிந்து சென்றாலும் பவுல், பர்னபா, மாற்கு என்பவர்களிடையே நிலையான தொடர்புகள் இருந்தது என்பதை பவுலின் திருமுகங்கள் மூலமாக தெளிவாக அறியமுடிகின்றது. (கொலோசையர் 4:10 - 2 தீமொத்தேயு : 4:11)

***இரண்டாம் மறைத் தூதுப் பயணத்தில் பவுலோடு இணைந்தவர்கள்***

சபையின் தலைவரால் தீர்மானிக்கப்பட்ட எருசலேம் சங்கத்தின் தீர்மானங்களை எடுத்துச் சென்ற இறைவாக்கினரான சீலாவும், லிஸ்தீராவிலும் இக்கோனியாவிலும் வரவேற்கப்பட்டவரும் பவுலினால் விருத்தசேதனம் செய்யப்பட்ட வருமான தீமொத் தேயுவும், மருத்துவரான லூக்காவும், பவுலோடு பணியில் இணைந்தனர். லூக்கா என்பவர் லூக்கா நற்செய்தியினதும் திருத்தூதர்பணி நூலினதும் ஆசிரியருமாவார்.



பவுலின்
தூதுரைப் பயணம் - II
சிரியா
அந்தியோக்கியா
பெனிக்கியா
எருசலேம்
செசரியா
தாலமாய்
தீர்
தர்சு
சிலிசியா
சைப்பிரசு
கலாத்தியா
இக்கோனியா
தெருபை
லிஸ்திரா
அந்தியோக்கியா(பிசிதியா)
பம்பிலியா
பத்தாரா
ரோது
மத்தியதரைக்கடல்
பொந்து
பிரிகியா
பித்தினியா
தியாத்திரா
ஆசியா
எபேசு
மிலேத்து
கோசு
கிரேத்து
துரோவா
நெயாப்பொலி
சமொத்திராக்கி
பிலிப்பி
அப்பொலோனியா
தெசலோனிக்கா
பெரோயா
மாசிதோனியா
ஏதென்ஸ்
கொரிந்து
கெங்கிறா
அகாயா

## பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணம்

**சிரியா அந்தியோகியா** (தி.ப 15.36-40) → **சிரியா சிலிசியா** (தி.ப 15.41) → **தெருபை லிஸ்திரா** (தி.ப 16.2-3) → **பிரிகியா கலாத்தியா** (தி.ப 16.6) → **மீசியா** (தி.ப 16.7-8) → **துரோவா** (தி.ப 16.8-10) → **சமொத்திரா** (தி.ப 16.11) → **நெயாப்பொலி** (தி.ப 16.11) → **பிலிப்பி** (தி.ப 16.12) → **தெசலோனிக்கா** (தி.ப 17.1) → **பெராயா** (தி.ப 17.10) → **ஏதென்ஸ்** (தி.ப 17.15) → **கொரிந்து** (தி.ப 18.1) → **கெங்கிரேயா** (தி.ப 18.18) → **எபேசு** (தி.ப 18.19) → **செசரியா** (தி.ப 18.22) → **எருசலேம்** (தி.ப 18.22)

- ***சீரியா அந்தியோக்கியா*** (**தி.ப:**15:36-40)
  உருவாகிய பிரச்சனைக்குப் பின் பவுலினதும் சீலாவினதும் பயணம் ஆரம்பித்தது.
- ***சீரியா சிசிலியா*** (**தி.ப:**15:41)
  சீரியா, சிசிலியா வழியாகச் சென்று சபைகளை உறுதிப்படுத்திச் சென்றனர்.
- **தெருபை லிஸ்தீரா** (**தி.ப:**16:2-3)
  தீமொத்தேயுவை விருத்தசேதனம் செய்தபின் அவரையும் அழைத்துச் சென்றார். ஆசியாவில் இறை வார்த்தையை அறிவிக்காது தடுக்கப்பட்டு மாசிதோனியாவுக்குச் செல்வதற்கு தூயஆவியானவர் அவர்களுக்கு வழிகாட்டினார்.
- ***துரோவா*** (**தி.ப:**16:8-10)
  மாசிதோனியாவுக்கு வந்து உதவி செய்யுமாறு மாசிதோனியர் ஒருவர் வேண்டிக்கொண்டதைப் பவுல் காட்சியாகக் கண்டார்.
- ***பிலிப்பி*** (16:11-40)
  துரோவாவிலிருந்து கப்பலேறி சமொத்திராவுக்கும் நெயப்பொலிக்கும் பயணம் செய்த பவுலும் அவரின் குழுவினரும் பிலிப்பி நகருக்கு வந்தனர் இங்கு பிற இனத்தவரும் யூதர்களும் வாழ்ந்தனர். ஓய்வுநாளில் இறை வேண்டலுக்காக

தொழுகைக்கூடம் இல்லாமையால் ஆற்றங்கரையில் ஒன்று கூடினர்.

## பிலிப்பில் எதிர்கொண்ட சவால்கள்

பவுல் ஆற்றங்கரையில் விசுவாசமுள்ள ஒரு பெண்ணை சந்திக்கிறார். அவளுக்கு இறைவார்த்தையைப் போதித்து மறைத்தூதுப்பணியை ஆரம்பித்தார். தியத்தீரா நகரில் இருந்து வந்த பெண்ணான லிதியா செந்நிற ஆடைகள் வியாபாரம் செய்பவள். அவள் கடவுளை வழிபட்டு வந்தாள். அவளும் அவள் வீட்டார் அனைவரும் திருமுழுக்குப் பெற்றனர். யூத சமுதாயத்தில் பெண்களுக்கு இடையூறாக இருந்த சமய கலாச்சார பழக்க வழக்கங்கள் போன்ற சவால்களுக்கு முகங்கொடுத்து பெண்ணான லீதியா மூலம் இங்கு சபை உருவாகியது.

## அடிமைப் பெண்

குறி சொல்லும் ஆவியைக் கொண்ட அடிமைப் பெண் குறிசொல்லுவதன் மூலம் தன்னை அடிமையாக வைத்திருப்பவர்களுக்கு மிகுந்த வருவாயைப் பெற்றுக் கொடுத்தாள். இவள் பவுலினதும் பர்னபாவினதும் செயற்பாட்டை அறிந்துகொண்டு பல நாட்களாக அதைக்குறித்து உரக்கக் கூறியபடி அவர்கள் பின்னால் சென்றாள். பவுல் எரிச்சல் கொண்டு அந்த ஆவியோடு பேசி அவளை விட்டுப் போகுமாறு இயேசுவின் பெயரால் கட்டளையிட்டார். அந்நேரமே அந்த ஆவி அவளைவிட்டுச் சென்றுவிட்டது. அந்த பெண்ணை அடிமையாக வைத்திருந்தவர்கள் பவுலையும் சீலாவையும் பிடித்து சந்தை வெளிக்கு தம் ஆட்சியாளரிடம்கொண்டு சென்றார்கள்.இவர்கள் தமது நகரில் கலகம் விளைவிக்கிறார்கள் எனவும் உரோமையராகிய நாம் ஏற்றுக்கொள்ளத் தகாத நீதிக்கு முரணான காரியங்களை அறிவிக்கிறார்கள் எனக்குற்றம் சாட்டினர். நடுவர்கள் அவர்களது உடைகளைக்கிழித்து அவர்களைத் தடியால் அடித்து சிறையிலிடுமாறு கட்டளையிட்டனர். அவர்களை சிறையில் அடைத்து அவர்களின் கால்களைத் தொழுமரத்தில் கட்டிவைத்தார்கள். இவ்வாறு பலவிதமான துன்பங்களுக்கு முகம் கொடுத்தனர். இவை அனைத்தையும் பொறுத்துக் கொண்டு பவுலும் சீலாவும் பின்னடையாத வீரர்களாக இவற்றுக்கு முகம் கொடுத்த முறைகளை திருத்தூதர்பணி நூலில் காண்கிறோம்.

## சிறைத்தண்டனைக்கு உட்பட்ட பவுலும் சீலாவும்

நள்ளிரவில் இறைவனை வேண்டி கடவுளுக்குப் புகழ்பாடினார். சிறைக்கைதிகள் இதனைக் கேட்டனர். அப்போது திடீரென ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சிறைக்கூடத்தின் அடித்தளம் அதிர்ந்தது. சிறைக்கூடக் கதவுகள் திறந்தன. அனைவரின் விலங்குகளும் கழன்று விழுந்தன. பிரதான சிறைக்காவலர் விழித்தெழுந்து தன்னை தற்கொலை செய்துகொள்ள. முயன்றார்.
பவுல் சிறைக்காவலனைத் தைரியம் அடையச் செய்து''நீர் உமக்கு ஏதுவும் தீங்கு

செய்து கொள்ளாதீர். நாங்கள் அனைவரும் இங்கே தான் இருக்கிறோம்'' என்றனர்.

சிறைக்காவலர் : மீட்படைய நான் என்ன செய்யவேண்டும்?

பவுல் : ''ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும் அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்'' (தி.ப:11:30-31)

சிறைக்காவலரின் முழுக்குடும்பமும் கடவுளின் வார்த்தையைக் கேட்டு திருமுழுக்குப் பெற்றனர். பவுலும் சீலாவும் இந்த அற்புதத்தின் ஊடாக மீண்டும் மீண்டும் வலுவடைந்து பிறரையும் ஊக்கப்படுத்தினார்.

உரோமைக் குடிமக்களை முறையான தீர்ப்பு இன்றி சிறையிலிடுவது தவறு என்பதை பவுலும் சீலாவும் உரோமை அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டினர். இவ்வாறு நீதிக்கு முரணாக செயற்பட்ட அதிகாரிகளுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து தமது உண்மையான பணியில் ஏற்பட்ட சவால்களை வெற்றி கொண்டனர் என்பது தெளிவாகின்றது.

### தெசலோனிக்காவிலும் பெரோயாவிலும் (தி.ப:17:1-15)

தெசலோனிக்காவில் போன்று பெரோயாவிலும் தொழுகைக்கூடத்தில் போதனை செய்தனர். கிரேக்க மகளிர், ஆடவர் பலரும் நம்பிக்கை கொண்டனர். இருப்பினும் அங்கு நம்பிக்கை கொண்டோரும் மறை தூதுக் குழுவினரும் யூதர்களின் துன்பங்களுக்கு முகம் கொடுத்தனர். இதன் பலனாக நற்செய்தியைப் பரப்புவதற்காக அடுத்த நகர்களுக்கு செல்வதற்கு பவுலுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

சீலாவும் திமொத்தேயுவும் துன்பம் ஏற்பட்ட நகரங்களில் தொடர்ந்தும் பணி செய்வதற்கு பின்னடையாத வீரர்களாக அங்கே தங்கியது முக்கியமானதாகும்.

## ஏதென்ஸ் (தி.ப:17:16-34)

பவுலின் அடுத்த மத்திய நிலையமான மெய்யியல் கல்வி, இலக்கியம், விஞ்ஞானம், கலைகள் என்பவற்றிற்கு பிரபல்யமான கிரேக்க நகர் ஏதென்ஸ் ஆகும்.

### ஏதென்ஸ் நகரில் மறைத்தூதுப்பணி

- தான் நன்றாக கற்றறிந்தவர் என்பதைப் பிறருக்கு விவாதித்து பின்னணியைக் கட்டி எழுப்பினார். (தி.ப:17:17-18)
- யூதர்களையும் கடவுளை வழிபடுவோரையும் ஒவ்வொரு நாளும் சந்தை வெளி களில் சந்தித்தார்.

- மெய்யியல் அறிஞர்கள் எப்பிக்கூரர் - (வாழ்வின் பிரதான அபிப்பிரயமானது சந்தோஷத்தையும் ஆதரவையும் தேடுவதில் நம்பிக்கை கொண்டவர்கள்).
- ஸ்தோக்கியர் மெய்யியல் அறிஞர்கள் - (இயற்கையோடு ஒன்றிணைந்து தர்க்க வியல் சிந்தனைகளோடு சமாதானமாக வாழவேண்டும் என்பதை வெளிப்படுத்தியவர்கள்);
- பிறரின் கருத்துக்களுக்கு இடமளித்தல் (தி.ப:17:18)
- பிறரைச் சந்தோஷமடையச் செய்து தனது மறையை பரப்புவதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ளுதல் (தி.ப: 17:19-21)

இடம் → அரயோப்பாகு மன்றம் கிரேக்க தத்துவ மெய்யியல் அறிஞர்கள் ஒன்றுகூடும் பாரிய பிரபல்யமான மண்டபமாகும்.

அந்நகரில் பலசமய சூழலிலும் பிறரின் நம்பிக்கையைப் பாராட்டினார். (தி.ப:17:22)

பொருத்தமான சூழலில் தனது போதனையை முன்வைப்பதற்கான காரியங்களைத் தேடிக் கொள்ளுதல் (தி.ப:17:23)

''அறியாத தெய்வத்திற்கு''என்ற பலிபீடம் - இதனூடாக இறை செய்தியை அளித்தல்

### ஏதென்சில் போதனை

''சமயப்பற்றுள்ள ஏதென்ஸ் வாழ்மக்களின் சமயக்கொள்கையைப் பயன்படுத்தி தனது போதனையை ஆரம்பித்து கடவுளைப்பற்றிய நீண்ட உரையாற்றினார். இதன் மூலம் சிலைவழிபாடு ஏற்றதல்ல என்பதைக் காண்பித்தார். (தி.ப:17:24-27) ஏதென்ஸ் மக்கள்பயன்படுத்திய இலக்கிய கவிகளின் மூலமாக தனது போதனைக்கு வலுவூட்டினார். (தி.ப:17:28) கடவுளின் பூரணமான தெய்வீகத்தையும் சர்வ ஆதிக்கத்தையும் வெளிப்படுத்தினார். (தி.ப:17:29)

மனம் மாறவேண்டிய அவசியத்தையும் நேர்மையான தீர்ப்பையும் இயேசுவின் உயிர்தெழுதலையும் பற்றி முன்வைத்தார் (தி.ப:17:30-31)

பலவிதமான கருத்துக்களுக்கு இடம் அளிக்கப்பட்டது. (தி.ப:17:32) நற்செய்தியைத் தெளிவுபடுத்தி அங்கிருந்து வெளியேறினார். (தி.ப:17:34)

ஏதென்ஸில் சூழலுக்கேற்றவாறு ஞானத்தோடு பின்னடையாத வீரனாக செயற்பட்டபவுல் பெற்றுக் கொண்டதான பிரதிபலன். சில ஏதென்ஸ் வாழ்மக்கள் நம்பிக்கை கொண்டனர். (இவர்களில் தியோனிசி, தாமரி என்பவர்கள் பிரதான மானவர்கள் (தி.ப:17:34)

**கொரிந்து** (**தி.ப** :18:1-17)

கிரேக்க அரசியலைக் கொண்ட உரோமையரின் குடியேற்ற நகரமாகவும் வாணிகத்தின் மத்தியநிலையமாகவும் கொரிந்து காணப்படுகின்றது.

பவுல் — கூடாரம் செய்யும்தொழில் — ஆக்கில்லா பிரிஸ்கில்லா தம்பதிகள்

யூதப் பிள்ளையாக பவுல் கூடாரம் அமைக்கும் தொழிலில் பயிற்சி பெற்றவர். $1\frac{1}{2}$ வருடம் கொரிந்தில் தங்கியிருந்தார். தரிசனத்திற் கூடாக கடவுள் அவருக்கு அறிவித்தார். (தி.ப:18:9-10)

ஆக்கில்லா போந்துப்பகுதியில் பிறந்த யூதன். அண்மையில் கொரிந்துவுக்கு வந்த தம்பதியினர். கிளாவுதியு அரசன் சகல யூதர்களையும் உரோமையில் இருந்து வெளியேற வேண்டும் என்ற கட்டளைக் கிணங்கி அவர்கள் கொரிந்துக்கு வந்தனர் தி.ப:18:1-2)

இருவரும் இணைந்து ஒன்றாய்க் கூடாரம் அமைப்பதன் மூலம் தமது பொருளாதார தேவைகளை நிறைவுசெய்தனர். (தி.ப:18:3)

ஓய்வு நாட்களில் தொழுகைக் கூடத்தில் விவாதித்து யூதரையும் கிரேக்கரையும் விசுவாசத்துக்குள் வருவதற்கு செயற்பட்டார்.

பவுல் சீலா திமொத்தேயு என்பவர்களோடு மறையைப் போதித்தனர். பின்னடையாத வீரர்களாக தம் தொழிலில் ஈடுபட்டனர்.

வார்த்தையைக்கேட்ட அனைவரும் இறைவனை ஏற்றுக் கொண்டனர்.

யூதர்கள் எதிர்த்த வேளைகளில் பிற இனத்தவர்கள் மத்தியில் போதித்தனர்.

தொழுகைக்கூட தலைவரான கிறிஸ்பு என்பவரின் வீட்டாரும் காயு என்பவரும் ஸ்தேவான் வீட்டாரும் திருமுழுக்குப் பெற்று ஆண்டவரை ஏற்றுக்கொண்டனர்.
1. கொரிந்தியர் 1:14,16

கல்லியோ என்பவர் அக்காயா நாட்டின் ஆட்சியாளராக இருந்தபோது அவரின் முன்பாக பவுலை நிறுத்தினர். ஆனால் அவர் பவுலுக்கு தண்டனை அளிப்பதற்கு இணங்கவில்லை.

## கெங்கிரேயா (தி.ப 18:18)

பவுல் ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்பவர்களோடு சிரியா போகும்போது தம் நேர்த்திக்கடனை நிறைவேற்ற கெங்கிரேயா சென்று அங்கு பவுல் முடிவெட்டிக் கொண்டார்.

எபேசில் கப்பலேறி ⟶ செசரியாவந்து ⟶ எருசலேமிற்குச் சென்று சிரியா அந்தியோக்கியாவை நோக்கி மீண்டும் பயணித்தார்.

பலவிதமான சவால்களை வெற்றி கொண்டு தூயஆவியின் வல்லமையையும் பெலனையும் பெற்று அதனூடாக இடத்திற்கேற்ற ஞானத்தோடு பவுல், சீலா, திமோத்தேயு, லூக்கா என்போர் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் பின்னடையாத வீரர்களாக செயற்பட்ட முறைகள் கிறிஸ்தவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகும்.

**செயற்பாடு**

01. பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் முகம் கொடுத்த சவால்கள், அதனை வெற்றி கொண்ட முறைகளை விளக்கி அதன் மூலம் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு வழிமுறைகளை எழுதுக.

# 15 சவால்களின் மத்தியில் பணி

**பவுலின் மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தின் மையமாக அமைந்தது எபேசு ஆகும். இங்கு பவுல் முகம் கொடுத்த சவால்களுக்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பதில் அளித்தார். இந்த முன்மாதிரியைப் பின்பற்றி பலன் தரும் மறைத்தூதுப் பணியில் ஈடுபடுவது இப் பாடத்தின் நோக்கமாகும்**

***திருத்தூதர் பணிகள் : 18:23, 21:19***

## மூன்றாம் மறைத்தூதுப் பயணம்

இப்பாடத்தில் பவுலின் மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தைப்பற்றி கற்கப் போகின்றோம். இங்கு எபேசு என்னும் நகருக்கு முதலாவதாக வந்தார். அப்பயணத் திற்கு திமோத்தேயு, தீத்து, லூக்கா என்போர் பவுலுடன் இணைந்து கொண்டனர்.

கி.பி.53-54 வரையிலான காலத்தில் 4024 கி.மீ தூரம் அப்பயணத்தில் அடங் கியுள்ளதாக காணப்படுகிறது.

முன்பு உருவாக்கிய திருச்சபைகளைத் திடப்படுத்தி கலாத்தியா, பிரிகியா பகுதிகள் வழியாகச் சென்றார்கள். (தி.ப:18:23)

## எபேசு


சின்ன ஆசியாவின் தலைநகராக இருந்த எபேசு பிரசித்திபெற்ற வணிக நகராகும். ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட பிரபல்யமான அர்த்தமி தேவதையின் ஆலயமும் இங்கு இருந்தது. பவுல் இரண்டு ஆண்டு காலமாக எபேசில் தங்கியிருந்தார். பல சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னோக்கிச் சென்றார் என்பதை திருத்தூதர்பணிநூல் சான்று பகர்கின்றது.

**வாசித்துப் பார்ப்போம்**

***தி. ப.*** :18:24 - 19:10

## எபேசில் நிகழ்ந்தவை

| | |
|---|---|
| ஆக்கில்லா பிரிஸ்கில்லா | அப்பொல்லோவைச் சந்தித்தனர். இவர் மறைநூல்களில் புலமை வாய்ந்தவர். ஆண்டவரின் நெறிகளைக் கற்றவர். திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். ஆகையால் ஆக்கில்லாவும் பிரிஸ்கில் லாவும் அவருக்கு கடவுளின் நெறியைத் தெளிவாக விளக்கினர். |
| பவுல் | திருமுழுக்கு யோவானின் சீடர்களையும் கிரேக்கர்களையும் சந்தித்தார். யோவானின் சீடர்களுக்கு இயேசுவைப்பற்றி அறிவித்தார். அதன்பின் திருமுழுக்கு கொடுத்து கை வைத்தபோது தூயஆவியானவர் அவர்களிடம் இறங்கினார். அப்போது அவர்கள் பரவசப்பேச்சுப் பேசினர். கிரேக்கருக்கும் இறை வார்த்தையைப் போதித்தார். |


தூதுரைப் பயணம் - III
&
உரோமைப் பயணம்
தூதுரைப் பயணம் - III
உரோமைப் பயணம்
மத்தியதரைக் கடல்
மத்தியதரைக் கடல்
உரோமை
மூன்றுவிடுதி
அப்பியு சந்தை
புத்தியோலி
இத்தாலியா
இரேகியு
சிரக்கூசா
சிசிலியா
மால்த்தா
மாசிதோனியா
பிலிப்பி
அப்பொலோனியா
தெசலோனிக்கா
பெரோயா
நெயாப்பொலி
சமொத்திராக்கு
துரோவா
ஆசோ
மித்திலேனே
கீயு
சிமிர்னா
எபேசு
மிலேத்து
கோசு
கினிது
ரோது
பத்தாரா
மீரா
பம்பிலியா
கிரேத்தா
சல்மோன்
நல்துறை
பெனிக்சு
கவுதா
அக்காயா
கொரிந்து
கெங்கிரெயா
ஏதென்சு
ஆசியா
மீசியா
பித்தினியா
பிரிகியா
கலாத்தியா
லிஸ்திரா
தெருபை
சிலிசியா
தர்சு
அந்தியோக்கியா
சைப்பிரசு
பெனிசியா
சீதோன்
தீர்
தாலமாய்
செசரியா
எருசலேம்

## பவுல் எபேசில் வெற்றிபெற்ற சவால்

**வாசித்துப் பார்ப்போம்**

**தி.ப:19:11-17**

பேயோட்டுபவர்களும் ஸ்கேவாவின் புதல்வர்களும் பவுலின் மூலமாக அநேக அற்புதங்கள் நடைபெறுவதைக் கண்டு, பவுல் அறிவித்த இயேசுவின் பெயரால் தாமும் அற்புதங்களை செய்வதற்கு முயற்சி செய்தனர்.

இவ்வாறு பேயோட்டுபவர்கள் இயேசுவின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தியமையால் அவர்களுக்கே அழிவை ஏற்படுத்திக் கொண்டனர்.
இந்த சவால்களினூடாக அனுபவித்த பிரதிபலன்

## இதன் மூலம் பெற்ற பிரதிபலன்

- இறைவல்லமை வெளிப்பட்டது.
- தீமைகளும் பொய்களும் அழிந்து போயின
- இயேசுவின் நாமத்திற்கு மகிமையை உண்டாகியது.
- மந்திர தந்திரங்கள் செய்த அநேகர் அவ்வழியிலிருந்து திரும்பி இறைவனை ஏற்றுக் கொண்டனர்.
- இறைவார்த்தை மிக வல்லமையாக விரிவடைந்து பரவிச் சென்றது.

**வாசித்துப் பார்ப்போம்**

**தி.ப:19:23-41**

''மனிதக் கையால் செய்யப்பட்டவை தெய்வங்களல்ல'' என்ற பவுலின் போதனையின் காரணமாக

- அர்த்தமி கோவிலின் வடிவத்தை வெள்ளியில் செய்வித்து வியாபாரம் செய்தவர்களின் வருவாய் தடைப்பட்டது.
- சிலை செய்பவரான தெமொத்திரியு என்பவர் பவுலுக்கு எதிராகச் செயற்பட்டார்.
- நகர ஆணையாளர் கலகத்தை நிறுத்தினார்.
- சிலை வழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த மனிதர்களைத் தடுத்து ஒரே கடவுளை வழிபடுவதில் ஈடுபடுத்தும் சவாலுக்கு பவுலும் குழுவினரும் முகம் கொடுத்தனர்.
- கையால் செய்யப்பட்ட சிலைகள்/சிலை வழிபாடுகள் அர்த்தமற்றது எனக் காண்பித்தார்.

## சவால்களின் மத்தியில் ஏற்பட்ட பிரதிபலன்கள்

மக்கள் சிலை வழிபாட்டை தவிர்த்ததனால் சிலைகளின் வியாபாரம் தடைப் பட்டது. ஒரே கடவுளை வழிபடுவதின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல்.

## எபேசைச் சுற்றியுள்ள நகர்களில் மறைத் தூதுப்பணி

**வாசித்துப் பார்ப்போம்**

**தி.ப : 20:1 -21:19**

- எபேசில் கலகம் ஒய்ந்தபின் பவுல் அங்கிருந்த சீடர்களைத் தைரியப்படுத்தி, சீரியாவிலிருந்து வந்த யூதர்களின் துன்பங்களின் மத்தியில் பணிபுரிந்து, பயணத்தைத் தொடர்ந்தார். (தி.ப:20:1-6)
- துரோவாவில் யுத்திகு என்னும் இளைஞருக்கு அற்புதமாக மீண்டும் உயிர் கொடுத்த சம்பவத்தை சவாலாக ஏற்றுக் கொண்டார் (தி.ப:20:7-12)
- எபேசில் இருந்த சபை மூப்பர்களை மிலேத்திற்கு அழைத்து வந்து தனது பணியைப் பற்றிய கருத்துக்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டார். புதிய விசுவாசிகளின் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்து அவர்களிடம் விடை பெறும் சவாலுக்கு முகம் கொடுத்தார்.
- தனக்கு ஏற்படப்போகும் துன்பத்தை அகபு வெளிப்படுத்திய போதும் அதனை அறிந்து கொண்டு தைரியத்தை இழக்காமல் எருசலேமிற்கு செல்லும் சவாலுக்கு முகம் கொடுத்தார்.

இவ்வாறு, பவுலும் அவரோடு இருந்தவர்களும் மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தை வெற்றிபெறச் செய்வதற்காக தைரியத்தோடும் அர்பணிப்போடும் செயற் பட்டனர். அவர்கள் முகம் கொடுத்த அனைத்து தடைகளையும் சவால்களையும் வெற்றி கொண்டு தூயஆவியானவரின் தைரியத்திலும் பெலத்திலும் பணி செய்தனர்.

இறைவனுக்காக எமது மனதை ஈடுபடுத்தும்போது நாம் சவால்களுடனான சூழலிலேயே செயற்படுவோம். அவ்வாறான வேளையில் பவுலைப் போன்று வெற்றிகொள்வதற்கு தூய ஆவியின் வல்லமையைப் பெற்று பயணம் செய்வோம்.

**செயற்பாடு**

01. எபேசில் பவுல் முகம் கொடுக்க நேர்ந்த சவால்களை பவுல் எதிர் கொண்ட முறைகளை விளக்கி எழுதுக.

02. நீங்கள் முகம் கொடுக்க நேரிடும் சவால்களை தோல்வியுறச் செய்வதற்கு பவுலைப் பின்பற்றி செயற்படும் முறைகளை விளக்குக.

# 16 சான்றினூடாக தைரியப் பணி

**பவுல் உரோமைக்கு கைதியாக சென்ற பயணத்தை கற்பதன் மூலம் கிறிஸ்தவர்கள் சான்று பகர்வதற்கான முறைகளை வெளிப்படுத்தி எப்போதும் கிறிஸ்துவுக்காக பொறுமையும் உண்மைத்துவத்தோடு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை முன் வைப்பது இப் பாடத்தின் நோக்கமாகும்.**

**தி.ப: 25:10-11 26:32 27, 28 ம் அதிகாரங்கள்**

மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தின் இறுதியில் அகபு என்னும் இறைவாக்கினர் கூறியபடி எருசலேம் ஆலயத்தில் பவுல் கைது செய்யப்பட்டார். யூதர்களின் தலைமைச் சங்கத்தில் ஆளுநர் பெலிக்சுவின் முன்னால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். பவுல் கிறிஸ்துவின் பெயருக்காக எவ்வளவு துன்புற வேண்டும் என்பதை, அவரில் மாற்றம் நிகழ்ந்த சந்தர்ப்பத்திலே கண்ட தரிசனத்தின் மூலமாக, எருசலேமிலும் அவர் சான்று பகர்வார் என உணர்த்தப்பட்டது.

## உரோமை பயணத்தின் மூலம் சான்று பகர்தல்

**வாசித்துப் பார்ப்போம்**

**தி.ப : 25:10-11, 26:32, 27:1**


பவுலுக்கு எருசலேமில் மரணதண்டனையை அளிப்பதே தலைமைக் குருக் களினதும் யூதர்களினதும் நோக்கமாக இருந்தது. தனக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுக்களில் தாம் நிரபராதி என்பதை பவுல் அறிந்திருந்தார். உரோமைக் குடியுரிமையை தனக்கு கிடைத்த கொடையாகப் பயன்படுத்தி உரோமையரின் ஆளுநரே தனக்கு நீதி வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். எவ்வாறு இருப்பினும் உரோமைக்குச் செல்வதே இவரின் நோக்கமாக இருந்தது. இதனை நிறைவேற்றிக் கொள்வதற்காக, பெஸ்து, அகிரிப்பா அரசர்களின் மூலமாக பவுல் உரோமை செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

பவுல் கைதியாக உரோமையை நோக்கி சென்றார்
அவரோடு பயணத்தில் லூக்காவும் அரிஸ்தர்குவும் இருந்தனர்

## பயணத்தின் ஆரம்பத்திலே சான்று பகர்தல் (தி.தூ.ப :27:1-13)

சிறைக்கைதியாக பவுல் இத்தாலியை நோக்கிச் சென்ற கப்பலில் கொண்டு செல்லப் பட்டார். அதில் இன்னும் அநேக கைதிகளும் கொண்டு செல்லப்பட்டனர்.

அகஸ்து படைப்பிரிவைச் சேர்ந்த, யூலியு என்னும் நூற்றுவர் தலைவரிடம் இக் கைதிகளின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.




திசைகாட்டி இல்லாத பழமையான காலத்தில், கடல் பயணத்தின்போது நட்சத் திரங்களே வழி காட்டியாகக் காணப்பட்டது. ஆபத்தான காலநிலை ஏற்படும்போது, கப்பலில் பயணம் செய்வது மிகவும் பயங்கரமானது ஆகும். அவ்வாறே, செப்டம்பர் மாதம் கடல் போக்குவரத்து ஆபத்துக்குரியதாகும். நவம்பர் மாதம் அளவில் இதுமிகவும் ஆபத்தானதாகவும் பயணிக்க வசதியற்றதாகவும் காணப்படும். பவுலும் அவரது குழுவினரும் உரோமையை நோக்கிச் சென்ற இச்சம்பவம் ஒக்டோபர் மாதம் நிகழ்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவை அனைத்திலும் அனுபவம் கொண்ட

பவுலின் உண்மைக்கருத்துக்களும் ஆலோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்படாமையால், அவர்கள் முன்னோக்கிய பயணத்தில் பல ஆபத்துக்கள் நிகழ்ந்ததைக் காண்கிறோம்.

**புயலிலும் கப்பல் சேதத்திலும் சான்று பகர்தல் (தி.தூ.ப:27:13-44)**

கிரேத்து தீவுக்கு வந்ததும் பயங்கரமான ஆபத்துக்களுக்கு முகம் கொடுத்தனர் அவர்கள் முகம் கொடுத்த ஆபத்து என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

யூரக்கிலோன் என்னும் புயல்

இது கப்பல் ஓட்டுநருக்கு மிகவும் பழக்கமான ஆபத்தைக் கொண்டுவரும் வாடைக்கொண்டல் என்னும் புயலாகும். இது கீழைத்தேசத்தில் உருவாகின்றது

↓

வாடைக்கொண்டல் புயலின் காரணமாக

| | | |
|---|---|---|
| உயிரைப் பாதுகாப்பதற்காக பிரச்சனை உருவாகியது. | தமக்கு உரிமையான பொருள்கள் அழிந்து போயின | இருளான சூழ்நிலையில் உயிரைப் பாதுகாக்க வேண்டி ஏற்பட்டது. |
| ↓ | ↓ | ↓ |
| பயம், சந்தேகம் | தைரியத்தை இழத்தல். | மனக்குழப்பத்தினால், தன்னம் பிக்கை சிதைந்துபோதல் |
| ↑ | ↑ | ↑ |

வாழ்வின் ஆபத்துக்களில் ஏற்படும் புயலின் காரணமாக

இவை அனைத்தினதும் மத்தியிலும் பவுல் விசுவாசத்தோடு தைரியமாக சான்று பகர்ந்தார்.

**வாசித்துப் பார்ப்போம்**

**தி.ப : 27:21-26.**

**“என் மேல் உரிமையுடையவரும் நான் வழிபடுபவருமான கடவுளின் தூதர் நேற்றிரவு என்னிடம் வந்து பவுல் அஞ்சாதீர்; நீர் சீசர் முன்பாக விசாரிக்கப்பட வேண்டும்; உம்மோடும் கூடக் கப்பலிலுள்ள அனைவரையும் கடவுள் உம்பொருட்டு காப்பாற்றப் போகிறார்”என்றார் (தி.ப:27:23-24)**

பவுலின் இச்சாட்சியின் ஊடாக, நூற்றுவர் தலைவரும் கப்பலோட்டுனரும் பவுலுக்கு நம்பிக்கையோடு செவிகொடுத்தனர். பின்னடையாது, தேவையான வழி

முறைகளை எடுத்தனர். பவுல் அனைவரையும் தைரியப்படுத்தி, உணவு உட் கொள்ளச்செய்து, பெலனடையச் செய்தார்.

***சான்று பகர்வதால் வாழ்க்கைப் புயலையும் சவால்களையும் வெற்றி கொள்ள பெலனும் தைரியமும் கிடைக்கும்.***

சிறைக்கைதியாக இருந்து சவால்களின் மத்தியில் சான்று பகர்ந்து பிறரைத் தைரியப் படுத்திய பவுலின் உயிரைக் காப்பாற்றுவதற்கு நூற்றுவர் தலைவர் முன்வந்தார். (தி.ப:27:42-44)

***மால்தா தீவில் சான்று பகர்தல்*** (தி.தூ.ப:28:1-10)

மால்தா தீவு என்பது சிசிலியாவின் 60 மைல் வடக்கில் அமைந்து இருந்த நகரம். இங்கு வியாபாரத்திற்கான முக்கியமான துறைமுகங்கள் பல காணப்பட்டன.

**மால்தா மக்கள் செய்த உதவிகள்**

- குளிரானபடியால் தீ மூட்டி பவுல் மற்றும் அனைவரையும் அழைத்தனர்
- மூன்று நாட்கள் வரவேற்று அன்புடன் அவர்களுக்கு விருந்தோம்பினர்
- அவர்கள் புறப்பட்ட போது அவர்களுக்கு தேவையான அனைத்தையும் கப்பலில் ஏற்றினர்

மால்தா தீவில் குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது விறகில் இருந்து வெளிப்பட்ட பாம்பு பவுலின் கையைப் பாம்பு பற்றிக்கொண்டபோது அதனை உதறிவிட்டு தீங்கு ஏதும் ஏற்படாதிருந்த சம்பவத்தின் ஊடாக பவுல் சான்று பகர்ந்தார் என்பதை நாம் அறிய முடியும். (தி.ப : 28:3-6)

முதலில் அவர் ஒரு கொலைகாரன் என மக்கள் மத்தியில் நிலவி வந்த கருத்து, இதன் மூலம் அவர் ஒரு தெய்வம் என்று சொல்லக்கூடியதாக மாறியது. லீஸ்திராவின் நிகழ்வின் பின் தெய்வமாக கருதப்பட்ட இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

அத்தீவின் தலைவரான புப்பிலியுவின் தந்தையையும் மேலும் அநேக நோயாளர் களையும் குணப்படுத்தி பவுல் கடவுளுக்குச் சான்று பகர்ந்தார். (தி.ப : 28:7-10)

ஜெபத்திலும் விசுவாசத்திலும் நிலைத்திருந்து அற்புதங்கள் செய்து, சான்று பகர்வதற்கு முன்வந்த பவுலின் சிறப்பான பணியை பவுலின் இந்த பயணத்தின் மூலம் நாம் காண்கின்றோம்.

## உரோமையில் சான்று பகர்தல் (தி.ப :28:11-30)

உரோமை அரசின் விசாரணையை எதிர்பார்த்து, கடவுளின் ஞானத்தோடும் வழிநடத்துதலோடும் ஆபத்தான கடல் பயணத்தை நிறைவு செய்து உரோமைக்குச் சென்ற பவுல், கிறிஸ்துவுக்காக சான்று பகர்வதையே அவரின் ஒரே நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட முறைகள் எமக்குத் தெளிவாகின்றன.

கிறிஸ்தவர்களின் வாழ்க்கைப்பயணத்தில், தடைகள், குழப்பங்கள், பிரச்சனைகள் போன்றவற்றிற்கு முகம் கொடுக்க நேரிடும்போது, அவை அனைத்தின் மத்தியிலும் விசுவாசமுள்ளோராய் வெற்றிகொள்வதற்கு தூய ஆவியின் வழிகாட்டலும் தைரியமும் அவசியமாகும். இவையனைத்தையும் பவுல் நிறைவாய் பெற்றுக்கொண்டார் என்பதை அவரின் உரோமைப்பயணத்தின் மூலமாக விளங்கிக்கொள்ள முடியும். இதன் மூலம் ஆபத்துக்கள் சவால்களின் மத்தியில் கிறிஸ்தவர்கள் துணிவோடு உண்மைக்குச் சான்று பகரவேண்டியதின் அவசியத்தை உணர்ந்துகொள்வது முக்கியமாகும்.

இறுதியாக; பல துன்பங்களின் மத்தியில், சிறைக்கைதியாக, நேர்மையற்ற தீர்ப்புக்கு முகம் கொடுக்க நேர்ந்தாலும்; நற்செய்தியைப் பறைசாற்றுவதிலும், திருமடல்கள் எழுதுவதிலும், விசேடமாகச் செயற்பட்டு உரோமை செல்லும் பயணத்தின் இறுதியில், கி.வ 64 இல், நீரோ என்னும் ஆளுநரின் காலத்தில், மறைசாட்சியாக மரித்து கிறிஸ்துவின் விசுவாசத்தின் பணியாளராக பவுல் சான்று பகர்ந்தார். இவ்வறு பவுல் முழு உலக கிறிஸ்தவ சபைகளுக்கும் முன்மாதிரியான ஒளியாகத் திகழ்ந்தார்.

**செயற்பாடு**

01. உரோமைக்குச் சென்ற பயணத்தில் பவுல் கடவுளுக்கு சான்று பகர்ந்த சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்கள் சிலவற்றை எழுதுக?

02. உமது வாழ்வில் புயல் ஏற்படும்போது கிறிஸ்துவுக்காக சான்று பகரும் முறைகள் மூன்றை எழுதுக.

# 17 நான் இயேசுவுக்கு உரியவன்

**இயேசு தமது போதனைகளுடனும் வாழ்வின் முன்மாதிரிகளுடனும் அன்பின் அடிப்படையிலும் இறையரசின் பண்புகளை வாழ்வில் எடுத்துக்காட்டினார். திருவிவிலியத்தில் காணப்படும் நிக்கதேமு மற்றும் சமாரியப் பெண் எனும் இரு நிகழ்வுகளின் ஊடாக மேலும் இதனை நாம் இப்பாடத்தில் ஆராய்வோம்.**

***யோவான்* 3:1-15, 4:7-10, *பிலிப்பியர்* 2:1-5, 16**

**இயேசுவும் நிக்கதேமுவும்**

இயேசு தொழுகைக் கூடத்திலும் வேறும் பல இடங்களிலும் போதனை செய்தார். எனவே யூதர்கள் அவரை 'ரபி' என அழைத்தனர். யூதத் தலைவர்களுள் ஒருவரான நிக்கதேமு என்பவர் பரிசேயரும் போதகருமாவர். அவர் ''ரபி , நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் '' என இயேசுவிடம் கூறினார். இயேசுவின் சில போதனைகளை பரிசேயர் ஏற்றுக்கொள்ளவில்லை.

பரிசேயரான நிக்கதேமு இரவில் இயேசுவைச் சந்தித்த நிகழ்விலிருந்து நாம் அறிவது:

- நிக்கதேமுவின் மனதில் காணப்பட்ட ஆன்மீக வினாக்களுக்கு இயேசுவிடம் விடைகளைக் கண்டுபிடிக்க ஆவலாய் இருந்தார் என்பது

- இரவு வேளையில் நிக்கதேமுவுடனான உரையாடலின் மூலம் அவரை மறு வாழ்வடையச் செய்ய இயேசுவால் முடிந்தது.

***''ரபி நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம். கடவுள் தம்மோடு இருந்தாலன்றி நீர் செய்யும் இவ்வரும் அடையாளங்களை யாரும் செய்ய இயலாது.''***
**யோவான் 3:2**





இலவச விநியோகத்திற்காக

மேற்படி திருவிவிலியப் பகுதியில் நிக்கதேமு சமூகத்தில் உயர்நிலையில் இருந்த நபராக இருப்பினும், இயேசு இறைவனிடமிருந்து வந்தவர் என விசுவாசித்து, அவருக்கு உயரிய கௌரவத்தை அளித்து, இயேசுவுடன் உரையாட விரும்பினான். இயேசுவின் அன்பினால், பிற்காலத்தில் அவனது வாழ்வு மாற்றப்பட்டது என்பதை இறைவார்த்தை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

**இயேசு அவனுக்கு கூறிய மறுமொழி**

"மறுபடியும் பிறந்தாலன்றி எவரும்
இறையாட்சியைக் காண இயலாது
என மிக உறுதியாக உமக்குச் சொல்லுகின்றேன்."
யோவான் **3:3**

''வயதான பின் ஒருவர் எப்படிப் பிறக்க முடியும்? தாயின் வயிற்றில் புகுந்து பிறக்க முடியுமா?'' என்று அவன் கேட்ட வினாவிலிருந்து அவன் இயேசுவின் மறுமொழியைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

இயேசு கூறிய உண்மை சத்தியங்களைக் கற்போம்.

## 'மறுபடியும் பிறந்தாலன்றி' என்பதிலிருந்து

'மறுபடியும் பிறந்தாலன்றி அல்லது தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்த தாலன்றி' என்பதன் மூலம் நாம் எதை விளங்கிக் கொள்ளலாம்? தண்ணீரும் ஆவியும் பழைய ஏற்பாட்டில் ஆன்மீகப் புதுப்பித்தலையும், தூய்மையாக்கலையும் குறிக்கின்றது. இப் பின்னணியில் மறுபடியும் பிறந்தால் புதுவாழ்வைக் குறிக்கும்.

இதிலிருந்து இவ் உலகில் பிறக்கும் மனிதன் பாவத்திற்கு அடிமையாகி இறை உறவிலிருந்து விலகி வாழ்கின்றான். பாவத்திலிருந்து விடுதலை அடைய இயேசு கூறியவண்ணமாக புதுவாழ்வை அடைய வேண்டும்.

## 'இறையாட்சியைக் காண இயலாது என்பதிலிருந்து'

பாவத்தில் வாழும் மனிதர் பல வேளைகளில் இறை உறவை மறந்து வாழ் கின்றனர். அப்போது அவர்கள் அழிவடைகின்றார்கள். ஆனாலும் உண்மையிலேயே மறுபடியும் வாழ்வை புதுப்பித்து, இயேசுவை நேசித்து, அவருடன் நெருங்கி வாழும்போது, திரும்பவும் இவ் உலகில் இறையாட்சியின் உரிமையைப் பெறுவார்கள்.

இயேசு நிக்கதேமுக்கு கூறிய 'மறுபடியும் பிறத்தல்' இதுவாகும். இயேசு ''ஒருவர் மனம்திரும்பி தூயாவியின் ஆசியால் புதுவாழ்வு அடைகின்றான் என்கின்றார். அதா வது, ''தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்'' எனக் கூறுகின்றார்.

## சமாரியப் பெண் ஒருவரும் இயேசுவும்


வாசித்துப் பார்ப்போம்

**யோவான் 4:7-10**

யோவான் நற்செய்தி நூலில், இயேசுவுடன் உரையாடிய சமாரியப் பெண்ணின் நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது.
இயேசுவும் சமாரியப் பெண்ணினதும் உரையாடலில் வெளிப்படும் கருத்துக்கள் :

இயேசு:
**''குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும். ''**
**யோவான் 4:7**

சமாரியப் பெண்:
**''நீர் யூதர். நானோ சமாரியப் பெண்.**
**நீர் என்னிடம் தண்ணீர் கேட்பது எப்படி?''**
**யோவான் 4:9**




பொதுவாக யூதருக்கும் சமாரியருக்கும் இடையே எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் யூதரான இயேசு சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்கும் வேளையில் அவள் ஆச்சரியம் அடைந்தாள்.

இவற்றில் குறிப்பிடத்தக்கவை:

- இறைவனான இயேசு பாவியான சமாரியப் பெண்ணுடன் கதைத்தல்
- யூத ஆண் ஒருவர் சமாரியப் பெண்ணுடன் கதைத்தல்

இறைவனின் அன்பானது யூதருக்கு மட்டும் உரித்தானது அல்ல என்பதை எடுத்துக் காட்டுமாறு இயேசு செயற்பட்டார். அதே போன்று ஒதுக்கப்பட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமாரியப் பெண்ணிடம் கருணை காட்டினார். மனிதனின் தீய குணங்களை இறைவன் வெறுக்கின்றார் என்பதை இதன் மூலம் இயேசு முன்வைக்கிறார்.

இயேசு சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்டதன் மூலம், சமூகத்தில் காணப் பட்ட பகைமையை இறையரசின் அடிப்படையான அன்பால் அகற்ற முடியும் என எடுத்துக் காட்டினார். கிறிஸ்துவின் அன்பானது, இன பேதங்களைத் தாண்டி செயற் படும் அன்பு என நாம் அறிவோம்.

அன்று சமூகத்தில் காணப்பட்ட 'இனம்' பற்றிய மனப்பான்மையால் இயேசு தண்ணீர் கேட்ட சம்பவம் சமாரியப் பெண்ணுக்கு பெரும் வினாவாக அமைந்தது. இவ்வாறான சமூகச் சூழ்நிலையில் இயேசு பிற இனப் பெண்ணிடம் ''நான் கொடுக்கும் தண்ணீர், அதைக் குடிப்பவருக்கு பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வை அளிக்கும்'' என்று உறுதி அளித்தார்.

''கடவுளுடைய கொடை எது என்பதையும், குடிக்கத் தண்ணீர் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால்; நீரே அவரிடம் கேட்டிருப்பீர். அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரை தந்திருப்பார்.'' எனக் கூறினார்.

இதிலிருந்து வெளிப்படும் கருத்துக்கள்:

1. மெசியாவாகிய அவரின் வருகையில் நம்பிக்கை வைத்து அவரை நேசிக்கும் அனைவருக்கும் அவரைக் குறித்த தாகம் ஏற்படும்.
2. அதனை விபரிக்க அவர், மனிதனின் தேவைகளுள் ஒன்றான தண்ணீரை உதாரண மாகக் கொண்டு ஆன்மீக தாகத்தை வெளிப்படுத்துகின்றார்.
3. அதாவது நிலைவாழ்விற்கு இயேசு எனும் வாழ்வு தரும் தண்ணீர் வேண்டும். அதற்கான தாகத்தின் ஊடாக இறையரசின் உரிமையைப் பெற முடியும்.

இயேசுவோடு தொடர்புகொள்ள எம்மில் உருவாகும் தாகம் எமது வாழ்வின் மனப்பான்மைகளை மாற்றுவதில் செல்வாக்கு செலுத்துகின்றது. இதனைப் பின்வரும் திருவிவிலியப் பகுதியிலிருந்து விளங்கிக்கொள்வோம்.

***கிறிஸ்துவிடமிருந்து நீங்கள் ஊக்கம் பெற்றுள்ளீர்களா?***
***அன்பினால் பலன் உண்டா?***
***தூய ஆவியானவருடன் தொடர்பு உண்டா?***
***பிறர் மீது பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டுள்ளீர்களா?***
***பிலிப்பியர் 2:1***

இவ்வாறாக ஏற்படும் மனப்பான்மை மாற்றமானது, அனைவரினதும் தனிப்பட்ட விருப்புக்களைக் கடந்து கிறிஸ்துவில் நிலைக்கும் மனப்பான்மையான மாற்றமாக அமைய வேண்டும். அது நிக்கதேமு மற்றும் சமாரியப் பெண்ணுடன் இயேசு உரையாடியதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. கீழ்வரும் திருவிவிலியப் பகுதி அதனை மேலும் வலியுறுத்துகின்றது.

***அவ்வாறான வாழ்வுக்கு தூயாவியின் ஒத்துழைப்பும் பிறர் மீது***
***அன்பும் நட்பும் தோன்றும்.***
***அப்படியானால் நீங்கள் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும்***
***கொண்டவராய்த் திகழ்ந்து ஒரு மனத்தவராயிருந்து***
***என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.***
***கட்சி மனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம்.***
***மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள்.***
***நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல பிறரைச்***
***சார்ந்தவற்றிலேயே***
***அக்கறை கொள்ள வேண்டும்.***
***பிலிப்பியர் 2:2-4***

இவ்வாறாக இயேசுவுடன் தனிப்பட்ட உறவில் நாம் இணையும்போது எமது வாழ்வு இருள் நீக்கப்பட்டு ஒளிவீசும் தாரகையாக ஒளிரும்.

***'குற்றமும் கபடும் அற்றவர்களாய் கடவுளின்***
***மாசற்ற குழந்தைகள் எனத் திகழ்வீர்கள். உலகில்***
***ஒளிரும் சுடர்களாகத் திகழ்வீர்கள்.'***
***பிலிப்பியர் 2:16***

தாரகையால் வெளிவரும் சிறு ஒளியும் இருளில் பெறுமதியான ஒளியாகும். இவ்வாறு இறையொளிபெற்று உலகில் ஒளிதரும் தாரகையாக ஒளிவீசி நாம் வாழ்ந்திட முயற்சி செய்வோம்.

**செயற்பாடு**

01. தாரகையின் சிறு ஒளி இருளில் பெறுமதிமிக்க ஒளி'' என்பதன் பொருளை விளக்குக.

02. இயேசுவுடன் உறவு கொள்ள உங்களில் வளர்ச்சியடைய வேண்டிய நற்பண்புகள் 5 எழுதுக.

# 18 நாம் இயேசுவுக்கு உரியவர்கள்

**நல்ல மனித வாழ்வுக் கோலத்தை உடைய சமூகத்தையே இறைவன் எதிர்பார்க்கின்றார். அவ்வாறான சமூகத்தைப் பேணுவதில் குடும்ப செயற்பாடுகளைக் கற்றல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**தொடக்க நூல் 2:18-25, கொலோசையர் 3:12-17, 3:18-21, எபேசியர் 5:21-6:4, மத்தேயு 25:31-46, தீத்து 3:1-2, யாக்கோபு 2:1-4,**

சமூகம் என்பது மக்கள் கூட்டத்தால் ஆனது. அதற்கேற்ப உலகில் இலங்கையும் ஒரு சமூகம் ஆகும். இலங்கை வாழ் நாங்கள் சமூகத்தின் குடிமக்கள் ஆவோம். நாம் ஒவ்வொருவரும் குடும்பம் எனும் சிறு அலகுக்கு உரித்தானவர்களே!

உலக படைப்பை நல்லது என்று கண்டு, அவற்றைச் சிறப்பாகப் பராமரித்து பாதுகாக்கும் பொறுப்பை கடவுள் மனிதரிடம் ஒப்புவித்தார். அதனால் ஒழுக்காற்றல் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப குடும்பம் எனும் ஒவ்வொரு சிறு அலகும் கடமைப்பட்டுள்ளது.

## குடும்பத்தின் படைப்பாளர் இறைவன்

**வாசித்துப் பார்ப்போம்**

**தொடக்க நூல் 2:18-25**

ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும் விண்ணுலகையும் படைத்தார். கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசியில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான். மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்கு துணையை உருவாக்குவேன் என்றார். கடவுள் மனிதனின் விலா எலும்பினால் பெண்ணை உருவாக்கினார். அவளுக்கு 'ஏவாள்' (உயிருள்ள யாவற்றுக்கும் தாய் என்பது பொருள்) என ஆதாம் பெயரிட்டான். (தொ.நூ 3:20)

ஆதாமும் ஏவாளும் இறைபடைப்பின் உயர் படைப்பாளர்கள். இதனால், அவர்களுக்கு இடையே பிரிக்கமுடியாத இணைப்பு உருவாகியது.

தனித்தனியே ஒவ்வொருவருடைய நல் வாழ்வுக்கும், சமூகத்தின் நல் வாழ்வுக்கும் வழிகாட்டியாக திருமறையில் இறை அரசின் விழுமியங்களை நாம் அறிகின்றோம்.

எனவே,

இவர்கள் இருவர் மூலம் மனித இன வளர்ச்சி இடம்பெற்று சமூகம் உருவாக் கப்பட்டது என நாம் அறிகின்றோம். அனைத்து மனிதரும் ஒரே சமூகமாகக் கருதப்படுகின்றனர். குடும்பம் எனும் சிறு அலகானது உலகின் சிறிய சமூக கூட்டுறவு என அறிவோம். இறையரசின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுதல் சமூகத்தின் ஒன்றிணைந்த கடமையாகும்.

## கிறிஸ்தவ குடும்பத்தின் கடமைகளும் பொறுப்புக்களும்

கணவன் - மனைவியின் பொறுப்புக்களும் கடமைகளும் (எபேசியர் 5:21-33)

- கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருத்தல்.
- திருமணமான பெண்கள், ஆண்டவருக்கு பணிந்திருப்பது போல, தங்களின் கணவருக்கும் பணிந்திருத்தல்.
- திருமணமான ஆண்கள், கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல தங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துதல்.
- கணவர்களும் மனைவியரைத் தம் சொந்த உடல் எனக் கருதி அன்பு செலுத்துதல்.

கடவுள் மானிடரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். அவரது படைப்பில் ஆணும் பெண்ணும் சமத்துவத்தில் உள்ளவர்கள். கடவுள் ஆணுக்குத் துணையாகப் பெண்ணைப் படைத்தார். மனிதன் அன்புள்ளவனாய் இணைந்து வாழ்வதை இறைவன் எதிர்பார்க்கின்றார். எனவே, கணவன் தன் மனைவியை, தனது உடல் போன்று நேசிக்க வேண்டும். அவன் தன்னில் அன்பு கூருவது போன்று, மதிப்பைப் பெற விரும்புவது போன்று, தன்னைப் பராமரிப்பது போன்று, தனது மனைவிக்கும் செய்யவேண்டும்.

மேலும் ஒருவருக்கொருவர் பணிவுடன் வாழ வேண்டும். அவர்கள் அன்புடனும் சமத்துவத்துடனும் கௌரவத்துடனும் வாழ வேண்டும். ஒருவர் தேவையை மற்றவர் அறிந்து நிறைவேற்றி மதித்து செயற்பட வேண்டும்.

கணவன் மற்றும் மனைவி ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பு கிறிஸ்துவின் சபைக்குக் காட்டும் அன்பைப் போல் காணப்பட வேண்டும் என எபேசிய திருமுகத்தில் எழுதப்பட்டுள்ளது. சபையில் எவ்வித பிரச்சனைகள் ஏற்பட்டாலும் கிறிஸ்து திருச்ச பைக்குக் காட்டும் அன்புக்கு குறைவில்லை. அவ்வாறான முன்மாதிரி குடும்பத்திலும் நிலைக்க வேண்டும் என இறைவார்த்தை எமக்கு உணர்த்துகின்றது.

## பிள்ளைகளின் கடமைகள் (எபேசியர் 6:1-3)

- ♦ பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கீழ்படியுங்கள் ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது.

- ♦ உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.

பிள்ளைகள் குடும்பத்துக்கு இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடை ஆவர். எனவே அவர்களது தேவைகளை அன்புடனும் ஆதரவுடனும் நிறைவேற்றி ஒழுக்கம் நிறைந்த பிள்ளையாக வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும். அதேபோன்று பிள்ளைகளும் பெற்றோரின் சொல் கேட்டுக் கீழ்ப்படிந்து பெற்றோரை மதித்து வாழ வேண்டும். பெற்றோருக்குப் பணிந்து கௌரவம் அளித்து வாழும் பிள்ளை, சமூகத்தின் நல் குடிமகன் ஆவது நிச்சயம்.

குடும்பம் என்ற ரீதியில் வளர்ச்சிகாணும் வேளையில், தமது சகோதர சகோதரிகளையும் கவனித்து, பாதுகாத்து, பராமரித்து, அவர்களது தேவைகளைக் கண்டறிந்து, விசுவாசத்துடன் வாழ வேண்டும். சமாதானமாக இணைந்து வாழும் சகோதரர் இறைவனின் மகத்தான ஆசீர்வாதமாகக் கருதப்படுவர்.

## சமூகத்தில் எமது பொறுப்புக்களும் கடமைகளும்

கிறிஸ்தவரில் காணப்பட வேண்டிய வாழ்வுக்கான கொள்கைகள் (கொலோசையர் 3:12-17)

- ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் ஒருவரையொருவர் மன்னியுங்கள்.

- எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியில் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

- இவை அனைத்துக்கும் மேலாக அன்பையே கொண்டிருங்கள். அதுவே இவை அனைத்தையும் பிணைத்து நிறைவு பெறச் செய்யும்.

கிறிஸ்தவராக சமூக வாழ்வில் எமது செயல்கள் இறைமகிமையின் செயல்களாக அமைய வேண்டும். எமது சொல் பிறர் வாழ்வைச் சிதைவு படுத்தாது வலுப்படுத் துபவையாக அமைய வேண்டும். அதனால் சொல்லாலும் செயலாலும் எதைச் செய்தாலும்; அவற்றை இறைமகிமைக்காகவும், இறை கௌரவத்துக்காகவும் செய்தல் வேண்டும்.

நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் அன்புடன் செயற்படுதல் அவசியம். அன்புடன் செயற்படும்போது ஒருவருக்கொருவர் பொறுமையுடனும் ஒருவரையொருவர் மன்னித்தும் ஒருவரில் ஒருவர் இரக்கம் காட்டியும் வாழ வேண்டும்.

**வாசித்துப் பார்ப்போம்**

**மத்தேயு 25:31-46**

இயேசுவைப் பின்பற்றுபவர்கள் சமூகத்தில் நிறைவேற்ற வேண்டிய இறையரசின் பண்புகள் சில மத்தேயு 25:31-46 இல் தரப்பட்டுள்ளது. அதற்கேற்ப கிறிஸ்தவ பிள்ளையாக இயேசுவுடன் ஆழமான உறவை வலுப்படுத்துவதற்காக குடும்பம் மற்றும் சமூகப் பெறுமதியை மேம்படுத்துதல் எமது கடமையாகும். அவை பின்வருமாறு:

நான் பசியாய் இருந்தேன் - நீங்கள் எனக்கு உணவு கொடுத்தீர்கள்.

தாகமாய் இருந்தேன் - என் தாகத்தை தீர்த்தீர்கள்.

அன்னியனாக இருந்தேன் - என்னை ஏற்றுக் கொண்டீர்கள்.

ஆடையின்றி இருந்தேன் - நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்.

நோயுற்றிருந்தேன் - என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்.

சிறையில் இருந்தேன் - என்னைத் தேடி வந்தீர்கள்.

- கிறிஸ்தவர்களாகிய எமது நோக்கம் இறையரசை அன்பால் உரித்தாக்குதல் ஆகும். அதற்குப் பிறரிலும் சமூகத்திலும் அன்பு நிலைக்க வேண்டும்.

- கிறிஸ்தவரின் நாளாந்த நடைமுறை வாழ்வு இயேசுவுடன், இணைக்கப்பட்டு சமூகம் சார்பாக உணர்வுடையதாக இருக்க வேண்டும்.

கிறிஸ்தவராகிய எமக்கு தீர்ப்பு நாள் உள்ளது. அதற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். பிறர் வாழ்வை மேம்படுத்த நாம் செயற்படும் மனப்பான்மை அவசியம் என ஆண்டவர் கூறுகின்றார். பிறரின் நல்வாழ்வுக்காக நாம் செயற்படுதல் இயேசுவுக்கு செய்த பணியாக கருதப்படுகின்றது. சிறிய ஒருவருக்கு நாம் செய்யும் செயல் விண்ணுலக வாழ்வை உரிமையாக்க உறுதுணையாக அமையும்.

தீத்து 3:1-2, யாக்கோபு 2:1-4, போன்ற திருவிவிலியப் பகுதிகளை ஆராயும்போது சமூகத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழும் வேளையில் செயற்பட வேண்டிய முறைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

- அதிகாரிகளுக்கும் ஆட்சியாளருக்கும் சமூக அபிவிருத்திப் பணிக்கு கீழ்படிதல்.
- நன்மையான செயல்களுக்கு ஆயத்தப்படுதல்.
- பிறரைக் குறை சொல்லாதிருத்தல். கலகம் செய்யாதிருத்தல்.
- ஒழுக்கம் உள்ளவர்களாக இருத்தல்.
- ஏழை பணக்காரன் மற்றும் தராதரம் பாராது செயற்படுதல்.

எமது வாழ்வில் குடும்பத்தைப்போல் சமூகத்திலும் நாம் செயற்பட வேண்டிய முறைகளைக் கற்றோம். அவ்வாறான நற்செயல்களில் நாம் ஈடுபடும்போது எமது தலைமைத்துவத்தால் சமூகம் மேம்படும். அவ்வாறான செயலுக்கு தலைமைத்துவம் வகிப்பவர்களுக்கு நாம் ஒத்துழைப்புடன் நடந்து நற்செயல்களுக்கு உதவி செய்து பங்களிப்பு வழங்குதல் கிறிஸ்தவரின் கடமையாகும்.

அவ்வாறான வேளையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு ஒருவரையொருவர் விமர்சிக்காது, கோபப்படாது, இரக்கத்துடனும் ஒழுக்கத்துடனும் செயற்படுதல் மிக முக்கியம். (உதாரணம்: போட்டிகளிலும் விளையாட்டுகளிலும் கொடுக்கப்படும் தீர்ப்புகளுக்குப் பணிந்து நடத்தல்)

**சிந்திப்போம்**

தற்போதைய எமது சமூகத்தை நோக்கும்போது குடும்ப உறவும் சமூக உறவும் வீழ்ச்சி அடைந்து காணப்படுகின்றது என்பது நன்கு புலப்படுகின்றது. இதற்கான காரணம் மனிதன் இறைவிருப்பத்துக்கு விலகி செயற்படுகின்றமையே.

நான், எனது, எனக்கு என்று (சுயநலம்) அல்ல; நாம், எமது, எங்களுக்கு என்ற பொது குணங்கள் எமது வாழ்வில் மலர வேண்டும். எமது வாழ்வை மாற்றி நமக்கும் நமது குடும்பத்துக்கும், பொது சமூகத்துக்கும் பயனுள்ள வழியில் வாழப் பழக வேண்டும்.

**செயற்பாடு**

01. கொலோசையர் 3:12-17 இல் காணப்படும் கிறிஸ்தவ வாழ்வின் கொள்கைகள் மூன்றைத் குறிப்பிடுக.

02. மத்தேயு 25:31-46 இல் இயேசு கூறிய வார்த்தைகளில் சமூகத்தில் நாம் செயற்படவேண்டிய மூன்று முறைகளை விளக்கி எழுதுக.

# 19 சக வாழ்வு வாழ்வோம்

**கொரிந்தியருக்கும் எபேசியருக்கும் எழுதப்பட்ட திருமுகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இறையரசின் சிறப்பான பெறுமதிகளை முன்னுதாரணமாகக் கொண்டு சக வாழ்வை வலுப்படுத்த பங்களிப்பு வழங்குதல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

***எபேசியர் 4:11-16, 2 கொரிந்தியர் 6:4-7, 16, 7:1***

*இவ் உலகில் இயேசுவின் சார்பில் செயற்பாடுகளை நிறைவேற்ற, இறைவன் கிறிஸ்தவராகிய எம்மை அழைத்துள்ளார். அதற்காக இயேசு பயணம் செய்த கடினமான வழியில் நாமும் பயணம் செய்ய நேரிடலாம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறு கடினமான பாதையில் பயணம் செய்கையில், எமது மனப்பாங்கும் கருத்துக்களும் சமூகத்தில் நிலவும் மனப்பாங்குகள் கருத்துக்களுடன் பொருந்தாத தன்மை ஏற்படலாம்.*

***மாறாக அனைத்துச் சூழ்நிலைகளிலும் நாங்கள் கடவுளின் பணியாளர்கள் என்பதை எங்கள் நடத்தையால் காட்டுகிறோம்.***
***வேதனை, இடர், நெருக்கடி ஆகியவற்றை மிகுந்த மன உறுதியோடு தாங்கி வருகிறோம்.***
***நாங்கள் அடிக்கப்பட்டோம். சிறையில் அடைக்கப்பட்டோம். குழப்பங்களில் சிக்கினோம். பாடுபட்டு உழைத்தோம். கண் விழித்திருந்தோம். பட்டினி கிடந்தோம்.***
***தூய்மை, அறிவு, பொறுமை, நன்மை, தூய ஆவியின் கொடைகள், வெளிவேடமற்ற அன்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றோம்.***

2 **கொரிந்தியர்** 6:4-5

*இப்பயணத்தை மேற்கொள்ளும் எமக்குப் பல்வேறு அருட்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. (எபேசியர் 4:11) அவை திருஅவையின் பல பணிகளுக்குப் பயன்படுத்தலாம். மேலும் இறையரசின் பண்புகள் வெளிப்படும் கிறிஸ்தவ பிரஜையாகவும் திருஅவையாகவும் நாம் சமூகத்துடன் தொடர்புபட்டுள்ளோம். இறைவன் எமக்கு ஆற்றல்களை எமது சொந்த நோக்கத்தை நிறைவேற்றத் தரவில்லை என்பதை நாம் இங்கு அறிந்துகொள்ள வேண்டும். அவை கிறிஸ்துவின் உடலுடன் இணைந்து இறை விருப்பம் நிறைவேறச் செயற்பட வேண்டும். இதனூடாக நாம் கிறிஸ்துவின் உடலை வளர்ப்போம். (எபேசியர் 4:16)*

## சகவாழ்வில் எதிர்நோக்கும் சவால்கள்

### வாசித்துப் பார்ப்போம்

**2 கொரிந்தியர் 6:16, 7:1**

நாம் வாழும் சமூகம் பலஇன, மத மக்களைக் கொண்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான சூழலில் கிறிஸ்தவராகிய நாம் அவதானத்துடன் வாழவேண்டும். எமது செயல்களில் பிறரை ஒதுக்கி, அவர்களின், கருத்துக்களை மறுத்து, அவர்களின் எண்ணங்களை மதிக்காது வாழும் சுற்றாடலை உருவாக்காதிருத்தல் அவசியம்.

**கலப்பு சமூகத்தின் சிறந்த குணவியல்புகள்**

1. கலப்பு திருமணத்தால் உருவாகும் குடும்ப அலகை ஆதரித்தல் (இனம், மதம்)

2. சமூகப் பணியில் கிறிஸ்தவர், பல சமயத்தவருடன் ஒன்றிணைந்து செயற்படுதல். (மரண உதவிச் சங்கம், நலன்புரிச் சங்கம்)

3. சமூக அநீதிகளுக்கு எதிராகச் செயற்படும் அமைப்புக்களில் அங்கம் வகித்தல். (தொழில் நிறுவனங்கள்)

4. பிற சமயங்களுக்கு இடையிலான சந்திப்புக்களில் பங்குபற்றல், அவர்களுக்கு உதவி செய்தல் (திருமணம், மரணம்)

5. பிற மதத்தவரின் விசேட அழைப்புக்களை மதித்து நடத்தல் (கலாசார விழாக்கள், சமய விழாக்கள்)

பவுல் முன்வைத்த கருத்துக்கள் சிலவற்றையும் நாம் இங்கு பார்ப்போம்.

1. வாழும் கடவுளின் கோவில் நாமே
   (2 கொரிந்தியர் 6:16)

2. நாம் உடலிலும் உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி நம்மையே தூய்மைப் படுத்துவோம்.
   (2 கொரிந்தியர் 7:1)

3. கடவுளுக்கு அஞ்சி தூய வாழ்வில் நிறைவடைவோம். (2 கொரிந்தியர் 7:1)

பவுல் முன்வைக்கும் இக்கருத்துக்களைப் பற்றி நாம் சிந்திப்போம். பல்லின, பல்சமய சமூகத்தில் வாழும் நாம் அனைத்திலும் இணக்கம் தெரிவிக்க முடியாது.

அனைத்து மத நம்பிக்கைகளிலும் சமத்துவத்தை காணமுடியாது.

நாம் நம்புகின்றவற்றை பிறர் ஏற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் காணப்படும்.

எமது ஆன்மீக அறிவை செயற்படுத்தும்போது சில வேளைகளில் எமது கருத்துக்கள் முரண்பாடுடையவையாகத் தென்படலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது நம்பிக்கையைப் பாதுகாத்து செயற்படும் பொறுப்பு எமக்கு உண்டு. இறையரசின் பண்புகள் மற்றும் இறையரசின் பெறுமதி என்பவற்றை எமது வாழ்வின் மூலம் சமூகத்தில் வெளிப்படுத்தும் பொறுப்பு எமக்கு உண்டு. அவ்வாறான செயலில் ஈடுபடும் வேளையில் எப்போதும் முள் நிறைந்த அனுபவங்களைப் பெறும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அவ்வாறான வேளைகளில் சமூகத்தில் சகவாழ்வு நிமித்தம் எம்மால் ஆற்றப்படவேண்டிய நற்செயல்களை நாம் ஆற்ற வேண்டும்.

உதாரணமாக, சமூகத்தில் பிள்ளை உலகு தொடர்பான பொறுப்பில் செயற்படும் போது, புனித தெரேசாவை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்படும் வாய்ப்பு எமக்கு உண்டு. அவர் இறையரசின் உத்தம பண்பான இறையன்பை பலவித வேறுபாடுகளையும் கடந்து சமூகத்தில், சகவாழ்வில் இணைந்து முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். நாமும் இவ்வாறு சகவாழ்வு வாழ முயற்சிப்போம்.

**நாம் நற்பண்புகளை வளர்த்து நல்லுறவுடன் சமூகத்தில் சக வாழ்வு வாழ்வோம்.**

**செயற்பாடு**

01. உங்களில் காணப்படும் கடவுள் அருளிய கொடைகள் மூன்றை அடையாளம் கண்டு இறை மகிமைக்காக அவற்றைப் பயன்படுத்தும் வழிகளை எழுதுக.

02. ''சக வாழ்வு வாழ்வோம்'' என்ற தலைப்பில் கிறிஸ்தவ சஞ்சிகைக்கு கட்டுரையொன்று எழுதுக.

# 20 தூயாவியின் வழிகாட்டலை பெறுவோம்

எமது நற்செயல்கள் சமூகத்துக்குப் பயனுள்ளதாய் இருக்கும். அதேபோல் எமது தீயசெயல்கள் பயனற்ற நிலையைத் தோற்று விக்கும், எனவே இறை வாழ்க்கைக்கு அமைய நல்லவாழ்வை வாழுவதற்காக இறைவார்த்தையைத் தேடிப்பார்த்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.

**நீதிமொழிகள் 23:29-35, உரோமையர் 12:1, கலாத்தியர் 5:16-21**

மகள் : ஆ... அண்ணா! நாம் இப்போது குடும்ப ஜெபம் செய்ய ஆயத்தம். நீங்கள் சரியான நேரத்தில் வந்துவிட்டீர்கள்.

அம்மா : மகனே! ஏன்? நீ சில நாட்களாக தாமதமாகி வீட்டுக்கு வருகின்றாய்?

மகன் : இந் நாட்களில் அலுவலகத்தில் வேலை அதிகம் அம்மா! அதனால் தான் தாமதமாகி வருகின்றேன்.

மகள் : பொய் அம்மா! அண்ணா வேலை முடிந்த பின்னர் நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுவதாக நான் அறிந்தேன்.

மகன் : அம்மா! இவள் யாரோ கூறிய பொய்யைக் கேட்டு நம்புகின்றார். நான் உண்மையைத் தான் கூறினேன்.

அப்பா : 'நீ ஏன் வீட்டுக்குத் தாமதமாகி வருகின்றாய்?' என நானும் சிந்தித்துக் கொண்டு தான் இருந்தேன். பொதுவாக நீ ஆறரை மணியளவில் வீட்டுக்கு வந்து விடுவாய் அல்லவா? தற்போது நாம் நித்திரைக்குச் சென்ற பின்னர் தான் வருகின்றாய். முன்னர் போன்று அல்ல. நேரம் சென்று வந்து சாப்பிட்டுப் படுத்து விடுகின்றாய்.

அம்மா : ஆம்... இவன் இப்போது குடும்ப ஜெபத்தையும் மறந்து விட்டான்.

மகள் : ஆம்!... ஆமாம்!... அண்ணா முன்னர் போன்று இப்போது எம்முடன் நேரத்தைச் செலவழிப்பதில்லை. எங்களுடன் சேர்ந்து சாப்பிடுவதும் இல்லை.

அப்பா : மகனே! நீ செல்லும் வழி சரியில்லை என்பது எனக்கு நன்கு புரிகின்றது. உன்னுடன் நான் கதைக்க வேண்டும்.

அம்மா : ஆம்! மகனே! நாம் கிறிஸ்தவர் என்ற வகையில் நல்வாழ்வு வாழ முயற்சிப்போம். நாம் நற்பண்புகளை மறந்து வாழ முடியாது. பல நண்பர்களுடன் பழகுவது நல்லதல்ல.

மகன் : நான் தவறான வழியில் செல்லவில்லை. தங்கை பொய் கூறுகின்றாள். எனக்கு வேலை அதிகம். அதனால் தான் தாமதம்.

மகள் : அம்மா! அண்ணா தனது தவறை மறைப்பதற்காகப் பொய் கூறவும் ஆரம்பித்துள்ளான்.

அம்மா : மகனே! பொய் சொல்வதை விட்டு உண்மை கதைக்கப் பழகு. இது வரையில் தவறு செய்திருந்தால் இனி தவறு செய்யாதிருக்க முயற்சி செய்.

அப்பா : மகனே! நான் சொல்வதைச் சற்று கேள். நீ நண்பர்களுடன் சேர்ந்து தவறான பழக்கத்தில் ஈடுபட்டிருப்பதை உனது நடத்தையால் நான் புரிந்து கொண்டேன். அதிலிருந்து மிக விரைவில் விடுபடு.

மகள் : அப்பா! கடந்த வாரம் போதகரின் அருளுரைக்கான திருவிவிலியப் பகுதி அண்ணாவுக்கு மிகப் பொருத்தமாக அமைந்திருந்தது என நான் நினைக்கின்றேன். நான் அண்ணாவுக்கு அதனைக் கூற வேண்டும் என எண்ணினேன். அன்று போதகர் நீதிமொழிகள் 23:29-35 வாசித்து முக்கிய கருத்துக்களை கூறினார்.

அப்பா : எமக்கு அதை வாசித்துக் காட்டு மகளே!

**வாசித்துப் பார்ப்போம்**

**நீதிமொழிகள் 23:29-35**

துன்பக் கதறல், துயரக் கண்ணீர், ஓயாத சண்டை, ஒழியாத புலம்பல், காரணம் தெரியாமல் கிடைத்த புண்கள், கலங்கிச்சிவந்திருக்கும் கண்கள் - இவை அனைத்தையும் அனுபவிப்பவர் யார்? திராட்சைரச மதுவில் நீந்திக் கொண்டிருப்பவர்களே. புதுப் புது மதுக்கலவையை சுவைத்து களிப்பவர்களே.

அப்பா : இந்த காரணிகள் அனைத்தும் உண்மை மகனே! நீ கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து குடிக்கப் பழகியது உன்னைப் போன்று எங்களுக்கும் அதிக துக்கம். நீயும் இந்த வேதனையை உணர்ந்திருப்பாய். உன்னுடைய பழக்கம் எங்கள் அனைவரது வாழ்விலும் துன்பத்தைத் தருகின்றது. உன்னிடமிருந்த கலகலப்பு, மகிழ்வு, விநோதம் போன்றன குறைந்து பொய் கூறவும் பழகிவிட்டாய்.

மகன் : நான் குடிகாரன் போன்று குடிக்கின்றேன் என யார் கூறியது? சில நாட்களில் நான் நண்பர்களுடன் சேர்ந்து சிறிதளவு குடிப்பது மட்டுமே. யாரோ தங்கையிடம் பொய் கூறியிருக்கின்றார்கள்.

அம்மா : மகனே! எவ்வளவு குடித்தாலும் அது தவறு தான். உனது தவறை தற்போது நீ புரிந்து கொண்டிருப்பாய். உனது தவறால் தான் நீயும் எங்களுடன் வாதாடுகின்றாய். மது அருந்திய வேளையில் நண்பர்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சனைகள் சண்டையுடனும் காயங்களுடனுமே முடிவடையும்.

மகள் : திராட்சை மதுவைக் கிட்ட வைத்திருக்கவும் அதனைத் தேடியும் செல்ல வேண்டாம் என போதகர் கூறினார். மதுவைப் பார்த்து ''இந்த இரசத்தின் சிவப்பென்ன! பாத்திரத்தில் அதன் பளபளப்பென்ன! எனச் சொல்லி மகிழாதீர்.'' என திருவிவிலியத்தில் நீங்கள் வாசிக்கவில்லையா?

அப்பா : பிறர் இவ்வாறான தவறு செய்யும் வேளைகளில் நாம் அவர்களைத் தடுக்க வேண்டும். அவர்கள் அதற்குப் பழக்கப்படும்போது ஏற்படும் அழிவை அறிவுறுத்த வேண்டும். மகனே! நானும் இளைஞனாக இருந்த காலத்தில் இவ்வாறான தவறுகள் செய்தேன். ஆனாலும் நான் அவற்றிலிருந்து மீட்கப்பட்டேன். குடிக்கப் பழகிய ஒருவர், அது வாழ்வின் நல்லதொரு விடயம் என நினைப்பார். நண்பர்களுடன் சேர்ந்து கழிக்கும் மகிழ்வான நேரம் என நினைப்பார்கள். இறுதியில் துன்பமும் துயரமும் ஏற்படுகின்றது. குடியால் ஏற்படும் விளைவுகளை மீண்டும் வாசித்துப் பார்.

மகள் : அப்பா! நீதிமொழிகள் 23:32-35 வாசித்து அதனை அண்ணாவுக்குத் தெளிவுபடுத்துங்கள். நான் திரும்பவும் அதனை வாசிக்கின்றேன்.

## நீதிமொழிகள் 23:32-35

அப்பா : திராட்சை மது எமது உடலினுள் செல்லும்போது அது விஷமாக மாறுகின்றது என உனக்கு தெரியும் தானே மகனே. ஆண்டவர் எமக்கு அருளிய பெறுமதிமிக்க வாழ்வை அது அழித்துவிடுகின்றது.
'பாம்பு போலக் கடிக்கும். விரியனைப் போலத் தீண்டும்' என்ற வார்த்தையிலிருந்து எமது வாழ்வானது செல்லும் தீய வழியை அறிகின்றோம். அப்போது நாம் மனநிம்மதியற்று வாழ்கின்றோம். இப்போது நான் சொல்வது உனக்கு புரிந்திருக்கும் என எண்ணுகின்றேன்.

அம்மா : குடிபோதையில் மனம் அங்குமிங்கும் அலைகின்றது. நினைவின்றி தீய சொற்கள் பல வெளிவருகின்றன. மனதில் ஒரே குழப்பம் காணப் படுகின்றது.

அப்பா : குடித்த பின்னர் மாறுபட்ட நபராக மாறுகின்றார். தாம் என்ன செய் கின்றனர் என்று தெரியாத நிலை தோன்றுகின்றது. இறைவார்த் தையில் எழுதப்பட்டுள்ளது போன்று மனம் தவறான வழியில் ஈடுபடு கின்றது. உனக்கு யார் என்ன சொன்னாலும், அல்லது செய்தாலும் தெரியாத பரிதாப நிலை. உன்னை அடித்தாலும் உனக்குத் தெரியாத நிலை ஏற்படும்.

அம்மா : அதற்குப் பழக்கப்பட்டு விட்டால் நாள்தோறும் அதனையே தேடிச் செல்கின்ற நிலை ஏற்படுகின்றது. அதிலிருந்து விடுபடாது அதனை நாடியே தேடிச் செல்கின்றனர். குடிப்பழக்கம் ஏற்பட்டால் அதிலிருந்து மீள்வது மிகக் கடினம் என எமக்குத் தெரியும். அந்தத் தவறை செய்யும் முன்னர் நீ எங்களைக் குறித்தும் சிந்தித்து இருக்க வேண்டும்.

அப்பா : நாங்கள் கதைத்தது உனக்கு விளங்கி இருக்கும். இதனைத் தொடர்ந்தும் செய்தால் இன்னும் பல பாரதூரமான விளைவுகள் தோன்றும். இப்போதே இதிலிருந்து உன்னால் விடுபட முடியும். நீ இறைவனிடமிருந்து தூர விலகி விட்டாய் என உனக்குத் தெளிவாக விளங்கி இருக்கும்.
மகனே! இறைவனிடம் மன்னிப்பு கேள். அவருடைய இரக்கத்தைத் தேடு. இதிலிருந்து உன்னால் விடுபட முடியும். திருவிவிலியத்தை வாசித்து வாழ்வை அறிந்துகொள்.

சகோதர சகோதரிகளே, கடவுளுடைய இரக்கத்தை
முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன்.
கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்.
இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு.

**உரோமையர் 12:1**

மகன் : (சிந்தித்தல். அவதானமாக கேட்டுக்கொண்டிருத்தல். கண்களிலிருந்து கண்ணீர் வடிதல். அவனுக்கு முன்னால் கலாத்தியர் 5:16-21 திறந்து வைக்கப்பட்டிருத்தல். அவன் தன் தவறுகளுக்காக மனம்வருந்துதல்)

**தூய ஆவியின் வழிகாட்டல்**

***தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப வாழுங்கள். அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள். ஊனியல்பின் இச்சை தூய ஆவிக்கு முரணானது. தூய ஆவியின் விருப்பம் ஊனியல்புக்கு முரணானது. இவை ஒன்றுக்கொன்று எதிராய் உள்ளதால் நீங்கள் செய்ய விரும்புவதை உங்களால் செய்ய முடிவதில்லை. நீங்கள் தூய ஆவியால் வழிநடத்தப் பட்டால்திருச்சட்டத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்க மாட் டீர்கள். ஊனியல்பின் செயல்கள் யாவருக்கும் தெளிவாய் தெரியும். அவை பரத்தமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலை வழிபாடுபில்லி சூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன்.***

**கலாத்தியர் 5:16-21**

**கிறிஸ்தவ வாழ்வு**

எமது வாழ்வின் ஒரு பகுதியை இறைவனுக்கும் ஒரு
பகுதியை அலகைக்கும் வழங்குவதில் பலனில்லை.
படிப்படியாக அலகை எமது வாழ்வை அழித்துவிடும். தூய
ஆவியின் வழிகாட்டலுடன் இறைவனுக்கு
ஒப்புவித்தல் வேண்டும். இதுவே உண்மையான வழிபாடு
என பவுல் வெளிப்படுத்தி உள்ளார். நாம் எமது
செயற்பாட்டில் இறைவனுக்கு ஏற்ற வண்ணம்
வாழ்கின்றோம் என்பதற்கான சான்று இறைவிருப்பம் ஆகும்.

**செயற்பாடு**

01. தற்கால இளம் சந்ததியினர் தவறு செய்ய தூண்டப்படும் தன்மை அதிக ரித்துள்ளது என்பதற்கான காரணிகள் மூன்றை எழுதுக..

02. இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கும் வாழ்வு கோலத்தை நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்கு சமூக சூழலில் காணப்படும் இடையூறுகள் இரண்டினை விபரித்து எழுதுக.

# 21 வறுமையின் சவாலை வெற்றிகொள்வோம்

**உலகத்திலுள்ள வறுமையின் பல்வேறு வடிவங்களை உணர்ந்தறிந்து வாழ்வை வடிவமைத்துக்கொள்ளும் முறையை ஆராய்ந்து பார்ப்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.**

***பரி. மத்தேயு 6: 19-21, லூக்கா 16: 19-31, 18: 18-30,***
***திருத்தூதர் பணிகள் 6: 1***

## உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்

இயேசு சாதாரண மக்கள் மத்தியில் வாழ்ந்து, செயற்பட்டு மனித வாழ்வுக்கு புதிய எதிர்ப்பார்ப்பை வழங்கினார். சமூகத்தில் வாழும்போது மனித தேவைகளைக் குறித்து கரிசனையுடைவராக இருந்து கருணையுடன் மனித நேய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மக்களை வழிநடத்தினார். மேலும் இறையரசை உரிமையாக்கிக்கொள்ளும் வகையில் வழிகளைச் செவ்வைப்படுத்திய அவர், செல்வந்தர்களின் வாழ்வில் ஒரு மாற்றத்தை எதிர்ப்பார்த்தார். இறைவன் எமது செல்வத்தாலும் உழைப்பாலும் காலத்தாலும் பிறரை மேம்படுத்த வேண்டுமென விரும்புகின்றார்.

சாதாரண மனித வாழ்வில் வறுமை எனும் ஏழ்மை நிலை பொருளாதார ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் காணப்படலாம். இதனடிப்படையில் நாம் முதலில் உலக வாழ்வின் ஏழ்மை நிலையையும் இரண்டாவதாக ஆன்மீக வாழ்வில் ஏழ்மை நிலை குறித்தும் கவனம் செலுத்துவோம்.

### 1. உலக ரீதியிலான ஏழ்மை நிலை

***ஏழ்மை நிலையை மேற்கொள்ள வேண்டுமாயின்***

- ***ஏழைகளுக்குப் பலனாக இருப்பது முக்கியமாகும்***

நாம் ஏழைகளுக்கு உதவுதல், பராமரித்தல் மற்றும் போஷித்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடலாம். அவர்களுக்கான நிவாரணப் பணியில் ஈடுபடலாம். அதற்கும் மேலாக தங்கள் ஏழ்மை நிலையிலிருந்து மீட்புப் பெற தங்கள் சக்தியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கான ஆலோசனை வழங்கலாம். ஏனெனில் நிவாரணத்தில்

தங்கியிராமல் வாழ்வை மேம்படுத்திக்கொள்ள அவர்களுக்கு நாம் உதவ வேண்டும். (திருத்தூதர் பணிகள் 6: 1)

- **சோர்வடையாமல் செயற்படுவது முக்கியமாகும்**

சோர்வாக செயற்பட்டு நிறைவேற்ற முடியாமல் போன விடயங்களுக்குக் காரணம் கூறி மற்றவர்களில் தங்கியிருக்க நினைக்கும்போது, ஏழ்மை நிலையை அனுபவ ரீதியாகப் பெற வேண்டியிருக்கும். சோர்வுடன் செயற்படாமல் சுறுசுறுப்பாகச் செயற்படுவதும் காலம், உழைப்பு, பணம் ஆகியனவற்றை உரிய முறையில் உபயோகப்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் பொருளாதாரத்தை உறுதியாக மேம்படுத்திக்கொள்ளும் அதே நேரம், பொருளாதாரத்தை முகாமைத்துவப்படுத்தி அபிவிருத்தி வழியில் மேலெழுந்து வருவதற்கும், ஞானமாய் தீர்மானங்களை எடுக்க வேண்டும். (பணம் திரட்டல் மற்றும் பணத்தைச் செலவு செய்தல் முறையாக நிகழ வேண்டும்) நீதிமொழிகள் 26: 13-15

- **வளங்கள் முறையாக பகிரப்பட வழிவகுக்க வேண்டும்**

இருக்கின்ற வளங்கள் முறையாக மக்கள் மத்தியில் பகிரப்படாமையின் நிமித்தமாக அநேகர் ஏழ்மை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஆகவே வளங்கள் சமமாகப் பகிரப்படுதல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

- **சமூக கட்டமைப்பை ஒழுக்க நெறிக்குட்படுத்த வேண்டும்**

முறையற்ற பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதால் சமூகத்தில் ஏழ்மை நிலை உருவாகலாம். (உதா : சூதாட்டம், குடிப்பழக்கம், வஞ்சகம், வீண்விரயம்) ஆகவே சிறந்த சமூகப் பழக்கங்களுக்கு ஈடுபாடுடையவர்களாக தன்னிடம் உள்ளவற்றை ஒழுங்காகக் கையாள்வதன் மூலம் வாழ்வை மேம்படுத்திக்கொள்ளலாம்.

- **உறுதியான வாழ்விற்கான கொள்கைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்**

தன்னிடமுள்ள திறமைகளை முறையாகக் கையாளாமையால் ஒருவர் ஏழ்மை நிலைக்கு தள்ளப்படலாம். தன்னிடமுள்ள திறமைகள் குறித்தும், தன் வாழ்வைக் குறித்தும் நேர் சிந்தனையுடைவர்களாகச் செயற்பட வேண்டும். சரீரத்தில் குறைபாடுகள் உள்ள அநேகர் திடமான நம்பிக்கையோடு செயற்பட்டு உறுதியான வாழ்வை வாழ்கின்றனர். அவ்வாறு செயற்படுவதன் மூலம் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முயல்வர். ஆகவே தங்கள் வாழ்வின் முக்கியத்துவத்தை மற்றும் செயற்பாட்டை இனங்கண்டு செயலாற்றுவதன் மூலம் ஏழ்மை நிலையிலிருந்து மீள வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

♦ ***வறுமையை ஒரு சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும்***

வறுமை நிலைக்கு ஆளாகியிருக்கும்போது, கண்ணீர் விடாமல் துன்பம் வேதனை மற்றும் பற்றாக்குறை மத்தியிலும் ஒவ்வொருவர் மத்தியிலும் தம்மால் இயன்றளவில் உதவிகளை நல்கி, மகிழ்வுடன் வாழ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

♦ ***ஆன்மீக ரீதியாக பெலனடைய வேண்டும்***

எதிர்காலத்தை நினைத்துக் கடினப்பட்டு சொத்துக்களைச் சேர்ப்பதைப் பார்க்கிலும் நாளாந்த உணவைக் குறித்து கரிசனையாக இருக்க வேண்டும். தன்னைக் குறித்தும் மற்றவரைக் குறித்தும் அக்கறை செலுத்தி, இறைவனிடம் வேண்டுதலை ஏறெடுக்க வேண்டும்.

இவ்வாறு நாம் வாழும் சமூகத்தில் வறுமை நிலைக்குத் தள்ளப்படல் மற்றும் அதனை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளைக் குறித்து அவதானம் செலுத்துவோம்.

## 2. ஆன்மீக வறுமை நிலை

உலகத்தில் சொத்துக்களைச் சேர்ப்பதற்கு மக்கள் மிகவும் கடினமாக செயற் படுகின்றார்கள் என்பது இரகசியமல்ல. ஆனாலும் இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது. ஆகவே நிலை வாழ்வை அடைய விண்ணரசிற்கான சொத்துக்களைச் சேர்க்க நாம் தயாராக வேண்டும். அன்றாட மனித வாழ்வின் தேவைகள் நாள் தோறும் அதிகரிப்பதால் சமூகத்தில் தன்னலம் அதிகரிக்கின்றது. இதனால் சமூகத்தில் வறுமை நிலை அதிகரிப்பதோடு வாழ்வின் கொள்கைகளிலும் வெறுமைநிலை ஏற்படும். இதனால் ஆன்மீக ரீதியாக ஏற்படும் வறுமை நிலையும் அதிகரிக்கும்.

இயேசு, சமூக வறுமை நிலையை குறித்தும், ஆன்மீக வறுமை நிலையைக் குறித்தும், அநேக படிப்பினைகளை வழங்கியுள்ளார். அவர் விண்ணகத்தில் ஒழிந்து போகாத செல்வம் மற்றும் உரிமையைப் பெற்றுக்கொள்ள மண்ணுலகில் செயற்பட வேண்டிய விதத்தைத் தெளிவாக கூறினார். இவ்வுலகில் பௌதீக ரீதியில் அனைத்தும் எமக்குக் கிட்டினாலும், விண்ணுலக சொத்துக்களை நாம் உரிமையாக்கிக்கொள்ள முடியாமல் போயின்; நாம் ஆன்மீக வரட்சியை அனுபவ ரீதியாகப் பெறுவோம் என்பதை இயேசு சுட்டிக்காட்டினார்.

## இயேசு கற்பித்த விடயங்கள்

### 1. லூக்கா 18: 18-30

**செல்வரான தலைவன்**

↓

நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள தான் என்ன செய்ய வேண்டுமென கேட்டான்

**லூக்கா 18: 18-19**

↓

கட்டளைகள் அனைத்தையும் கடைப்பிடித்து வருவதாக கூறினான்

**லூக்கா 18: 20-21**

↓

அனைத்துக் கட்டளைகளையும் கடைப்பிடித்தாலும் இன்னும் ஒன்று குறைபடுகிறது. அப்போது அவன் செய்ய வேண்டியது யாதெனில் அவனுக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுக்கும்படியாக இயேசு கட்டளையிட்டார்.

**லூக்கா 18: 22**

↓

செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதன் கடினத்தை விளக்குதல். இந்த இடத்தில் இயேசு கூறியது செல்வராவது ஏழைகளுக்கு உதவிசெய்யத் தடையாக அமையக் கூடாதென்பதாகும். அவ்வாறு செயற்படாமல் தன்னலமாக வாழ்வதை இயேசு நிராகரிக்கின்றார்.

**லூக்கா 18: 24-25**

↓

அப்படியானால் யாரால் மீட்புப் பெற முடியும்

**லூக்கா 18: 26-30**

↓

உலக சொத்துக்களைச் சேர்ப்பதிலிருந்து விலகி, தன்னிடமுள்ள சொத்துக்களை விட்டுவிட விரும்பும், விண்ணகச் சொத்துக்களை மாத்திரம் மனதில் கொள்ளும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் நிலை வாழ்வை உரிமையாக்கிக்கொள்வர் என்பது தெளிவாகும்.

## 2. லூக்கா 16: 19-31

**செல்வரும் இலாசரும்**

↓

செல்வர் இவ்வுலகில் வாழ்ந்த சுகபோக வாழ்வு; ஏழை இலாசர் - செல்வரின் மேசையிலிருந்து விழும் துணிக்கைகளிலிருந்து பசியைத் தீர்த்துக்கொள்ளல்

**லூக்கா 16: 19-21**

↓

இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து செல்வர். பாதாளத்தில் துன்புறல், மற்றும் ஏழை இலாசரு ஆபிரகாமின் மடியில் சந்தோஷமாய் இருத்தல்

**லூக்கா 16: 21-26**

↓

செல்வரின் வேண்டுதல் மற்றும் தற்கால மக்கள் இறைவசனத்தில் வாழ்வதன் முக்கியத்துவம்

**லூக்கா 16: 27-31**

தம்மிடமுள்ள பொருளாதார வசதியோடு ஒருவரையொருவர் போஷிக்க உதவிக்கரம் நீட்ட வேண்டும். மேலும், மகிழ்வுடனும் தியாக மனபான்மையோடும் தன்னிடமுள்ளவற்றைப் பகிர்ந்தளிக்க வேண்டும். ஏனெனில் உலகத்தில் சொத்துக்கள் அழிந்துபோவதோடு எங்கள் தற்காலிக வாழ்வும் நிறைவுறும். ஆகவே நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள இவ்வுலகத்தில் நாம் நடிவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

விண்ணரசிற்கு உரியவர்களாவதற்கு இவ்வுலகில் செல்வராகவோ அல்லது ஏழையாகவோ இருப்பது ஓர் தகுதியல்ல. இறையரசில் உண்மையான செல்வம் என்பது தன்னிடமுள்ள தன்னலம், பெருமை, மேட்டிமை, வைராக்கியம், கோபம், பொறாமை ஆகிய சிறப்பற்ற குணங்களிலிருந்து விடுதலையாவதாகும். அதேபோல் தன்னிடமுள்ள பொருளாதார செல்வத்தால் பெருமை கொள்ளாது அதனைத் தேவையுடையோரோடு பகிர்ந்துக்கொள்ளும் சிறப்பான குணங்கள் நிமித்தமாக விண்ணகத்தின் உரிமையுடையோராவோம்.

## 3. மத்தேயு 6: 19-21

**உண்மைச் செல்வம்**

**இவ்வுலகத்தில் நாம் சேர்க்க வேண்டியது என்ன?**

''மண்ணுலகத்தில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும். திருடரும் அதைக் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள். அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை. திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. உங்கள் செல்வம் எங்கே உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்''.

நாங்கள் வாழ்வது பொருட்களால் நிறைந்த, அவற்றுக்கு நாட்டமுடைய, அதனடிப்படையில் வாழ்க்கையைத் தக்க வைத்துக்கொள்ள முயற்சி செய்யும் ஓர் சமூகத்திலாகும். (உதார: கிறிஸ்து பிறப்பின் பின்னரான காலத்தில் நிரம்பி வழிகின்ற பொருள்களுக்கு ஏற்படும் ஈர்ப்பு காரணமாக முழு சமூகமும் அதில் மூழ்கியிருப்பதால் ஆன்மீக விடயங்கள் அனைத்தும் இல்லாது போகின்ற நிலை காணப்படும்.) அந்த ஈர்ப்பின் காரணமாக முழுச் சமூகமும் தனது காப்புறுதியாகக் கருதுவது செல்வத்தின் அடிப்படையில் ஈட்டும் இலாபகர மனநிலையிலாகும். (உதா: அதிஷ்ட இலாப சீட்டிழுப்பில் நாளாந்தம் அதிகரிக்கும் மில்லியன்களுக்கு ஈர்க்கப்படல்) இயேசு கூறியது யாதெனில் இவ்வாறான சொத்துக்கள் மேல் இருக்கும் ஈடுபாடு இறை விழுமியங்களுக்கு ஒத்துப்போகாதென்பதாகும். அப்போது எமது சிந்தனை, கொள்கை மற்றும் செயற்பாடுகள் இறைவனிடமிருந்து வேறுபட்டு அத்தோடு பாவத்திற்கும் தீங்கிழைப்போருக்கும் ஏதுவானதாக அமையும். (உதா: வாழ்வுக் காப்புறுதித் திட்டங்களால் நாம் செல்வத்திற்குக் கவரப்படும் மனநிலை) செல்வங்களுக்கு எமது வாழ்க்கையைப் பாதுகாக்க முடியாது என்பது தெளிவாகும். அதனை இறைவனால் மாத்திரமே பாதுகாத்துக்கொடுக்க முடியும்.

நவீன சமூகத்தில் வாழும் நாம் இறைவனின் காரியங்களைக் குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும். உலகத்தில் உள்ள வறுமையை உணர்கிறோம். அதனை மேற்கொள்ள செயலாற்றுவோம். ஆன்மீக வறுமையை புரிந்துகொள்வோம். முறையான சமூகமொன்றைக் கட்டியெழுப்ப விண்ணக செல்வத்திலே எங்கள் மனங்களை வைத்து வாழ்வை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வோம்.

**செயற்பாடு**

01. வறுமையில் வாழ்வோருக்காக நீங்கள் செய்யக்கூடிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடுங்கள்.

02. வறுமையை ஒழிக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டை முன்வைக்கவும்.

# 22 ஒடுக்கப்பட்டோரை மீட்போம்

**நாம் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் ஒடுக்கு முறைகளும் நிறைந்த உலகில் வாழ்கிறோம். அதனால் ஒடுக்கப்படும் நிலைக்கு நாம் முகம் கொடுக்கின்றோம். அதேபோல் பாவத்தினால் ஏற்படுகின்ற துன்பங்களி லிருந்து எங்களை மீட்கும் வகையில் கடவுள் செயற்பட்ட விதத்தை அறிந்து அதனை எமது வாழ்வுக்கு தொடர்புடையதாகக் காண்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.**

***விடுதலைப் பயணம் 2: 23-25, 3: 9, லூக்கா 4: 18, பரி. யோவான் 3: 16***

துன்பங்கள் நிறைந்த உலகில் வாழும் நாம், அந்த துன்பங்களுக்கு எவ்வளவு பங்காளிகளாய் இருந்துள்ளோம் என்பதனை நினைத்துப் பார்ப்பது நன்று. மனிதரால் ஏற்படுத்தப்படும் துன்பங்களுடன் சேர்ந்து இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் கடவுள் எமக்களித்த உலகம் மிகவும் பாரதூரமாக துஷ்பிரயோக நிலைக்குள்ளாகியுள்ளதென்பது தெளிவாகும். இந்த அனர்த்த நிலைமை காரணமாக ஏற்படுகின்ற கஷ்ட நஷ்டங்களும் மனிதரின் தவறால் ஏற்படுகின்றதெனலாம். கடவுள் எம்மிடம் எதிர்ப்பார்ப்பது அவருடைய விருப்பத்தோடு உலகை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதாகும்.

இருப்பினும் மனிதர்களின் அதிகார மோகம், பேராசை மற்றும் தன்னலம் போன்றவற்றினால் ஏற்படும் பாவங்களினால் மனிதன் சமூகத்தில் வாழும் போது மற்ற வரை ஒடுக்கவும், அவர்களை மிஞ்சிச் செல்லவும், அவர்களை துன்புறுத்துவதையும் நாம் காணலாம். இந்த நிலையைக் கடவுள் முற்றிலுமாக நிராகரித்ததை நாம் விடு தலைப் பயண நிகழ்வில் காண்கின்றோம். அடிமைத்தன நிலையிலிருந்த இஸ்ரயேல் மக்களை அதிலிருந்து மீட்பது கடவுளின் திட்டம் என்பதை நாம் இதன் மூலம் விளங்கிக்கொள்கிறோம்.

இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினால் பெருங் கஷ்டங்களை அனுபவித்தனர். அக்கஷ்டங்கள் மத்தியிலும் அவர்கள் கடவுளின் கருணையை வேண்டி நின்றனர். அவர்கள் இறைவனிடத்தே நம்பிக்கை வைத்தனர். ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து மீள கடவுளிடம் வேண்டி இன்னும் இன்னுமாக இறைவனிடம் கிட்டிச் சேர்ந்தனர்.

கடவுள் அவர்களுடைய கூக்குரல் மற்றும் வேண்டல்களுக்கு செவி சாய்த்தார்.

**இஸ்ரயேல் மக்களோ அடிமைத்தனத்தால் அழுது புலம்பினர்.**
**அடிமைத்தனத்தால் ஏற்பட்ட அவர்களது முறையீடு**
**கடவுளை நோக்கி எழும்பிற்று**
**விடுதலைப் பயணம் 2: 23**

**இப்போது, இதோ! இஸ்ரயேல் மக்களின்**
**அழுகுரல் என்னை எட்டியுள்ளது. மேலும்**
**எகிப்தியர் அவர்களுக்கு இழைக்கும்**
**கொடுமையையும் கண்டுள்ளேன்.**
**விடுதலைப் பயணம் 3:9**

கடவுள் இஸ்ரயேல் மக்களை எகிப்தில் வாழ்ந்த அடிமைத்தன வாழ்க்கையிலிருந்து மீட்டு, அதிலிருந்து வெளியில் கொண்டுவரும் வகையில் மோசே, ஆரோன் மற்றும் யோசுவா ஆகியோரின் வாழ்க்கையினூடாகச் செயலாற்றினார். அவர்கள் கடவுளின் வழிநடத்துதல் மற்றும் கருணை மூலம் செயற்பட்டு அனைத்து தடைகள் மத்தியிலும் சவால்களை வெற்றிகொண்டனர். இஸ்ரயேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்க அவர்கள் செயலாற்றினர்.

இஸ்ரயேல் மக்கள்

எகிப்தில் அடிமைகளாதல்

எண்ணிக்கையில் இஸ்ரயேலர்கள் அதிகரித்த படியால், எகிப்து இஸ்ரயேலருக்கு அடிமையாகிவிடும் என்ற பயத்தால், எகிப்தின் ஆட்சியாளர்கள் இஸ்ரயேல் மக்களை கடுமையான வேலைகளில் துன்புறுத்தினார்.

அடிமைகளாகக் கடவுளை நோக்கி கூக்குரலிடல்

அடிமைத்தன இஸ்ரயேல் மக்களுக்கு கடவுள் கருணை காட்டல் மீட்கும் பணிக்கு மோசே தலைமைத் துவம் வழங்க அழைக்கப்படல்

கடவுள் அவர்களது துயரத்தைக் கண்டார். கூக்குரலுக்குச் செவிமடுத்தார். வேண்டுதலுக்குப் பதிலளித்தார். அடிமைகளுக்கு நீதியை நிலைநாட்டினார்.

அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் செல்லல்.

தற்போதைய சமூகத்தில் சமூக அநீதி, வன்முறை, தீங்கிழைத்தல் ஆகியனவற்றை அதிகமாக நாம் காணலாம். அநேக மக்கள் ஒடுக்கப்பட்டும் தீங்கிற்கும் ஆளாகியிருந் தாலும் அவ்வாறு அவர்கள் தொடர்ந்தும் இருப்பது விருப்பத்திற்குரியதல்ல.

அதேபோல் நாம் இன்று வாழும் சமூகத்தில் அநேக விதமான அடிமைத்தனங் களுக்கு எம்மை இட்டுச்செல்லும் அதிகாரங்கள் சமூக கட்டமைப்புக்குள் இருப்பது தெளிவான விடயமாகும்.

- வறுமை நிலையை ஏற்படுத்தி மக்கள் ஒடுக்கப்படும் நிலையை உருவாக்குதல்
- உள்ளோர் மற்றும் இல்லாதோர் இடையிலான அதிகரித்த இடைவெளி மூலம் செல்வமுடையோராய் சிலர் இருத்தல்
- ஓர் நாடாக அதிக கடன் பெற்று, அந்நிய நாடுகளுக்கு அடிமையாதல்
- வியாபாரம் மற்றும் தொழிற்சாலை மூலம் உழைப்பை சூறையாடுவதன் நிமித் தமாக ஏற்படும் அடிமைத்தனம்
- வீட்டு வன்முறை காரணமாக குடும்ப அலகிற்குள் ஏற்படும் பாதிப்பு

மனிதருக்குக் கிடைக்க வேண்டிய சுதந்திரம், மனித உரிமைகள், சந்தோஷம் மற்றும் அன்பை பெற்றுக்கொள்ள எல்லா மனிதருக்கும் உரிமையுண்டு. கடவுள் மனிதரிடம் எதிர்ப்பார்க்கும் நியாயமும் அதுவே. அவ்வாறான நோக்கங்களைக் கொண்டவர்களாக மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் பாடுபட்ட அநேக தலைவர்களைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு அஹிம்சை வழியில் போராடிய மஹாத்மா காந்தி, கறுப்பு மற்றும் வெள்ளை நிற போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்ட மாட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா மற்றும் பிரதம பேராயர் டெஸ்மன் டுட்டு ஆகியோரை நாம் இனங்காணலாம்.

முழு சமூகத்தினதும் பாவத்தின் நிமித்தமாக துன்புறும் மக்களை விடுதலையாக்க இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். அவருடைய இவ்வுலக பணிகள் நாசரேத்து பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வாசித்துப் பார்ப்போம்**

**புனித. லூக்கா 4: 18**

அன்று யூத சமூகத்தின் நிலைப்பாட்டை மாற்ற இயேசு செயற்பட்ட விதம்
பாவிகள் என்று ஒதுக்கப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு வழி அமைத்தார். (சகேயு, பாவியான பெண்)
பெண்களையும் பிள்ளைகளையும் மதித்தார் - (பிள்ளைகளை ஆசீர்வதித்தல்)
பிற இனத்தாரை ஏற்றுகொண்டு செயற்பட்டார் - (சமாரியப் பெண்ணுக்கு

கருணை காட்டல்)
தவறான கருத்துக்களுக்கு அடிமையாகி குருடர்களாக வாழ்ந்தவர்களுக்குச் சரியான பாதையைக் காட்டினார் - சதுசேயர் மற்றும் பரிசேயரோடு உரையாடல்)
உள ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் துன்புற்ற மக்களுக்கு ஆறுதல் அளித்தார் - (தீய ஆவிகளை விரட்டல், இறந்தவர்களை உயிர்ப்பித்தல்)
நோயாளிகளுக்குத் தேவையான சரீர சுகத்தை அளித்தார் - முடக்குவாத நோயாளி, வலிப்பு நோயாளி, தொழு நோயாளிகளைக் குணமாக்கல்)
சட்டத்தை விட மனித நேயத்தை முன்வைத்துச் செயற்பட்டார் - (ஓய்வு நாளில் குணமாக்கல்)

தற்கால சமூகத்தில்
புறக்கணிக்கப்பட்டு வாழும்
சரீர நோயால் துன்புறும், பொருளாதார கஷ்டங்களுக்குள் வாழும்
அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகும்
உள பாதிப்பால் துயருறும்
பலவித அனர்த்தங்களினால் பாதிப்புறும்
அதிருப்தியில் வாழும்
ஆன்மீக சுகம் இல்லாமல் வாழும்
ஓய்வின்றிப் பணியாற்றும்
தவறான சிந்தனைகளில் வேரூன்றி இருக்கும்
அநீதிக்கும் அசாதாரணத்திற்கும் உள்ளாகும்
சூறையாடலுக்கு உள்ளாகும்
துன்புறுத்தப்பட்டு ஒடுக்குமுறைக்கு ஆளாகும்
துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும்
அநேக மக்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஒடுக்கப்படுகின்றனர்.

இயேசு இவ்வுலகப் பணியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலாக இருந்ததைப் போல, கிறிஸ்தவர்களாகிய நாமும் செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பாடத்தில் நாம் கற்றுக்கொண்ட விடயங்களுள் இயேசு இவ்வுலகிற்கு ஆற்றிய சேவை புலப்படுகிறது. அவ்வகையில் கடவுளின் அன்பு வரலாற்றிலிருந்து உலக நன்மைக்காகச் செயற்பட்டதை யோவான் கூறும் பின்வரும் பகுதியினூடாகக் காணலாம்

**தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்**

**யோவான் 3:16**

''கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்'' எனும் பதத்தில் அவருடைய அன்பு எவ்வித பாரபட்சமும் இல்லாமல் மனிதருக்குக் கிடைக்கும் என்பது தெளிவாகும். ஆகவே அநீதி மற்றும் ஒடுக்குமுறைக்குள்ளானவர்களை அதிலிருந்து மீட்கும் வகையில் கருணை காட்ட நாமும் செயற்படுவோம்.

**செயற்பாடு**

01. *தற்கால சமூகத்தில் மக்கள் ஒடுக்கப்படுகின்ற நிலைகள் 5ஐ குறிப்பிடுக.*

02. *அன்று சமூகத்திலிருந்த அநீதி நிலைக்கு எதிராக இயேசு செயற்பட்ட 3 சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.*

# 23 சமூக நீதி

**ஆமோஸ் இறைவாக்கினர் அன்றைய சமூக நிலைமைக்குள் நீதி மற்றும் நியாயத்திற்காகக் குரல் கொடுத்த விதமும் அதனை எவ்வாறு எங்கள் வாழ்க்கைக்குத் தொடர்புபடுத்தலாம் என்பதைக் கற்பது இப் பாடத்தின் நோக்கமாகும்.**

***ஆமோஸ் 4ம், 5ம் அதிகாரங்கள்***

## ஆமோஸின் பணியின் பின்னணி

ஆமோஸ் இறைவாக்கினர் இஸ்ரயேல் தேசத்தில் வட இராச்சியத்தில் இறைவாக்குப் பணி ஆற்றினார்.

ஆமோஸ் தெற்குப் பகுதியிலே அமைந்துள்ள யூதா தேசத்தின் தெக்கோவா கிராமத்தில் வாழ்ந்தவர். அவர் ஆடுகளை மேய்ப்பவராகவும் அத்தி மர வளர்ப்பினை மேற்கொண்டவராகவும் இருந்தார். அவர் தொழிலடைப்படையில் இறைவாக்கினராக இல்லாவிட்டாலும், இறைவாக்குப் பணியைச் சிறப்பாய் நிறைவேற்றிய ஒருவராக விளங்கினார்.

கி.மு 08ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இவர் இறைவாக்குப் பணியில் ஈடுபட்டார். அக்காலத்தில் வட இராச்சியத்தை இரண்டாம் எரோபவாம் அரசன் ஆண்டு வந்தான்.

இக்காலகட்டத்தில் தேசம் ஒருவகையில் பொருளாதார வளர்ச்சியைக் கண்டிருந்தது. வட இராச்சியம் சர்வதேச வியாபாரமையமாகக் காணப்பட்டதால் மேலோட்டமாகப் பார்க்கும்போது பாரிய பொருளாதார அபிவிருத்தியைக் காட்டியது. இஸ்ரயேல் அரசன் மற்றும் நாட்டின் பிரபுக்கள் சிறப்பாக தலைநகராகிய சமாரியாவிலிருந்து பிரபுக்கள் மற்றைய நாடுகளிலுள்ள பேரரசர்களோடு அநேக பொருளாதார ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார்கள். இதனால் இவர்களுக்கு பாரிய இலாப நன்மைகள் கிட்டியதோடு; வெளிநாட்டரசர்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்ற; ஏழைகளிடமிருந்து அதிகளவிலான வரி வசூலித்தனர், இதனால் செல்வந்த உத்தியோகஸ்தர்கள் மற்றும் பிரபுக்கள் மிகவும் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்ததோடு ஏழைகள் மிகவும் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டனர், ஒடுக்கப்பட்டு சூறையாடப்பட்டனர். ஏழை மக்களைக் குறித்து செல்வந்த வியா பாரிகள் கொண்டிருந்த மனப்பான்மையை ஆமோஸ் பின்வருமாறு விபரிக்கிறார்;

'ஏழையைப் பணத்திற்கும், வறியவரைச் செருப்பு சோடியின் விலைக்கும் வாங்கலாம்.அதாவது வறிய ஒருவரின் வாழ்வு ஒரு செருப்புச் சோடியின் பெறுமதியை விட அதிகம் இல்லை என அவர்கள் கருதினார்கள். இவ்வாறு அவர்கள் மனித பெறுமதியை மிகவும் கீழ்மட்டத்திற்கு இழுத்துச் சென்றனர். சமாரி யாவைத் தலைநகராகக் கொண்ட செல்வந்தர் மிகவும் சுகபோக நகர்ப்புற வாழ்வை வாழ்ந்தார்கள்.

இருப்பினும் நகருக்கு வெளியே வாழ்ந்த விவசாயம், மேய்ப்புப் தொழில் மற்றும் ஏனைய கூலித்தொழிலில் ஈடுபட்டோருக்கும் நகர்ப்புற செல்வந்தர்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்பட்டது. இது சூறையாடல் மற்றும் ஏழைகளின் சொத்துக்களை அபகரித்தமையால் ஏற்பட்ட விளைவாகும்.



ஆமோஸ் கண்ட தூக்கு நூல் குண்டின் காட்சி

வாசித்துப் பார்ப்போம்

**ஆமோஸ் 4, 5 அதிகாரங்கள்**

### அநீதி அநியாயத்திற்கு எதிராக

ஆமோஸ் இறைவாக்கினர் இறைவாக்குகள் சிலவற்றை நாம் இங்கு பார்ப்போம். (ஆமோஸ் 4,5 அதிகாரங்கள்) சமாரியாவில் வாழ்ந்த செல்வந்தர்களின் மனைவிகளை ''பாசான் பசுக்கள்'' / ''கொழுத்த பசுக்கள்'' என்று ஆமோஸ் இறைவாக்கினர் குறிப்பிட்டார். அவர்கள் ஏழைகளை ஒடுக்கி, வறியோரை நசுக்கியதால் இவ்வாறு ஆமோஸ் அவர்களை அழைத்தார். அதனால் இறைவனின் தீர்ப்புக்கு அவர்கள் ஆளாவார்கள் என்பதையும் குறிப்பிட்டார்.

அவ்வாறே செல்வந்தர்கள், மக்களுக்கு நீதி நியாயம் கிடைக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அதற்கு மாறாக செயற்பட்டனர். அவர்கள் இலஞ்சம் (கையூட்டு) கொடுத்தும் இலஞ்சம் பெற்றும் ஏழைகளுக்கு நீதி நியாயம் கிடைப்பதைத் தடுத்தனர். ஆமோஸ் (5:12).

### மனம் மாறிட மக்களுக்கு அழைப்பு

மக்கள் மனம் மாறி கடவுளைத் தேடி வருவதற்கு பல வழிகளில் கடவுள் செயற்பட்டாலும், மக்கள் அதை விளங்கி நடந்துகொள்ளத் தவறிவிட்டார்கள் என்று ஆமோஸ் அறிவித்தார்.

இறைவன் மழையைத் தடுத்து பஞ்சத்தை ஏற்படுத்தியும் அவர்கள் இறைவன் பக்கமாகத் திரும்பவில்லை (ஆமோஸ் 4:6,7).

இவ்வாறானவர்களுக்கு எதிராக கடவுள் கொடுக்கும் தண்டனையை ஆமோஸ் அறிவித்ததுடன், மெய்யான மனம் திரும்புதலினூடு இறைவன் பக்கமாகத் திரும்பும் படி மக்களுக்கு அழைப்புவிடுத்தார் (ஆமோஸ் 4:8, 5:6).

### படைக்கும் பலிகள் அர்த்தமற்றதென்பது

இஸ்ரயேல் மக்கள் அநீதியான வாழ்க்கை வாழ்ந்துகொண்டே சமயக் காரியங் களிலும் ஈடுபட்டனர். அவர்கள் பத்தில் ஒரு பங்கைச் செலுத்தி, புளித்த மாவின் அப்பத்தைப் படைத்தார்கள் (ஆமோஸ் 4:4) பெயேல்செபா, பெத்தேல், கில்கால் ஆகிய இடங்களில் அநேக சமய ஸ்தலங்களுக்குச் சென்ற இவர்களுக்கு ஆமோஸின் அறிவுரையாவது 'அவ்வாறு செல்வதனால் பயனில்லை' என்பதாகும். ஆமோஸ் 4:5). அதனால் பயனேதுமில்லை என்பது மாத்திரமல்ல கடவுள் அவர்களுடைய விழாக்களை வெறுக்கின்றார் என்றும் எரிபலிகளையும், தானியப் படையல்களையும் ஏற்க மாட்டார் என்றும் கூறுகிறார். (ஆமோஸ் 5: 21, 22)

### அனைத்தும் வல்ல கடவுளின் தீர்ப்பு

ஆமோஸ் தன் இறைவாக்குரைப்பில் கடவுளின் தீர்ப்பைக் குறித்து குறிப்பிடு கையில் கடவுள் 'அனைத்தும் வல்ல கடவுள்' என்று அறிமுகப்படுத்துகிறார். இதனால் கடவுளின் வல்லமை மற்றும் மகிமை விபரிக்கப்படுகிறது. அவர் அநீதி மற்றும் அநியாயமாகச் செயற்படுவோரை தீர்ப்புக்குள்ளாக்குவதோடு ஏழைகள் சார்பாக நின்று அவர்களைக் காக்கும் வல்லமையான கடவுள் என்பதை மேலும் விபரிக்கின்றார்.

## ஆமோஸின் செய்தியை எங்கள் வாழ்க்கைக்கு உரியதாக்குவோம்

### நீதியைக் குறித்து அறிதல் மற்றும் கரிசனையாய் இருத்தல்

நாங்கள் வாழும் உலகில் அநீதி அரசாளும் சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. தொழில் துறையைக் குறித்து சற்று அவதானிப்போம். உதாரணமாக ஒரே தகைமையுள்ள இருவர் தொழிலுக்காக விண்ணப்பிக்கும்போது செல்வாக்கு உடையவருக்கு அந்த

தொழில் வாய்ப்பைப் பெற முடியும். இதனால் தகுதி உடைய மற்றவருக்கு அநீதி இழைக்கப்படுகிறது. மத மற்றும் இன ரீதியான அநீதிகளையும் நாம் அடிக்கடி காணலாம். இதன்போது கிறிஸ்தவர் ஒருவரின் கடப்பாடு யாதெனில் இவ்வாறான சந்தர்ப் பங்களைக் குறித்து அவதானமாகவும் அறிவுடையவர்களாகவும் இருக்க வேண்டும். ஆமோஸ் இறைவாக்கினர் அறிவிக்கும் ''நீதி வெள்ளமெனப் பொங்கி வரவும், நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வரவும்'' (ஆமோஸ் 5:24) என்பது அனைத்து சமூகங்களின் செயற்பாடுகளுக்கும் முக்கியமாகும்.

## கடவுளும் நீதியும்

நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் யாதெனில் கடவுள் அனைவரதும் தந்தையாகிய கடவுள் என்பதால் அவரே நீதியை நிலைநாட்ட இடைப்படுவார் என்பதாகும். கடவுளாகிய இயேசு நாசரேத்து ஊருக்கு வந்து ஆற்றிய முதல் அருளுரையில் இவ்விடயங்கள் மிகவும் தெளிவாகின்றன. (லூக்கா 4: 18-19)

## செயற்பாடுகளில் ஈடுபடல்

இவ்வாறான நேரங்களில் முதலாவது செயற்பாடாவது வழிபாட்டில் கடவுளுக்கு இவ்விடயங்களை முன் வைத்தலாகும். நாம் வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும்போது கடவுள் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்ட எங்களுக்குப் பல வழிகளைக் காண்பிப்பார். குற்றங்களைச் சுட்டிக்காட்டல், பத்திரிகைகளுக்கு எழுதுதல், சமூக அநீதிகளுக்குச் எதிர்ப்பு தெரிவித்தல் ஆகியன அவ்வாறான செயற்பாடுகளில் சிலவாகும். இதற்கு எமது நிலைமை முக்கியமானதல்ல. முக்கியமானது எதுவென்றால் எமது வழிபாடு கடவுளின் விருப்பத்திற்கு அமைய நடைமுறைப் படுத்தப்படுவதாகும். அப்போது வழிபாடு கடவுளுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

## தனிப்பட்ட அர்ப்பணிப்பு

இறையரசை நாம் இலக்காகக் கொள்ள வேண்டும் என இயேசு எமக்கு கற்பித்துள்ளார். நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவது இவ்விலக்கின் முக்கிய பங்காகும். இந்த இலக்கை நோக்கி நாம் செல்லும்போது கடவுளில் தங்கி, தனது காலத்தையும் சிரமத்தையும் ஈந்து, அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டுமென்பது அவர் எதிர்பார்க்கும் விடயமாகும். நாமும் தற்கால சமூகத்திலே அவ்வாறாக அர்ப்பணிப்புடன் செயற்பட முயல்வோம்.

**செயற்பாடு**

01. ஆமோஸ் 4ம் 5ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சமூக அநீதிகளைக் குறித்து தகவல்களைச் சேகரியுங்கள்

# 24 தூயவாழ்வை நோக்கி

**மகா பரிசுத்தம் என்பது கடவுளுக்கு மாத்திரம் சொந்தமான விடய மாகும். பரிசுத்தத்தைக் குறித்தும் அது எமது வாழ்விற்கு எவ்வாறு பொருத்தமாக அமையும் என்பதைக் குறித்தும் இப்பாடத்தில் ஆராய்வோம்.**

***எசாயா* 6:1-8**

## எசாயாவின் அழைப்பின் பின்னணி

எசாயா 6ம் அதிகாரத்தின் பின்னணி, கி.மு எட்டாம் நூற்றாண்டில் இஸ்ரயேலின் தெற்கு இராச்சிய காலமாகும். அசிரிய பேரரசால் தெற்கில் யூதாவிற்கு பலத்த அரசியல் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. அதன் பின் சிரியாவினாலும் இஸ்ரயேல் இராச்சியத்தாலும் படையெடுக்கும் அச்சுறுத்தல் காணப்பட்டது. எசாயாவின் அழைப்பு இவ்வாறான பின்னணியில் இறைவாக்குரைக்கும் பணிக்காகக் கொடுக்கப்பட்ட ஓர் அழைப்பாகும். கடவுளுக்குக் கீழ்ப்படியாமை உட்பட அவரிலே நம்பிக்கை கொள்ளாமை மக்களது மனங்கள் மாசுறுவதற்கான காரணங்களாயின. அந்நிலையில் எசாயா கடவுள் எதிர்பார்க்கும் 'தூய்மை' குறித்து இறைவாக்குரைத்தார்.

## எசாயாவின் அழைப்பு

எசாயா ஆலயத்தில் இருக்கும் போதே இறை அழைப்பினைப் பெறுகிறார். அவர் கண்ட காட்சியில் கடவுள் ஆலயத்திற்குள் அனைத்துப் பாவங்களையும் மன்னித்து இறைவாக்குப் பணிக்காக அவரை அர்ப்பணிக்கின்றார்.

எசாயா கண்ட காட்சியில் கடவுள் ஆலயத்தின் உயரமான அரியணையில் அமர்ந் திருந்தார். அவரைச் சுற்றியிருந்த சேராபீன்கள் அவருடைய தூயதன்மையை மூன்று முறை சத்தமிட்டுப் பாடின. இதனால் வெளிப்படுவது யாதெனில் தூய்மை என்பது கடவுளுக்கு மாத்திரம் உரித்துடையதென்பதாகும்.

அவ்வேளையில் எசாயா, தான் ஒரு 'பாவியான மனிதன்' என்றும் 'தூய்மையற்ற உதடுகளை' கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் என்றும் கூறுகிறார். இதன் மூலம் கடவுளின் தூய்மைக்கு முன்னால் தன்னுடைய பாவ இயல்பு ஆழமாக உணர்த்தப்படுவதைக் காணலாம். (எசாயா 6: 5)

இந்த காட்சியில் அடுத்ததாக நெருப்புப் பொறி எசாயாவின் வாயைத் தொட்டு அவருடைய பாவத்தை மன்னித்து, அவருடைய குற்றப்பழி அவரை விட்டு நீங்குவ தாகக் கூறப்படுகிறது. அதாவது கடவுள் தூய்மையற்ற பாவியாகிய மனிதரை புறம் தள்ளாது ஏற்கிறார். இவ்வாறு கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படும் மனிதர் மன்னிப்பைப் பெறுவது மாத்திரமல்ல அதனை விட மேலதிகமான கொடை ஒன்றையும் கடவு ளிடமிருந்து பெறுவர். அவ்வாறு நடப்பது அவர் தமது பாவங்களைக் குறித்து உண் மையான புரிந்துணர்வுடன் வந்தால் மாத்திரமேயாகும். அதாவது தூயகடவுள் மனிதருக்கு அருளும் தூய்மையான வாழ்க்கையே அக் கொடையாகும்.

## தூய வாழ்வைப் பெற முடியுமா?

எசாயாவுக்கு கடவுள் கொடுக்கும் தூய்மை, கடவுளுடைய இறைவாக் குரைக்கும் பணியை மக்களிடம் கொண்டு செல்பவராக இருப்பதற்காகும். அதாவது கடவுளின் குரலை மக்களுக்குத் தெரியப்படுத்தலாகும். அது கடினமான காரியமும் பாரதூரமானதுமாகும். இருப்பினும் அதற்காகக் கடவுள் அவரில் தூய்மையை உறுதிப்படுத்தினார். அவர் அவருடைய பாவங்களைக் குறித்தும் மக்களின் தூய்மையின்மையைக் குறித்தும், நல்ல புரிந்துணர்வோடு கடவுளின் விருப்பத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார்.

எமக்குத் தேவையான தூய்மை எதுவாக இருக்க வேண்டும்? எசாயாவுக்கு அந்த தூய்மை கிடைப்பது கடவுளுடைய பணியை மனிதர் மத்தியிலே நிறை வேற்றவேயாகும். ''இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்'' (எசாயா 6:8) எனும் பதில் மூலம் இது உறுதிப் படுத்தப்படுகிறது. எங்களுடைய பாவ நிலை பாரதூரமானதாக இருந்தால் தூயவராக நாங்கள் விண்ணப்பம் செய்ய முடியுமா? ஆம் முடியும்.

இருப்பினும் நாம் அந்த தூய்மையை தூயவராம் கடவுளிடம் வேண்டுவது எம்மைப் பெருமை பாராட்டிக்கொள்ளும் நோக்கத்திலாகவிருந்தால் அந்தப் தூய்மை எமக்குக் கிட்டாது. மேலும் அது தானாகக் கிடைக்கும் அல்லது கிறிஸ்தவர்களாக இருக் கின்றபடியால் கிடைக்கப்பெறும் விடயமல்ல. மாறாக அந்தப் தூய்மையை நாம் பாவிகள் என உணர்வதன் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அப்போது நாம் எம்முடையவர்களல்ல கடவுளுக்கு மாத்திரமே சொந்தமாவோம். இவ்வாறு நாம் கடவுளுக்குச் சொந்தமானவர்களாகி வழி தவறாமல் சமூகத்திலே செயலாற்றுவோம்.

அவ்வாறு தாவீது அரசனும் கடவுளின் மகா தூய்மைக்கு முன்னால் தன் பாவத்தின் பாரதூரத்தைப் புரிந்துக்கொண்டான். கடவுள் தொடர்ந்தும் தம்மோடு இல்லை என்பது பத்சபாள் தொடர்புடைய பாவத்திற்குப் பின்னதாக உணர்ந்தான். மேலும் தன் அரசாட்சியின் வல்லமையால் எந்தப் பயனும் இல்லையென்பதை உணர்ந்து கொண்டான். அவ்வாறு சாத்தானின் சோதனைகளுக்கு அவன் மிகவும் கட்டுண்டவனாக இருக்கிறான் என்பதை உணர்ந்தான். அவனுக்கு கடவுளிடமிருந்து

'தூயதோர் உள்ளம்' தேவைப்பட்டதற்கான காரணம் அதுவாகும். மற்றைய எல்லாக் காரியங்களையும் விட கடவுளோடு உண்மையான உறவுக்குள் செல்வதற்கு அவனை வருத்தும் ஓர் தேவை இருந்தது. எனவே அவன் கடவுளை நோக்கி இவ்வாறு வேண்டுகிறான்.

'என் தீவினை முற்றிலும் நீங்கும் படி என்னைக் கழுவியருளும்' (திருப்பாடல்கள் 51:2)

'கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்' (திருப்பாடல்கள் 51:10)

கடவுளிடம் தூய வாழ்வைப் பெறும் மனிதர் எல்லா நேரங்களிலும் சமூக நலனுக்காகச் செயலாற்றுவர். அவர் கடவுளுக்கு விருப்பமானதைச் செய்பவராக மாறுவர். இது எசாயாவுக்கு நடந்தது போல யாருக்கும் நடக்கக்கூடிய ஓர் முக்கியமான செயற்பாடாகும். அதை அனுபவிக்க கடவுள் எமக்கு துணை புரிவாராக.

அவ்வாறான வாழ்க்கையை வாழ தூய ஆவியானவரின் வழிநடத்தலில் பலனடைவோம்.

**செயற்பாடு**

01. எசாயாவின் அழைப்பிற்குள் தூய்மை குறித்து நீர் கற்றுக்கொண்ட சில விடயங்களை குறிப்பிடுக.

02. பாடசாலையில் உம்மை சோதனைக்குட்படுத்துவதும், தூய வாழ்வுக்கு தடையாக இருக்கின்றதுமான 5 விடயங்களைக் குறிப்பிடுக.

# 25 புத்தெழுச்சியின் உதயம்

**சமாதானம் மற்றும் சுபீட்சம் குறித்த விவிலிய கற்கைகளை அறிந்து சமாதானமான உலகைக் கட்டியெழுப்புதல் நடைமுறைக்கு ஏற்ற விடயமென்பதைக் கண்டு அதற்காக ஓர் வழிகாட்டலைப் பெற்றுக்கொள்ளல் இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.**

***மீக்கா 4ம் அதிகாரம்***

### மீக்கா இறைவாக்கினரின் பணியின் பின்னணி

எசாயா போன்றே மீக்காவும் தரிசனம் மூலமாக கடவுளால் இறைவாக்குரைக்க அழைக்கப்பட்டவராவார். மேலும் அவரை சாதாரண மக்களோடு வாழ்ந்த ஒருவரா கவும் காண்கிறோம். மீக்கா மற்றும் எசாயா ஆகியோர் சமகால இறைவாக்கினர்களாவர். இருப்பினும் இறைவாக்குரைப்புப் பணி தெற்கு யூதா இராச்சியத்திலே இவரால் மேற்கொள்ளப்பட்டது. சமூக நீதி குறித்துத் திடமான கருத்துக்களை முன்வைத்த இவர் யூத இராச்சியத்தின் தலைவர்களைக் கண்டிக்கின்றார். அவர்களுடைய அநீதி, கடவுள் பக்தி இல்லாத நடத்தைகள் மற்றும் ஆளுகை நிமித்தமாக சீயோன் (எருசலேம்) சிதைவுகள் நிறைந்த இடமாகவிருக்கும் எனக் கூறுகிறார்.

இந்த கருத்துக்களைக் கூறும் அவர், சமாதானம் மற்றும் சமாதான நிலை குறித்து சிறப்பான கருத்துக்கள் சிலவற்றையும் முன்வைக்கின்றார். நாம் இப்போது அவற்றை கருத்திற் கொள்வோம்.

## கடவுள் ஏற்படுத்துகின்ற சமாதான யுகம்

மீக்கா 4:1ல் ‘இறுதி நாட்கள்’ என்ற பதத்தை உபயோகிப்பதன் மூலம் கடவுள் குறிப்பிட்ட ஒரு காலத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதாகக் கூறுகிறார். அது நிலைநாட்டப்படுவது சீயோன் மலையில் அதாவது எருசலேமிலாகும். அவர் கூறுவது, அனைத்து வாத விவாதங்கள், வைராக்கிய குரோதங்களுக்கு மேலாக நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்படும் என்பதாகும்.

மீக்கா 4:3ல் கடவுளுடைய மக்களிடத்தே இருக்கக்கூடிய சமாதானமான வாழ்க்கை முறை தெளிவாக விளங்குகிறது. அங்கே ‘தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், ஈட்டிகளைக் கருக்கரி வாள்களாகவும் அடித்துக்கொள்வார்கள்’

எனக் கூறப்படுகிறது. இதனால் யுத்த மனநிலை முற்றிலுமாக இல்லாது போகும் அடையாளம் காணப்படுகிறது. அதாவது மக்கள் தங்கள் விவசாய வாழ்க்கை முறைக்கு முன்னுரிமை கொடுத்து சமாதானமான வாழ்க்கை வாழும் காலம் உதயமாகும் என்பதாகும்.

சமாதானம் உறுதிப்படுத்தப்படும்போது மக்கள் மனதில் பயம் நீங்கிவிடும். (மீக்கா 4:4 அ) சமாதானத்தின் பெறுபேறு சுபீட்சமாகும். 'அவர்களுள் ஒவ்வொருவரும் தம் திராட்சைத் தோட்டத்தின் நடுவிலும், அத்தி மரத்தின் அடியிலும் அமர்ந்திருப்பர்' என குறிப்பிடப்படுகிறது. (மீக்கா 4:4 ஆ) திராட்சை மற்றும் அத்தி மரமென மீக்கா குறிப்பிடுவது சுபீட்சத்தின் அடையாளங்களாகும். இந்த சுபீட்சம் கடவுளிடமிருந்து வருவதாகும். விசேடமாக திராட்சைக் கொடி யூத மக்களுக்கு பொருளாதார மற்றும் விவசாய ரீதியாக மட்டுமல்ல ஆன்மீக ரீதியாகவும் மிக முக்கியமானதொன்றாகும்.

பழைய ஏற்பாட்டில் 'திராட்சைத் தோட்டம்' உவமானம் பரவலாக உபயோ கிக்கப்பட்டுள்ளது. அங்கு திராட்சைத் தோட்டம் இஸ்ரயேல் மக்களைக் குறிக் கிறது. அதன் மூலமாக கடவுள் கடவுளுடைய மக்கள் மீது வைக்கும் அன்பு வெளிக் காட்டப்படுகிறது. மீக்கா தீர்க்கதரிசன நூலில் திராட்சைத் தோட்டங்கள் உரிமையாக்கல் தொடர்பில் குறிப்பிடப்படுவது பொருளாதார செழிப்பு மாத்திரமல்ல. அதன் மூலம் கடவுளின் அன்பில் சமாதானத்தை அனுபவிக்கும் சாந்தியுடைய வாழ்க்கை முறையும் வலியுறுத்தப்படுகிறது.

### சமாதானம், ஷாலோம்

எபிரேய மொழியில் 'ஷாலோம்' எனும் பதத்திற்கு அமைய நீதியும் நியாயமும் உள்ள பின்னணியிலேயே சமாதானம் நிலைநாட்டப்படும். நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படாமல், உண்மையான சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது என்பது பழைய ஏற்பாட்டில் காணப்படும் கருத்தாகும்.

### சமாதானம் ஏற்படுத்துகிறவர்கள் கடவுளுடைய பிள்ளைகள்

சமாதானம் ஏற்படுத்துதல் மற்றும் சமாதானமான வாழ்க்கை முறையை நடாத்துவது கிறிஸ்தவ வாழ்வின் ஓர் அடிப்படைக் குணாதிசயமாகும். சமாதானத்தைப் பெறுவது மாத்திரமல்ல சமாதானமாய் இருத்தல், சமாதானத்தை ஏற்படுத்த ஒத்து ழைப்பு வழங்கல் என்பது கிறிஸ்தவர்களிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது தனிப்பட்ட ரீதியில் பெற்றுக்கொள்ளும் சமாதானமல்ல. இதன் மூலமாக முழு சமூகத்திலும், தேசத்திலும் சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியுமென்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. இவ்வாறு செய்வோருக்கு கடவுளின் பிள்ளைகள் என்ற உரிமை கிட்டுவதாக இதை மங்கள வாக்கியத்தின் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

## சமாதானம் ஏற்படுத்துவதற்கு நாம் இடர்பட வேண்டியதன் சவால்

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்திருந்தாலும் மனங்கள் ஒப்புரவான நிலையிலில்லை. கடவுள் எமக்கிடையே மனங்களை ஒப்புரவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றார். நாங்கள் அதற்காக முன்வந்து செயலாற்ற வேண்டும்.

ஒப்புரவிற்காக இடர்பட்டு செயலாற்றல் எமக்கு தற்காலத்தில் இருக்கின்ற சவால் மிகுந்த அழைப்பாகும். நாம் அநேகமான நேரங்களில் எங்களுடைய தனிப் பட்ட மற்றும் குடும்ப காரியங்களுக்கு மாத்திரம் எம்மை வரையறுத்துக்கொண்டு செயற்படுகிறோம். சில வேளைகளில் அதனைக் கடந்து நாம் செயற்பட்டாலும் சவால்கள் வரும்போது அவ்வாறான விடயங்களிலிருந்து நாம் விலகிவிடும் சந்தர்ப்பங்கள் உண்டு. இவ்வாறு நடப்பது நன்றல்ல. வீட்டில், பாடசாலையில் மற்றும் சமூகத்தில் இயன்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒப்புரவாக்கும் கடவுளின் பணியில் ஈடுபட வேண்டும். தென்னாபிரிக்காவின் மைக்கல் லெப்ஸ்லி அவர்கள் இதற்கு சிறந்த உதாரணமாக விளங்குகின்றார்.

## கௌ. அருட்பணி. மைக்கல் லெப்ஸ்லி



தென்னாபிரிக்காவில் வெள்ளை மற்றும் கறுப்பு நிறத்தினருக்கிடையே உறவுகளை வலு வூட்டுவது அவரின் முக்கிய கடமையாகும். இச்செயற்பாடுகளின்போது அவருடைய இரண்டு கைகளையும் அவர் முற்றாக இழந்தார். இருப்பினும் அவர் இன்னும் தைரியமாக தன் பணியைத் தொடர்ந்து வருகிறார். எமது நாட்டிலும், சமாதானம் தொடர்பில் கௌரவ பேராயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க மற்றும் கௌரவ. அருட்பணியாளர் சோமசிறி கே. பெரேரா ஆகியோர் கடந்த காலங்களில் ஆற்றிய சேவை அளப்பரியது.

சமாதான வாழ்விற்குத் திடமான சாட்சியாக விளங்கி கடவுளின் துணையோடு சமூகத்தில் செயலாற்ற நீங்களும் முயற்சிக்க வேண்டியது முக்கியமாகும். அதேபோல் சமாதானத்திற்காக இடைச் செயற்பாட்டில் ஈடுபடும் போது அதன் சவால்களுக்கு சிறப்பாய் முகம் கொடுத்து கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவோம்.

**செயற்பாடு**

01. சமாதானத்தைக் குறித்து மீக்கா தீர்க்கதரிசி 4ம் அதிகாரத்தில் குறிப்பிடும் கருத்துக்களைப் பட்டியலிடுக.

02. கௌரவ அருட்பணியாளர் மைக்கல் லெப்ஸ்லி அவர்களது பணியின் முக்கிய விடயங்களைத் தொகுத்து எழுதுக.